**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி**

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**TIRUNELVELI**

**தொலைநெறி தொடர்கல்வி இயக்கம்**

**DIRECTORATE DISTANCE & CONTINUING EDUCATION**

**TIRUNELVELI**

# தகவல் தொடர்பியல்

**முதுகலை முதலாமாண்டு**

**இரண்டாம் பருவம்**

**2024**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி – 627 012**

# தகவல் தொடர்பியல்

## அலகு 1

தொடர்பு தொடர்பியல் - விளக்கம் மக்கள் தகவல் தொடர்பு அறிமுகம் - தனிமனித தகவல் தொடர்பு பொதுத் தகவல் தொடர்பு, மக்கள் தகவலியல், கூறுகள், தருநர், செய்தி, கருவி, பெறுநர், விளைவு விளக்கங்கள் - இரைச்சல் எதிருட்டு தகவலியல் கருவிகளின் பாகுபாடுகள் - மரபு வழிச் சாதனங்கள், அச்சுச் சாதனங்கள் , மின்னணுச் சாதனங்கள்

## அலகு 2

ஊடகத் தொடர்பியல் கோட்பாடுகள் பொதுவான விளக்கங்கள் நால்வகை கோட்பாடுகள் - ஆட்சி ஆதிக்கக் கோட்பாடு - கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாடு, சமுதாயப் பொறுப்புணர்வுக் கொள்கை - சோவியத் பொதுவுடைமைக் கொள்கை தேசிய வளர்ச்சியில் பத்திரிகைகளின் பங்கு, கல்வி, வேளாண்மை, இலக்கியம், நலம், குடும்பக் கட்டுப்பாடு முதலியன.

## அலகு 3

பொதுமக்கள் கருத்து, புதிய கருத்துப் பரவுதல், கருத்தாக்கத் தலைவர்கள், பொதுமக்கள் கருத்தும் தகவல் தொடர்பு சாதனங்களும்- தகவல் தொடர்பியல் மாதிரிகள் - ஒரு படிநிலைப் பரவல் - கொள்கை இருபடி நிலை பரவல் கொள்கை - பல படிநிலைப் பரவல் கொள்கை - லாஸ்வெல் மாதிரி - வீவர் மாதிரி - வெஸ்ட்லி மெக்லீன் மாதிரி - வெள்ளித்

தோட்டாக் கோட்பாடு

**அலகு** 4

வானொலி- வரலாறு- இந்திய வானொலி வரலாற்றில் சில மைல் கற்கள், இந்திய வானொலி வளர்ச்சி, தனித்தன்மைகள், கோட்பாடுகள் - வானொலி நிகழ்ச்சிகள் - வானொலி ஒலிபரப்பு - பன்னாட்டு ஒலிபரப்பு செய்தி ஒலிபரப்பு, கல்வி ஒலிபரப்பு, கிராம ஒலிபரப்பு - பேச்சுரைகள் வானொலியும் தன்னாட்சியும்- இன்றைய வானொலி

**அலகு** 5

தொலைக்காட்சி: வரலாறு- இந்தியாவில் தொலைக்காட்சி செயற்கைக்கோள் வழி ஒளிபரப்பு- சைட் கல்வி ஒளிபரப்பு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் செய்தி ஒளிபரப்பு தொலைக்காட்சி படங்கள் தொடர்கள் திரைப்படத் தோற்றம் திரைப்பட வகைகள் விளம்பரங்கள் போன்றன குழந்தை படங்கள் செய்தி படங்கள்- செய்தி விளக்கப்படங்கள்- தணிக்கைத்துறை- தேசியப் படச்சுருள் காப்பகம் தேசிய திரைப்பட மேம்பாட்டு நிறுவனம்

# அலகு 1

**தொடர்பு, தொடர்பியல் விளக்கம்**

இரண்டு மனிதர்களுக்கு இடையேயுண்டாகும் சிந்தனைத் தூண்டலுக்கான சக்தியே “தொடர்பு” எனப்படும். இது பற்றிய வரலாறும் கோட்பாடும் தொடர்பியல் எனப்படும், சிந்தனையைத் தூண்டும் தகவல் பற்றிய பரிமாற்றம் தகவல் தொடர்பியல் எனப்படும்.

தகவல் தொடர்பை ஆங்கிலத்தில் கம்யூனிகேசன் என்பர், இது 'கம்யூனிசு' என்ற இலத்தீன் சொல்லை ஆதாரமாகக் கொண்டு உண்டான ஆங்கிலச் சொல்லாகும். கம்யூனிசு என்ற இலத்தீன் சொல்லுக்குப் பொதுவாக்கு, பகிர்ந்துகொள், செயல்விளைவு, பயன், செய்தியைப் பரப்பு என்று பல பொருளுண்டு, இதனால் இச்சொல்லைப் 'பல பொருள் ஒரு 'சொல்' எனக் கொள்ளலாம்.

1. டெரி எ.வெல்ட்ன் அல்லது எச். டபிள்பு. எல்லிங்ஸ் ஓர்த்

தொடர்பு என்பது நெகிழும் தன்மை வாய்ந்த ஒரு கருத்துப் படிவம் ஆகும். பொதுவாக இரண்டு இடங்களை ஒருவகை ஆற்றல் இணைக்குமானால் அங்குத் தொடர்பு ஏற்படுகிறது. சான்றாகக் குளத்தில் ஓரிடத்தில் நிகழும் சலனம். குளத்தின் மற்றோர் இடத்திற்கும் அலை அலையாகச் சென்றடையும் போது தொடர்பு நிகழ்கிறது.

2. ஜெர்கன் ரூஸ்ச்சு

உயிரிகள் வாழும் தொடர்பற்ற பகுதிகளை ஒன்றோடு ஒன்று இணைக்கும் வழிமுறையே தொடர்பு ஆகும்.

3. லீ.ஓ தேயர்

இயல் உருத் தோற்றத்தளத்தில் (Perspective) தனியொருவர் மற்றொருவருக்குக் கொடுக்கும் தூண்டலில் நேர்முக மாகவோ,மறைமுகமாகவோ ஏதேனும் ஒரு பொருள் அல்லது உட்பொருள் தோன்றும்போது தொடர்பு நிகழ்கிறது.

4. ஜியார்ஜ் எ. மில்லர்

ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குத் தகவல் செல்லும் போது தொடர்பு ஏற்படுகிறது.

தொடர்பு என்பது ஒரு செயல்முறையாகும். கருத்துள்ள செய்தியை ஒருவரிடமிருந்து மற்றவரிடம் பரப்புவ தாகும். இத்தகவல் தொடர்பு முறை மனிதன் தோன்றிய கால முதல் இருந்து வருகிறது. ஒரு சமுதாயம் வளர அடிப் படைத் தேவையாகக் கருதப்படுவது தொடர்பு ஆகும். ஆதிகாலத்து மனிதன் உடலசைவுகள், குறியீடுகள், பின்னர்ச் சொற்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி மற்ற வர்களுடன் தொடர்பு கொண்டான். அறிவியல் வளர்ச்சியின் காரணமாக இன்று தொடர்புத் துறையில் பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு குறியீட்டிற்கும், உடலசைவிற்கும் தொடர்புத் துறையில் சிறப்பான இடம் உண்டு.

**தொடர்பியல் விளக்கம்**

தொடர்பியல் என்னும் சொல்லிற்குப் 'பொதுமை யாக்குதல்' என்பது பொருளாகும். அஃதாவது பெறுநருடைய மனத்தில் அனுப்புநரின் கருத்து அல்லது கருத்துப் படிவத்தை உருவாக்குவதாகும். ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழலில் செய்தி அனுப்புநருக்கும் பெறுநருக்கும் இடையே நிகழும் செய்திப் பரிமாற்றச் செயல்முறையே தொடர்பியல் எனப்படும். செய்திகள், எண்ணங்கள், உணர்ச்சிகள், திறமைகள் போன்றவற்றைக் குறியீடு, பேச்சு, எழுத்து, படங்கள், எண்கள், வரைபடம் போன்றவற்றின் வழியாகப் பரப்புவதும் தொடர்பியலின்பாற்படும். தொடர்பியல்

என்னும் சொல் உருவக அமர்வையும், குறியீட்டு அமர்வையும் கொண்டு நிகழும் செய்திப் பரிமாற்றத்தின் பின்னலைக் குறிக்கிறது. குறியீடுகள் உடலசைவாகவோ, படங்களாகவோ, சொற்களாகவோ, எளிதில் உருவேற்கின்ற நடன, நாட்டிய உடலசைவுகளாகவோ, இவற்றைப்போல நடத்தையைத் தூண்டக்கூடிய வேறு ஏதேனும் ஒன்றாகவோ இருக்கலாம். குறிப்பிட்ட சூழல் இல்லாதபொழுது. இக்குறியீடுகளுக்குத் தூண்டுதல் தன்மை இல்லை. மறந்து போன நினைவுகளை மறுபடியும் ஒருவரிடம் நினைவிற்குக் கொண்டு வரும் கவனத்தை ஈர்க்கும் செயல் முறையும் தொடர்பியல் எனப்படும். மற்றவர்களின் நடத்தை கனைத் தூண்டுதல்களின் மூலமாக மாற்றியமைக்கும் சக்தியும் தொடர்பியல் எனப்படும். ஏதேனும் ஓர் ஊடகத்தின் வழியாக நடைபெறும் கருத்துப் பரிமாற்றமும் தொடர்பியலாகும்.

அனுப்புநர், செய்திகள், அனுப்புமுறை, பெறுநருக்குப் பொருள் புரிதல் என்னும் நான்கு தொடர்ச்சியான கூறுகளை உள்ளடக்கியதே தொடர்பியலாகும். தொடர்பியலுடன் தொடர்பு கொண்டவர்களுடைய நடத்தையை மாற்றியமைத்தலே தொடர்பியலின் முதல் நோக்கமாகும்.

தகவல் தொடர்பு:-

தகவல் கொடுப்பது அல்லது உணர்ச்சிகளை அல்லது யோசனையை ஒருவருக்கு தெரியப்படுத்துபவர்கள், (மக்மில்லன் ஆங்கில அகராதி பி-277)

தொடர்பியல் என்பது ஒரு மனிதன் தன்னுடைய எண்ணம், கருத்து, உணர்ச்சிகள், ஒருவரின் கருத்துக்குத் தொடர்புடைய அல்லது எதிர்விதமான சிந்தனைகளைத் தனக்கு முன்னுள்ள அல்லது தொலைவிலுள்ள நபருக்குத் தெரிவிப்பதாகும். தொடர்பானது கண், காது, வாய், உடல் இவைகளின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது, இந்நான்கு புலனும் தொடர்பிய லுக்கான

உடற்கருவிகள் எனலாம். அதாவது இயற்கைக் கருவிகள். தொலைப்பேசி உள்ளிட்டவை செயற்கைக் கருவிகளாகும்

**மக்கள் தகவல் தொடர்பியல்**

புலன்களின் தொடர்பினால் ஒருவரிடம் இருந்து மற்றவருக்குப் பரிமாறப்படுகின்றது. தகவல் தொடர்பிற்கு கருவிகள் மட்டுமே இன்றியமையாததாக அமைந்தாலும், உடல்தான் மிக முக்கியமான தொடர்புக் கருவியாகக் கொள்ளப்படும், இதற்கு உடலறி உணர்வுகள் இன்றியமையாத தாகும்.

உடலறியும் உணர்வுகளே முக்கியம் என்பது எப்படி எனில் கண்ணற்ற மனிதன், காது கேளாதவர், வாய்பேச முடியாதவர்கள் என்ற நிலையிலுள்ள மனிதர்களுக்கும் தகவல் தொடர்பென்பது அவசியமான ஒன்று. இந்த உறுப்புகளற்றவர்களும் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய தகவலைப் பெறவோ, அல்லது மற்றவருக்குத் தகவலை அனுப்பவோ வேண்டுமானால் உடல் உணர்வுகளின் மூலம் தகவலைத் தெரிவித்துத் தொடர்பைப் பெறுகின்றனர். மகிழ்ச்சிக்குச் சிரிப்பு, முகமலர்ச்சி, சோகத்திற்கு (துன்பம்) அழுகை என்பன மூலம் தகவலைப் பரிமாற்றுகின்றனர். இதைத் தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியலின் வழியும் அறியலாம்.

**தகவல் தொடர்பியலின் இலக்கணம்**

எப்பொழுது ஒரு நபர் தகவல்களையும், உடன்பாட்டையும் மற்றொரு நபருக்கு மாற்றுகிறாரோ அப்பொழுது தகவல் தொடர்பானது ஏற்படுகின்றது. தகவல் தொடர்பானது, வார்த்தைகள், எழுத்துக்கள், செய்கைகள் அல்லது சின்னங்கள் வழியாக ஏற்படுத்தப்படலாம். தகவல் தொடர்பின் சில இலக்கணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. தொடர்பியல் பற்றி வெ. கிருட்டிணசாமி

"தொடர்பியல் என்னும் சொல்லிற்குப் 'பொதுமையாக்குதல்' என்பது பொருளாகும். அஃதாவது பெறுநருடைய மனதில் அனுப்புநரின் கருத்து அல்லது கருத்துப்படிவத்தை உருவாக்குவ தாகும். ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழலில் செய்தி அனுப்புநருக்கும் பெறுநருக்கும் இடையே நிகழும் செய்திப் பரிமாற்றச் செயல்முறையே தொடர்பியல் எனப்படும். செய்திகள், எண்ணங்கள், உணர்ச்சிகள், திறமைகள் போன்றவற்றைக் குறியீடு,பேச்சு, எழுத்து, படங்கள், எண்கள், வரைபடம் போன்றவற்றின் வழியாகப் பரப்புவதும் தொடர்பியலின்பாற்படும்.

மறந்து போன நினைவுகளை மறுபடியும் ஒருவரிடம் நினைவிற்குக் கொண்டு வரும் கவனத்தை ஈர்க்கும் செயல் முறையும் தொடர்பியல் எனப்படும். மற்றவர்களின் நடத்தைகளும் தொடர்பியல் எனப்படும். மற்றவர்களின் நடத்தைகளைத் தூண்டுதல்களின் மூலமாக மாற்றியமைக்கும் சக்தியும் தொடர்பியல் எனப்படும். ஏதேனும் ஓர் ஊடகத்தின் வழியாக நடைபெறும் கருத்துப் பரிமாற்றமும் தொடர்பியலாகும். அனுப்புநர், செய்திகள், அனுப்புமுறை, பெறுநருக்குப் பொருள் புரிதல் என்னும் நான்கு தொடர்ச்சியான கூறுகளை உள்ளடக்கியதே தொடர்பியலாகும்" என்று குறிப்பிடுகிறார்.

2. தியோ ஹெய்மான் கூறும் இலக்கணம் (Definition of Theo Hrimann):

ஒரு நபரிடம் இருந்து மற்றொருவருக்குத் தகவலையும், உடன்பாட்டையும் கடந்து செல்லச் செய்யும் நடைமுறையே தகவல் தொடர்பு ஆகும் என்று தியோ ஹெய்மான் கூறுகிறார்.

3.ஹெச்.கூன்ட்ஸ் மற்றும் ஓ டொனேல் கூறும் இலக்கணம் (Definition of H. Koontz & O'Donnell):

ஹெச். கூன்ட்ஸ் மற்றும் ஓ டொனேலின் கருத்துப்படி, அமைப்பினுடைய ஒரு உறுப்பினர், விளக்கத்தையும் உடன்பாட்டையும் மற்றொரு நபரோடு பகிர்ந்துகொள்ளும் ஒரு வழியே தகவல் தொடர்பு ஆகும்.

4. சி.ஜி. பிரவுன் கூறும் இலக்கணம் (Definition of C.G. Brown):

நம்பிக்கையை வெளிப்படுத்துகிறதோ இல்லையோ, தகவல் ஒரு நபரிடம் இருந்து மற்றொரு நபருக்கு மாற்றப்பட்டாலே அது தகவல் தொடர்பு ஆகும். ஆயினும், மாற்றப்பட்ட தகவல் அதைப் பெறப்பட்டவரால் புரிந்துகொள்ளும் வகையில் இருக்க வேண்டும்.

5. கீத் மற்றும் குபிலினி கூறும் இலக்கணம் (Definition of Keith and Kubellini):

தகவல் தொடர்பு என்பது தகவல்கள், வார்த்தைகள், சமிக்ஞைகள் அல்லது அடையாளங்கள் போன்றவற்றை அவற்றின் வள மூலத்திலிருந்து தகவல் பெறுபவருக்கு மாற்றிக் கொடுத்தலைக் குறிக்கிறது என்று கீத்தும், குபிலினியும் கூறுகின்றனர்.

மேற்கூறப்பட்ட இலக்கணங்களிலிருந்து தகவல் தொடர்பு என்பது அவ்வாறு அனுப்பப்பட்ட அல்லது பெறப்பட்ட தகவல்களை அனுப்புதலை அல்லது பெறுதலை மட்டு மல்லாமல் தகவலை முறையாகப் புரிந்துகொள்ளுதல், பின் அவற்றின் மீது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய ஓர் சொற்றொடர் என்று நாம் முடிவுகொள்ளலாம்.

**மக்கள் தொடர்பியல் - விளக்கம்**

மக்கள் தொடர்பு என்பதை ஒரு நிறுவனத்திற்கும் அதனுடன் தொடர்புடைய மக்களுக்குமிடையே ஒருவருக் கொருவர் புரிந்துகொள்ளும் உணர்வை உருவாக்கி அதனைச் சிறப்பாகப் பராமரிக்கும் நோக்கத்துடன், மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட இடைவிடாத முயற்சியே மக்கள் தொடர்பு நடவடிக்கை என வரையறுக்கலாம்.

**மக்கள் தொடர்பு - அறிஞர்களின் கருத்துகள்**

மக்கள் தொடர்பு என்புதனைப் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வகையில் வரையறை செய்துள்ளனர். 'செயல்முறை மக்கள் தொடர்பு என்ற ஒப்பற்ற நூலை உலகிற்குத் தந்த 'சாம் பிளாக்' என்ற அறிஞர், உண்மை, அறிவு, முழுமையான தகவல் ஆகியவற்றின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளும் உணர்வை இருதரப்புக்கு இடையே உருவாக்குவதே மக்கள் தொடர்பியலின் அடிப்படை நோக்கமாகும்' என்று கூறியள்ளார்.

**தொடர்பியல் கூறுகள்**

விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவன் ஒருவன் தன் தந்தைக்குப் பணம் கேட்டுக் கடிதம் எழுதுகிறான். உறையில் முகவரி எழுதாமல் அஞ்சல் பெட்டியில் போட்டு விடுகிறான். கடிதம் தந்தைக்குச் சென்று சேருமா? சேராது. இங்கு மாணவன் தகவலாளன், தந்தை பெறுநர் ஆவார். கடிதம் கருவி அல்லது ஊடகம் ஆகும். எழுத்துக்கள் தடம் ஆகும்.

செய்தித் தொடர்பில் 1. செய்திகளை அனுப்புதல், 2. குறிப்படுத்துதல் (Encode). 3. பெறுநர் குறிமீட்டல் (Decode). 4. செய்தி அனுப்பும் கருவிகள் (Channel), தொடர்புக் கருவிகள் (Media) போன்றவை முதன்மை இடம்பெற்றுள்ளன. செய்திப் பரிமாற்றத்தில் திறனும் துல்லியமும் மிக மிகத் தேவையாகும். செய்தித் தொடர்பு என்பது அடுத்தவனின் மனநிலையையும் நடத்தையையும் பாதிக்கச் செய்யும் செயல் முறையாகும். செய்தித் தொடர்பில் சில சமயங்களில் எதிர்மறை விளைவு களும் ஏற்படுவது உண்டு. சான்றாக ஒரு குழந்தையிடம் அதைத் தொடாதே என்றால் அதைத் தொடும். சில நேரங்களில் பெறுநர் தகவலாளியின் நோக்கத்திற்கும் கருத்திற்கும் எதிராகச் செயல்படுவதும் உண்டு. தகவலாளனின் எதிர்பார்ப்பிற்கு மாறான விளைவுகளும் ஏற்படலாம். செய்தித் தொடர்பில் தகவலாளியின் நோக்கம் தலையாய இடம் பெறும். அர்த்தங்களை உருவாக்கலும் பரிமாறிக் கொள்ளலும் செய்தித் தொடர்பு ஆகும். தகவலாளி மக்களோடு தொடர்பு கொண்டு அர்த்தங்களை உருவாக்குகிறார்.

தகவல் தொடர்பின் அடிப்படைகள்

ஹெரால்ட் லாஸ்வெல் (Herald Losswell : 1948) என்பார் தகவல் தொடர்பின் அடிப்படைகளாகப் பின்வருவனவற்றைக் கருதுகிறார்.

1. சொல்வது யார்(who says?)


2. எத்தன மூலம் சொல்கிறார்? (in what channael?)

3. எப்படி சொல்கிறார்? (how?)

4. யாருக்குச் சொல்கிறார்? (to whom?)

5. அதன் விளைவு என்ன? (with what effect?)

SMCR மாதிரி




- அனுப்புநர் Sender
- செய்தி Message
- ஊடகம் Channel
- பெறுநர்Receiver

**தகவலாளர்**

செயல் முறையைச் செயல்படுத்துபவர் தகவலாளர் எனப்படுவார். இவரை அனுப்புநர் என்றும் குறிப்பிடுவர். செய்திகளை அனுப்புகின்ற முழுமுதற்கர்த்தா ஆவார். பெறுநர் செய்தியைச் சரியான பொருளில் பெற உதவி செய்வார். ஊரக வளர்ச்சித் துறையில் இவர் சிற்றூர் வளர்ச்சி அதிகாரியாகவோ பயிற்சி நிலையத்தின் முதல்வராகவோ, ஊராட்சி ஒன்றிய ஆணையராகவோ, கிராம அதிகாரியாகவே இருக்கலாம்.

இவர் தாம் முழுமையாகத் தெளிவாக அறிந்த செய்தியை வரையறுக்கப்பட்ட குறிக்கோள்களுடன்பெறுதருக்கு அனுப்புவார். பெறுநரின் தேவைகள் ஈடுபாடுகள், திறமைகள்,விருப்பு வெறுப்புகள் போன்றவற்றை அறிந்து அதற்கு ஏற்பப்பெயனுள்ள

சிறப்பான செய்திகளை அனுப்புவார். அவருடைய ஈடுபாட்டினால் தன்னுடைய தொழிலின் நிறைகுறைகளை அறிந்து செய்தியை ஒழுங்குபடுத்தி அனுப்புவார்.

**அனுப்புநர்**

செய்தியை அனுப்புமுன் 1. பெறுபவர் நலன். 2. சொல்லப் படும் செய்தி மக்களுக்குப் பயன்படும் வகை, 3. தொடர்பின் விளைவுகளும் மதிப்பீடுகளும், 4. தொடர்பு முறை, 5. தொடர்புக் கருவிகள், 6. தொடர்புத் திறனை அதிகரிக்கும் முறை போன்ற வற்றை நன்றாக அறிந்திருக்க வேண்டும்.

தகவலாளர் ஒரு செய்தியை அனுப்புமுன் கீழ்க்காணும் முறைகளில் தன்னைத் தயார் செய்துகொள்ள வேண்டும். 1. தொடர்புத் திட்டம் தயாரித்திருக்க வேண்டும். 2. தொடர்புக்குத் தேவையான கருவிகளைத் தேர்ந்தெடுத்து அதை இயக்கத் தெரிந்திருக்க வேண்டும். அக்கருவிகளைப் பற்றிய அடிப்படை அறிவையாவது பெற்றிருக்கவேண்டும் எனவே அவர் தன்னிடமுள்ள திறமையை மதிப்பிட்டுக் கொள்ள வேண்டும். 3. தொடர்பினால் ஏற்படும் பயன்களையும் விளைவு களையும் மதிப்பிடத் திட்டம் வைத்திருக்க வேண்டும் அல்லது ஆதாரங்களைச் சேகரித்திருக்க வேண்டும்.4. தேவையான. துல்லியமான, சரியான செய்திகளைத் தேர்ந்தெடுக்கத் தெரித் திருக்க வேண்டும். தம்மைப் பற்றியே சரியான கருத்தும். மதிப்பீடும் கொண்டு செய்தியை அனுப்ப வேண்டும். 5. செய்தி களை வெளிப்படுத்த வாய்மொழி அல்லது எழுத்தில் நிபுணராக இருப்பது நல்லது. 6. செய்தியைப் பெறுநரின் இயல்புகளைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். T. குறிப்பிட்ட நோக்கத்தோடு பேசவேண்டும். 8. பேசும்பொருள் பற்றிய நன்றாக அறிந்திருக்க.

**பெறுநர்**

தொடர்பாளருக்கும் பெறுநருக்கும் இடையே உள்ள உறவுகள் வருமாறு. 1. அறிமுகம் : தகவல் தொடர்பினால் பெறுதரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் ஆகின்றனர். அதனால் அவர்களது -2 உறவுகள் வலுப்படுகின்றன. 2. அனுபவித்தல்

: மற்றொருவத ஆளுமையிற் புகுந்து கற்பனையாக மற்றொருவரின் அநுபவத்தை அனுபவிக்கின்றனர். மற்றவர்களின் ஆளுமை. குணபுலன்களை ஊடுறுவிப் பார்க்கும் தன்மை ஏற்படுகிறது. 3. மீள் தொடர்பு: ஒவ்வொரு தொடர்பும் மீள் தொடர்புடன் சார்ந்துள்ளது. அவை இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. தொடர்பாளர் பெறுநரின் மீள்மொழியைத் தன்னுடைய செயலைக் கணிப்பதற்கு ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்த முறையில் மூலத்திற்குப் பெறுநரின் மறுமொழி மீள் தொடர்பாக தே உள்ளது. 4. இணைப்பு : தகவலாளரும் பெறுநரும் காலத்தாலும் ஆ இடத்தாலும், பிரிக்கப்பட்டாலும், அவர்கள் தொடர்பால்இணைக் கப்பட்டவர்கள் ஆவர். 5. நம்பகம்: தகவலாளருடன் கொள்ளும் ள், தொடர்பால், செய்தியை, மூலத்தைப் பெறுநர் நம்புகிறார். 6. இடைவினைகள் : அவர்கள் ஒருவருக்கொருவர் செய்திகளைப் பரிமாறிக் கொள்வதால், தெளிவு பெறுகின்றனர். 7. ஓரினம்: அனுப்புநரும் பெறுநரும் நம்பிக்கைகள், மனநிலைகள், கல்வி சமூக மதிப்பு போன்றவற்றில் ஒரே நிலையில் இருந்தால் டு தொடர்பு சிறப்பாக நடைபெறும் . அவர்கள் பல நிலையினராக இருப்பின் விரக்தி, திறமையின்மை, பயனற்ற தொடர்பு போன்றவை ஏற்படும்.

தகவல் தொடர்பின் விளைவுகள்

த்து வை தூண்டல் உணர்வே மக்கள் தகவல் தொடர்பிற்கு அடிப்படையாகும். மற்றவர்களைச் சிந்திக்கவும், செயல்படவும் வைப்பதற்குத் தகவல்கள் சில விளைவுகளை ஏற்படுத்தவேண்டும். இல்லையேல் அவை விழலுக்கு இறைத்த நீர் போலாகும். ஏற்பவரிடத்தில் தகவல்கள் எத்தகைய விளைவுகளைத் தூண்டியிருக்கின்றன என்று கண்டுகொள்வது, தகவல் தொடர்புகள் வெற்றியடையத் துணைபுரியும் என்று நம்பலாம்.

கம்

அல்).

தகவல்கள் மக்களிடையே ஐந்து வகையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

1.பயன்பாடு விளைவு

2. செல்வாக்கு விளைவு

3. வலிவூட்டும் விளைவு (மீண்டும் வலுவூட்டல் விளைவு

4. அழகியல் உணர்வைச் செறிவூட்டும் விளைவு

5. மாற்ற விளைவு

1.பயன்படு விளைவு

வாழ்க்கையில் தோன்றும் பல்வேறு சிக்கல்களுக்கும் பலரும் பலவழிகளில் தீர்வு காண்கின்றனர். நோயாளி மருத்துவரை நாடுகிறார்; பாடத்தில் தோன்றும் ஐயங்களைக் களைவதற்கு மாணவர், ஆசிரியரை நாடுகிறார்; ஆய்வில் எழும் சிக்கல்களைக் களைவதற்கும் தன் முடிவுகளுக்குச் சான்றாதாரங்களைத் தருவதற்கும் ஆய்வாளர் பல்வேறு நூல்களின் உதவியை நாடுகிறார். இவர்கள் தமக்கு ஏற்படும் சிக்கல்களைத் தமக்குக் கிடைக்கும் தகவல்களின் பயனாகக் களைகின்றனர். எனவே இவை பயன்படு விளைவுகள் எனப்படுகின்றன.

2.செல்வாக்கு விளைவு

சமுதாயத்தைச் சார்ந்த பல்வேறு பிரிவினரும் தாம் சார்ந்துள்ள சமுதாயப் பிரிவின் மன்றக் கூட்டம், மாநாடு, பற்றிய செய்திகள் ஆகியவை நாளிதழ்களிலோ,

வானொலியிலோ. தொலைக்காட்சியிலோ இடம் பெற்றால். தாம் சார்ந்துள்ள சமுதாயப் பிரிவு, மக்கள் கவனத்தை ஈர்க்கும் அளவுக்குச் செல்வாக்கு உடையது என்று உணர்கின்றனர். இதுவே, செல்வாக்கு விளைவு எனப்படுகிறது.

3. வலிவூட்டும் விளைவு

மக்கள் கொண்ட கருத்துக்களுள் ஒன்றற்கொன்று மாறுபாடும் வேறுபாடும் உள்ளன. ஆனால் தகவல் தொடர்புச் சாதனங்கள் தம் கருத்துக்கு ஆதரவாக இருந்தால் அக்கருத்து வலிமை பெறுகிறது என்று ஒவ்வொருவரும் எண்ணுகின்றனர். மக்கள் தம் மனதில் கொண்ட கருத்துக்களை மேலும் மேலும் வலிவூட்டுவதற்குப் பின்வருவன காரணங்களாக அமைகின்றன:

1. தேர்ந்தெடுக்கும் தன்மை
2. சமுதாயக் கட்டுப்பாடுகள்
3. விவாதங்கள்

1.தேர்ந்தெடுக்கும் தன்மை

மக்கள் சமுதாயத்தில் ஒவ்வொரு பிரிவினரும் தத்தமக்கு ஆதரவாக உள்ள தகவல்களையே பெரிதும் விரும்புகின்றனர். ஒவ்வொரு இதழுக்கும் குறிப்பிட்ட சில வாசகர்கள் உள்ளனர். தம் கருத்துக்கு ஆதரவாக அவ்விதழ் உள்ளதால் வாசகர்கள் அதை விரும்பிப் போற்றுகின்றனர்; அவ்விதழ் கிடைக்கும் இடம் தேடிச் சென்று வாங்குகின்றனர். திடீரென்று இவ்விதழ் தன்கருத்தினை அல்லது போக்கினை மாற்றிக் கொண்டால், அவ்வாசகரும் தன் கருத்தினை மாற்றிக்கொள்வார் என்று சொல்லமுடியாது. முதலில் அவர் அவ்விதழைப் படிப்பதை நிறுத்திக் கொள்வார். தமிழ் நோக்கையும் போக்கையும் அவ்வப்பொழுது மாற்றிக் கொள்ளும் இதழ்கள் நலிந்து வருவதையும், பல மடிந்துவிட்டதையும் நான் நடைமுறையில் காணலாம். ஒரு புத்தகக் கடையில் பல்வேறு இதழ்கள் இருந்தாலும் அவற்றுள் தமக்கு

ஆதரவானதையே ஒருவர் கருத்துக்கு தேர்ந்தெடுப்பார். இவ்வாது தம் தகவல் தொடர்புச் தகவல்களையும். போற்றுவதால், அவர் கொண்ட கருத்து மேலும் மேலும் வலிமை சாதனங்களையும் பெறுகிறது.

2.சமுதாயக் கட்டுப்பாடு

இந்தியாவில் எண்ணிறந்த சமுதாயக் குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு குழுவிற்கும் சிவ கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அக்கட்டுப்பாட்டுகளை மீறி நடப்பவர்களைச் சில சமுதாயங்கள் சாதியிலிருந்து தள்ளிவைக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிக்கிளிதன். இவ்வாது சமுதாயக்கட்டுப்பாடு போற்றப்படுவதால் அச்சமுதானம் காலம்காலமாக நம்பிவரும் கருத்துக்களை மாற்றுவதற்குப் பெரிதும் போராட வேண்டியுள்ளது.(எ.டு: குடும்பக்கட்டுப்பாடுத் திட்டத்தைச் சில குழுவினர் ஏற்க மறுத்தல் வழிபாட்டிடங்களில் உயிர்களைப் பலியிடக்கூடாது என்ற சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தல்.

3. விவாதங்கள்

ஒரு கருத்தினை ஏற்க வேண்டுமென்றால், அதனுடைய நன்மை, தீமைகளை விவாதங்கள் மூலமாகவே எடுத்துவைக்க முடியும் என்ற நம்பிக்கை கிரேக்கத் தத்துவஞானியாகிய அரிஸ்டாடில் காலந்தொட்டு வந்துள்ளது. தாம் கொண்ட கருத்தினை ஆணித்தரமாக நிறுவுவதற்கு எல்லோரும் விரும்புகின்றனர். தம் கருத்துக்கு முரணான புதிய கருத்தை எவரும் வரவேற்பதில்லை. பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரேயே அதனை ஏற்றுக்கொள்கின்றனர். இவ்வாறு தாம் கொண்ட கருத்தினை, நன்மையை விவாதங்கள் எடுத்துக் கூறுவதால் புதிய கருத்துக்களைப் புகுத்துவதற்கு மிகுந்த முயற்சி எடுக்கவேண்டியுள்ளது.

கடிதங்கள், இலக்கியக் கூட்டங்கள், கருத்தரங்குகள், நூல் மதிப்புகர இலக்கியச் சங்கமம் போன்ற இலக்கிய ஆர்வச் செய்திகள் வெளியாகின்றன. தொலைக் காட்சியிலும் இலக்கிய ஆர்வம் உள்ளவர்களுக்கு 'முத்தமிழ் மன்றம்' 'நூல் நயம்'

போன்ற நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. இதனால் இலக்கிய உணர்வுகள் மேலும் மேலும் மெருகூட்டப்படுகின்றன.

5.மாற்ற விளைவு

வாழ்க்கைக் கவலைகளை மறக்கவும், தீவிரப் பணியிலிருந்து சற்றே ஓய்வெடுக்கவும் (relax), தகவல் தொடர்புச் சாதனங்களை மக்கள் நாடுகின்றனர். இதனை 'மாற்ற விளைவு' என்பர். நாளிதழ்களில் இடம்பெறும் சிரிப்புப்பகுதியும், படக்கதைகளும் (comic strips), தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் 'ஒளியும் ஒலியும்' 'காமெடி ஸ்பெஷல்' போன்ற நிகழ்ச்சிகளும் இதற்குச் சான்றுகளாகும்.

4. அழகியல் உணர்வைச் செறிவூட்டும் விளைவு

இலக்கியத்திற்காகவே தகவல்தொடர்புச் சாதனங்களை நாடுபவர்களும் உள்ளனர். சான்றாக, இலக்கிய ஆர்வம் கொண்டோர் குறிப்பிட்ட நாளில் தினமணி நாளிதழ் வாங்குவதைப் பார்க்கலாம். இதில் இலக்கிய விமர்சனக் கட்டுரைகள், வாசகர் கடிதங்கள், இலக்கியக் கூட்டங்கள், கருத்தரங்குகள், நூல் மதிப்புகர இலக்கியச் சங்கமம் போன்ற இலக்கிய ஆர்வச் செய்திகள் வெளியாகின்றன. தொலைக் காட்சியிலும் இலக்கிய ஆர்வம் உள்ளவர்களுக்கு 'முத்தமிழ் மன்றம்' 'நூல் நயம்' போன்ற நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. இதனால் இலக்கிய உணர்வுகள் மேலும் மேலும் மெருகூட்டப்படுகின்றன.

5.மாற்ற விளைவு

வாழ்க்கைக் கவலைகளை மறக்கவும், தீவிரப் பணியிலிருந்து சற்றே ஓய்வெடுக்கவும் (relax), தகவல் தொடர்புச் சாதனங்களை மக்கள் நாடுகின்றனர். இதனை 'மாற்ற விளைவு' என்பர். நாளிதழ்களில் இடம்பெறும் சிரிப்புப்பகுதியும்,

படக்கதைகளும் (comic strips), தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் 'ஒளியும் ஒலியும்' 'காமெடி ஸ்பெஷல்' போன்ற நிகழ்ச்சிகளும் இதற்குச் சான்றுகளாகும்.

**இரைச்சல் எதிருட்டு தகவலியல் கருவிகள்**

**தட இடர்கள் (தடைகள்)**

தொடர்பு ஒரு செயன் முறை ஆகும். அதில் தொடர் செயல்கள் பல உள. அந்தத் தொடர் செயல்கள் ஒரு குறிப்பிட்ட முடிவை நோக்கிச் செல்கின்றன. செயல் புரிகின்றன. ஒவ்வொரு தொடர்பிலும் மூன்று பிரிவுகள் உள.

1. வெளிப்பாடு
2. விளக்கம்
3. மறுமொழி

இம்மூன்றும் தொடர்பில் மிகச் சிறப்பானவை ஆகும். வெளிப்பாடு தெளிவற்றிருந்தால், விளக்கம் துல்லியமற்று இருக்கும். அதனால் மறுமொழி சரியாக இருக்காது. எனவே தொடர்பு முயற்சி தோல்வியுறும்.

தொடர்பாளர் ஒரு செய்தியை அதற்குரிய தகவல் தொடர்புக் கருவியின் வழியாகப் பெறுநருக்கு அனுப்புகிறார். அப்போது அதில் 'இரைச்சல்' குறுக்கீடு செய்கிறது.

தெளிவாக அனுப்பும் செய்தியில் குறுக்கிடும் எனலாம். வானொலியில் செய்தியை செய்தியைக் கேட்பவருடைய ஒலியைத் தவிர எதையும் இரைச்சல் ஒலிபரப்பும்போதும் மற்றவை எல்லாம், தடைகள் எனப்படும், பத்திரிகைகளில் எளிதாகப் படிக்க முடியாத சிறிய எழுத்துகள், தெளிவற்ற போன்றவையும் த தடைகள் எனப்படும். தொலைக்காட்சியில் 'தடங்கலுக்கு வருந்துகிறோம்' என்னும்

பகுதி, தெளிவற்ற படம், ஒலி, உச்சரிப்பு, தலைகால் புரியாத நிகழ்ச்சி போன்றவை தடைகளாகும். திரைப்படத்தில் தெளிவற்ற படம், தெளிவற்ற வசனங்கள், தெளிவற்ற பாடல்கள் போன்றவை தடைகளாகும். மேலே கண்ட படத்தில் தகவல் தொடர்பாளர் (தொ), செய்திக்குரிய தகவல் தொடர்புக் கருவியின் வழியாக ஒரு செய்தியைப் பெறுநருக்கு (பெ) அனுப்புகிறார். அப்போது இரைச்சய் (ஒலி) குறுக்கீடு செய்வதை உணர்கிறார். இந்த இரைச்சல், குறுக்கீடு போன்றவை தடைகள் எனப்படும். ஒலிஞ்மொழித் தொடர்பிற்கு ஒலிகளே இடையூறுக உள்ளன. செய்தியைத் தெளிவற்றதாக ஆக்கிப் பெறுநருக்கு அனுப்புகிறது என்று உளவியலாளர்கள் கூறுகின்றனர். இவ்வாறு தகவல் தொடர்பாளருக்கும். அதைப் பெறுபவருக்கும் இடையில் ஏற்படும் தொடர்பைப் பிறிதொரு ஒலி இடையூறு செய்கிறது. இந்த இடையூறு தடை எனப்படும். தொடர்பாளர் உண்டாக்காது, கருவியில் உருவாகும் பிற ஒலிகளும் தடைகள் எனப்படும். தகவலாளியின் தொடர்பு நோக்கம் நிறைவேறாமல் தவிர்க்கப்படும் தடை எனப்படும். இத்தடைகள் அனுப்பப்படும் இடத்திற்கு உள்ளேயும், வெளியேயும் இருக்கலாம். ஒரு பாட்டை மற்றவர்களுக்குக் கேட்காமல் வாய்க்குள்ளாகப் பாடுவதை உள்தடை எனலாம். தெருச்சத்தம், பேருந்து சத்தம் போன்றவை வெளித் தடைகளாகும். தங்கு தடையின்றிச் செல்லும் செய்தி ஓட்டத்தை எந்தச் சூழ்நிலையிலும், ஏதாவது ஒன்று தடுத்து நிறுத்தி இடையூறு செய்தால், அது தொடர்பியல் தடை எனப்படும்.

செய்தி அனுப்புநருக்கும், பெறுநருக்கும் இடையில் தோன்றும் கவனத்தைத் திசை திருப்பக் கூடிய குறுக்கீடுகள் அனைத்தும் தடைகள் எனப்படும். இதை 1. கவனஈர்ப்பு வழிகள் 2.மீண்டும் மீண்டும் அழுத்தமாகக் கூறல், 3. செய்தியின் மையக் கருத்தைப் பல நீக்கலாம்.

**தகவல் தொடர்புக் கருவிகள்**

தகவல் தொடர்பில் தகவலாளரையும் பெறுநரையும் தொடர்புபடுத்தும் கருவிகள் தகவல் தொடர்புக் கருவிகள் எனப்படும். ஒருவழிக் கருவிகள். இருவழிக் கருவிகள் எனக் கருவிகள் பல வகைப்படும், இவற்றில் தகவலாளர் தன்னுடைய

தேவைக்கேற்ற கருவியைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். உரிய காலத்தில், உரிய காரணத்திற்காகச் சரியான முறையில் பயன்படாத கருவி நல்ல கருவியாகக் கருதப்படமாட்டாது. சில கருவிகள் குறிப்பிட்ட மக்களுக்கு மட்டுமே பயன்படும். எழுத்து வடிவில் உள்ள கருவிகள் படிக்கத் தெரிந்த மக்களுக்கு மட்டுமே பயன்படும். வானொலி, தொலைக்காட்சி போன்ற கருவிகள் சிலருக்கு மட்டுமே பயன்படும். பொதுக் கூட்டங்களில் எல்லாரும் பங்கேற்பதில்லை.தொடர்பாளர் கருவிகளைத் திறமையற்ற முறையில் கையாள்வதால் பல தோல்விகள் ஏற்படலாம்.

செய்தித் தொடர்புத் தடைகள் (Barriers)

செய்தி அனுப்புவதிலோ அல்லது பெறுவதிலோ உள்ள திறமையைக் குறைக்கும் குறுக்கீடுகள் செய்தித் தொடர்புத் தடைகள் எனப்படும். இக்குறுக்கீடுகளை இரு வகையாகப் பாகுபடுத்தலாம்.

1. செய்திப் பாதை இரைச்சல் (Technical Noise)

2. அர்த்தவியல் இரைச்சல் (Semantic noise)

செய்திப்பாதை இரைச்சல் என்பது செய்தி அனுப்புபவருக்கும் செய்தி பெறுபவருக்கும் இடையே தடையாக அமையும் அனைத்துத் தடை களையும் குறிக்கும். வானொலியில் கேட்கும் 'கரபுரா' சப்தம் செய்திப்பாதை இரைச்சலுக்கு எடுத்துக்காட்டாகும். எந்திரத்தால் தடங்கல் ஏற்படும் போது தொலைக்காட்சியில் அறிவிப்பாளர், 'தடங்கலுக்கு வருந்துகிறோம்' என்று குறிப்பிடுவார். தொழில்நுட்ப சத்தம்)இதுவும் செய்திப்பாதை தடையையே குறிக்கிறது. ஆனால் தேர்ச்சி பெற்ற செய்தித் தொடர்பாளர் சில செய்திப் பரிமாற்ற உத்திகளைக் கையாண்டு, தகவலைத் தொலைக்காட்சி பார்வையாளர்களுக்குத் தெரியப்படுத்துவார். அச்செய்திப் பரிமாற்ற உத்திகளில் ஒன்று மிகைப்பாடு (Redundancy) என்பதாகும். மிகைப்பாடு என்பது முக்கியத் தகவல் களை வலியுறுத்துவதற்காக மீண்டும் மீண்டும் செய்தியைத்

தெரிவிப்பது ஆகும். இவ்வாறு அடிக்கடி செய்தியைத் தெரிவிக்கின்ற போது செய்திப் பாதை இரைச்சலையும் மீறி செய்தி பெறுபவரைச் சென்றடையும்.

செய்தியை அல்லது தகவலைப் பெறுகின்றவர் 'பெறுநர்' என அழைக்கப்படுகின்றார். செய்தி அனுப்புபவர் தகவல் தொடர்பில் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றாரோ அதைப் போன்று செய்தி பெறுபவரும் முக்கிய இடத்தினைப் பெறுகிறார். ஏனெனில் செய்தியை அனுப்புபவரும், பெறுபவரும் தகவல் தொடர்பில் பங்கேற்றால் தான் செய்தித் தொடர்பு முழுமை பெறும்.

இயந்திரத் தடைகள்

இயந்திரத் தடைகளை 'தடஇடர்' என்றும் கூறுவர். இது செய்தியை எடுத்துச் செல்லும் வழியில் ஏற்படும் இடராகும். நவீன உலகச் செய்தித் தொடர்பில் மிகுதியான தொடர்புக் கருவிகள் பயன் படுத்தப்படுகின்றன. செய்தியின் சரியான. துல்லியமான, முறையான பரிமாற்றத்திற்குப் பழுதான கருவிகள் இடையூறாக உள்ளன. செயலிழந்த தொலைபேசி. ஒலி பெருக்கியில் தவறு, உரை நிகழ்த்தப் பெறும் அரங்குகளில் உள்ள எதிரொலி, தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றில் ஏற்படும் தொழில் துட்பக் குறைபாடு, செயற்கைக் கோள்கள் பழுதடைதல் போன்றன நம் அன்றாட வாழ்க்கையில் காணும் தொடர்புத் தடைகளாகும். படங்களில் காணும் கறுப்புப் புள்ளிகளும் தடை களாகும். இத்தடைகள் செய்தி தெளிவாகவோ, முழுமையாகவோ பெறுநருக்குக் கிடைக்காமல் செய்து விடுகின்றன. செய்தியை அனுப்பும் போது ஏற்படும் குறுக்கீடுகளும் தடைகள் எனப்படும். தகவல் தொடர்புக் கருவியைத் தவறாகப் பயன்படுத்தினாலும், கருவியைச் சரியான முறையில் இயக்காவிட்டாலும் தடை ஏற்படும். எனவே அதில் பயிற்சி உள்ளவர்களும், முன் அனுபவம் உள்ளவர்களும், இயக்கும் திறன் உள்ளவர்களும் மட்டுமே அதை இயக்க வேண்டும். குறிப்பிட்ட நோக்கத்தைப் பெற எல்லாக் கருவிகளும் பயன்படும் என்று சொல்ல முடியாது.

இயந்திரக் கோளாறுகளால் தடைகள் ஏற்படும் என்பதை முன்பே கண்டோம். அமைப்பே முழுமையாகச் செயல்படாமல் இருக்கலாம் அல்லது அமைப்பில் பழுது ஏற்பட்டிருக்கலாம். தொடர்பாளர் செய்தியையே அனுப்பாமல் இருக்கலாம் அல்லது அனுப்பிய செய்தி உரியவரிடம் சென்றடையாமல் இருக்கலாம். பெறுநர் செய்தியைப் பெறாமலோ கேட்காமலோ இருந்தால் செய்தியானதுகுறிப்பிட்ட இலக்கைச் சென்றடையவில்லை என்பது பொருளாகும். சில சமயங்களில் அனுப்பப்படும் செய்தி இடையில் தொலைந்துபோயிருக்கலாம். அதற்குக் காரணம் தகவல் தெரிவித் தலில் பங்கேற்ற ஒருவரின் தவறாக இருக்கலாம். ஒரு தடையின் காரணத்தை ஆராயாமல், இயந்திரத்தடை என்று இயந்திரத்தின் மீது பழி போட்டு விடக் கூடாது. தடையின் காரணத்தை விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். மற்றவர்களின் நோக்கங்கள் மீது குறுக்கு விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

சில சமயங்களில் பெறுநரிடம் செய்தி சென்று சேர்ந்தாலும் அதனால் பயனிருக்காது. திறமையான கருவியைத் தேர்ந் தெடுக்காததால் இத்தவறு ஏற்பட்டுள்ளது. எனவே சரியான கருவியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மின் காந்தப் புலனின் தடுமாற்றம், மின் குழல் விளக்கின் 'சோக்கினால்' வானொலியில் ஒலி உண்டாதல், இடி, மின்னல். காரணமாக வானொலியில் தடை உண்டாதல், பத்திரிகைகளில் படிக்க முடியாத எழுத்துக்கள், தவறானஅச்சு, அச்சுப்பிழைகள், அச்சுமைக்கறை. உடைந்த எழுத்துகள், தெளிவில்லாத நிழற்படங்கள் போன்றவை தடைகளாகும். மனக் குழப்பம் ஏற்படுத்துபவையும், கண்களை உறுத்துபவையும் தடைகளாகும். நேரடித் தொடர்பில். ஒருவர்பேசும் ஒலி மற்றவருக்குக் கேட்கா விட்டாலும் தடையாகும் அனுப்புநரின் குரல் ஒலியும், அவரைச் சுற்றியுள்ள பிற ஒலிகளும் தடைகளாகும்.

இருவர் பேசிக்கொண்டிருக்கும் போது பேருந்தின் காற்று ஒலிப்பானின் ஒலி, பேச்சைத் தடை செய்கிறது. பேருந்தில் பயணம் செய்யும் போது பேச்சுத் தடை நிகழ்வதைக் காணலாம். பழுதான மின் விசிறியின் ஒலி, பட்டாசு

கொளுத்துதல்,தொலை பேசியில் மற்றொருவரின் குரல் கேட்டல் போன்றவை இடர் களாகும். இவை இயந்திரத் தடைகளாகும்.

மக்கள் தகவல் தொடர்பு (Mass Communication)

மக்கள் தகவல் தொடர்பு பிற தகவல் தொடர்புகளை விடவும் மிகவும் வலிமை வாய்ந்தது. ஏனெனில் பிறத் தகவல் தொடர்புகளில் தகவல் தனி மனிதருக்கோ அல்லது சிறு குழுவினருக்கோ மட்டும் தெரிவிக்கப் படுகிறது. ஆனால் மக்கள் தகவல் தொடர்பில் ஒரே நேரத்தில் பல்லா யிரக்கணக்கான மக்களுக்குத் தகவல் அனுப்பப்படுகிறது.

"ஒரு செய்தியைத் தகவல் தொடர்புச் சாதனங்கள் (Mass Media) மூலம் ஒரே நேரத்தில் தெரிவிக்கப்படும் போது அத்தொடர்பு 'மக்கள் தகவல் தொடர்பு என்றாகின்றது. அதாவது தகவல் தொடர்புக்கென உருவாக்கப்பட்ட சாதனங்கள் மூலம் பெருவாரியான, பலதரப்பட்ட மக்களுக்குத் தகவல்களையோ, கருத்துகளையோ, நோக்கங் களையோ அறிவிக்கும் முறை மக்கள் தகவல் தொடர்பு எனப்படும்'. (ி. மீனா, 1992: 3)

"மக்கள் தகவல்தொடர்பு என்பது, ஒரே தன்மை உடைய மக்களிடம், பொதுவான கருத்துகளைத் தொடர்புடைய காரணங்களுக்காக மக்கள் தொடர்புச் சாதனங்கள் வழியாக ஒரே நேரத்தில்(Denis Quail, 1988:168) தொழில்நுட்பத் தகவல் தொடர்புச் சாதனங்களான பத்திரிகைகள், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி போன்றவற்றின் வழியாக தகவல்களை பலதரப்பட்ட மக்களுக்குத் தெரியப்படுத்துவது மக்கள் தகவல் தொடர்பாகும்.

தொடர்பியல் கோட்பாடுகள்

சமூக அமைப்புப் பற்றிய விதிகள், செயல் முறைகள், அளவியல் முறையிலான ஊகங்கள், பொதுக்கருத்துத் தொடர்பான நினைவுகள் போன்றவையும், சமூக வாழ்வு பற்றிய தனி மனித உற்று நோக்கலும், உள்நோக்கும் பற்றிய எனப்படும். அது இயற்கையில் வாழும் மக்களின் விசை இயக்கவியல் சமூக இடைத் தொடர்பினை விளக்குவதுடன் வருவது உரைக்கும். சில இடையுறவு உள்ள விளக்கங்கள் கருத்துருவாக்கலுக்கு முறைப்படுத்தப்பட்ட வழிகளில் தேர்ந் தெடுக்கப்பட்ட சில கூறுகளை ஒன்று சேர்த்து உலகைச் செயலறிவால் தெரிந்து கொள்ள உதவும். ஊகம்,மூதுரை போன்றவை கோட்பாட்டின் அடிப்படைகளாகும். நன்றாக திருபிக்கப்பட்ட ஆய்வுப் பொருள் அறிவியல் கோட்பாடு எனப்படும், நன்றாக நிரூபிக்கப்படாத ஆய்வுப் பொருளைக் கருதுகோள் என்பர். ஒவ்வொரு ஆய்வுப் பொருளையும் அநுபவ வகையில் பல தடவைகள் சோதனை செய்யும்போது, அதில் பொதிந்துள்ள கோட்பாடு வெளிப்படுகிறது.

செய்திப் பாதைகள் (Channel)

செய்தி அனுப்புபவர் செய்தி பெறுபவருக்கு செய்திப் பாதைகள் வழியாகச் செய்தியை அனுப்புவார். செய்திப்பாதைகள் சக்தி வாய்ந்தவை

சொல்சாராத் தகவல் தொடர்பிலும், பொதுமக்கள் தகவல் தொடர்புத் தவிர, பிற சொல்சார்ந்த தகவல் தொடர்புகளிலும் செய்தி அனுப்புபவரே செய்திப் பாதையாகவும் அமைகிறார். மக்கள் தகவல் தொடர்பில் மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் செய்திப் பாதையாகச் செயல்படுகின்றன.

தகவல் தொடர்புச் சாதனங்கள்

மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்களை 1. மரபுவழிச் சாதனங்கள் 2. அச்சுச் சாதனங்கள் 3. மின்னணுச் சாதனங்கள் எனப் பாகுபடுத்தலாம்.

மரபுவழிச் சாதனங்களில் நாட்டுப்புறக் கலைகள், தெருக் கூத்துகள். கண்காட்சிகள், நாடகங்கள் போன்றன இடம்பெறு கின்றன. பத்திரி கைகள், இதழ்கள் போன்றன அச்சுச் சாதனங் களாகும். வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி,

கணினி (Computer), தொலைப் பனுவல் (Tele Text), &&&& (Satellite), (Internet) போன்றன மின்னணுச் சாதனங்களாகும்.

மின்னணுச் சாதனங்கள் மின்பொறியியல் கருவிகளைக் கொண்டு இயங்குபவை. ஆகவே தொழில் நுட்பக் கோளாறுகள் செய்திப் பரிமாற்றத்திற்குத் தடை ஏற்படுத்தி, இரைச்சலை உண்டாக்கும்.

1) வானொலி
2) திரைப்படம்
3) கணினி

அ. மரபுவழிச் சாதனங்கள்

ஆ.அச்சுவழிச்சாதனங்கள்

இ.மின்வழிச் சாதனங்கள்

இவை ஒவ்வொன்றும் தொழில் ஆற்றும் முறையில் சில தொடர்புகளைப் பெற்றுள்ளன. அச்சுவழிச் சாதனங்கள் மேற்கத்திய நாடுகளில் தோன்றிய தொழில் புரட்சியின் விளைவாக விரைவான வளர்ச்சி பெற்றுத் திகழ்கின்றன. மின்வழிச் சாதனங்கள் இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் வளர்ச்சியைத் தொடர்ந்து ஏற்றுக்கொண்டு வளர்ந்துகொண்டே வருகின்றன. மரபுவழிச் சாதனங்கள் தொழில் நுட்பக் கூறுகளைப் பெறாவிடினும் கருத்து விளக்கம் தரும் முயற்சியில் புதிய கண்ணோட்டங்களை ஏற்றுள்ளன.

**மரபுவழிச் சாதனங்கள்**

பேச்சு வழக்கில் செய்திப் பரிமாற்றம் காலந்தோறும் தொடர்ந்து நடைபெறுகின்றது. ஆன்றோர்களின் அருள் வாக்குத் தொடர்ந்து வரும் மனித சமூகப் பாரம்பரியத்திற்கு வழிகாட்டும் செய்திகளைப் புனிதச் செய்திகளாகத் தருகின்றன. கண்ணனின் கீதையும், இயேசுநாதரின் மலைப் பிரசங்கமும், தனி

மனிதத் தொடர்பிலிருந்து குழுத் தொடர்பாக மாற்றம் பெற்றுள்ளன. கதை வடிவப் பாடல்கள், இசைச் சொற்பொழி வுகள், வாய்மொழிச் சொற்களாகவே வழங்கி வருகின்றன. ஆடல் கலையின் சில முத்திரைகள் அருமையான செய்திகளை வெளிப்படுத்துகின்றன. ஆண்டாள் சரித்திரம்ஆடற்செய்தியாகவே சொல்லப்படுகின்றது. நாட்டுப்புறக் கலைகளில் கருவி இசை சேர்ந்து களிப்பூட்டுகின்றது. பழைய கூத்துக்கலை இடையில் மேடை நாடகங்களாகவும் இப்போது யதார்த்தக் கண்ணோட்டத்தில் தெருவோர நாடகங்களாக, நிஜ நாடகங்களாகப் பொதுமக்கள் நடுவில் நடைபெறுகின்றன. ஒப்பனை, திரைச்சீலை, ஆடை அலங்காரங்கள் ஆகியவைகளைத் தூக்கி எறிந்துவிட்டுப் பொதுமக்களுக்குச் செய்திகளை உணர்த்தும் ஒரே நோக்கத்துடன் இயக்க ரீதியாகத் தெருவோர நாடகங்கள் நடைபெறுகின்றன.

மரபுவழிச் சாதனங்களின் செய்திகள் பொதுமக்களிடையே நெருங்கிய உறவை உண்டாக்கும் முறையில் உணர்த்தப்படுகின்றன. இவற்றில் உடனடி விளைவுகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். நாட்டுப்புற வழக்காற்றுச் சொற்கள் கற்றோர் கல்லாதவர் மனதில் எளிதாகப் பதிகின்றன. இவை கட்டுப்பாடுகள், வரையறுக்கப்பட்ட கொள்கைகள் இல்லாதிருப்பதால் அவ்வப்போது வேண்டிய இடங்களில் வேண்டிய செய்திகளைச் சேர்த்துக்கொள்ளவும் முடிகின்றது. எந்தச் செய்திக்கும் வளைந்து கொடுக்கும் வாய்ப்புகள் உள்ளன. இவற்றுடன் கேட்போரும் பங்குகொள்ளும் முறையில் மரபுவழிச் சாதனங்கள் அமைந்துள்ளன. உத்தரப் பிரதேசத்தில் நடைபெறும் கீர்த்தன், அல்கா, தமா போன்ற நிகழ்ச்சிகள் இந்த வகையில் அமைந்துள்ளன. முன்னோர்களின் மரபுவழிச் செய்திகளையும், பண்பாட்டுச் செய்திகளையும் நேரடியாக எடுத்துச் சொல்லும் முறையிலும் இவை அமைந்துள்ளன.

வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம் போன்ற மரபுவழிக் கலைகளில் பாரம்பரியச் செய்திகள் மிகவும் எளிமையாகச் சொல்லப்படுகின்றன. வில்லுப்பாட்டில் வில்லும் பானையும் எளிய இசைக் கருவிகளாய் இடம் பெறுகின்றன. பொம்மலாட்டச்

செய்திகள் நுட்பமான தொழில் முறைகளில் நடைபெறுகின்றன. இரும்புப் பொம்மைகள், மூங்கில் குச்சிகளில் கட்டப்பட்டு பொம்மலாட்டக்காரர்களால் இயக்கப்படுகின்றன. மேற்கு வங்காளத்தில் பொம்மலாட்டம் காட்டப்படுகின்றது. இராமாயணம், மகாபாரதக் கதைகளை வெளிப்படுத்தும் நிழல் பொம்மலாட்டங்கள் ஆந்திரம், கர்நாடகம், கேரளம், ஒரிசா மாநிலங்களில் நடைபெறுகின்றன. கைகளால் இயக்கும் பொம்மலாட்டம் இராஜஸ்தான், ஒரிசா, கர்நாடகம், தமிழ்நாடு, ஆந்திரா முதலிய மாநிலங்களில் நடைபெறுகின்றது. கயிற்றில் கட்டி அரங்கில் இறக்கிவிடப்படும் பொம்மைகள் கயிற்றை இழுத்தும் வளைத்தும் இயக்கப் படுகின்றன. பல வங்கி நிறுவனங்கள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்றவை தங்கள் வணிக மேம்பாட்டிற்காகப் பொம்மலாட்டக் கலையைப் பயன்படுத்துகின்றனர். இதன் வடிவமும் இயக்கமும் எளிய முறையில் அமைந்திருப்பதால் சிறப்பான வரவேற்பைப் பெறுகின்றன.

**அச்சுவழிச் சாதனங்கள்**

கட்டையிலும் களிமண்ணிலும் நொண்டியடித்துக் கொண்டிருந்த அச்சுக் கலை 1450-இல் உலோக எழுத்துக்களுடன் அச்சுக் கூடத்திற்குள் புகுந்தது. ஜெர்மனியில் ஜான் கூட்டன் பர்க் என்பவர் கண்ட முதல் அச்சுக்கூடம் அச்சுக்கலை வளர்ச்சியை உலக நாடுகளில் உருவாக்கியது. சீனாவில் ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்ட தாளாலான அச்சுக் கலையை நம்பி ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள், சீனாவின் கையெழுத்துப்படி எழுதிப் பிழைத்துக்கொண்டிருந்தவர்கள் அச்சுக் கலையைச் சைத்தானின் வேலை என்று புரளி கிளப்பினர். பின்னர் அதன் அழுத்தமான தொழில் முறைகளைக் கண்டு வியந்து ஏற்றுக்கொண்டனர். மேல்மட்டப் பயனாக இருந்தகல்வி அதன் கலையினால் சாதாரண மக்களுக்கும் கிட்டியது. தனி மனிதன் அகைத் தொடர்பு கொள்வதற்கு அச்சுத் தொழில் ஊடகமாக அமைந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மின் அச்சுக் கூடங்கள் செய்தித் தாள்களை உருவாக்கித் தந்தன. புதிய தொழில்நுட்ப முறையால் பழங்குடி கலாச்சாரம் மாறி

புதிய நாகரிக கலாச்சாரம் பரவத் தொடங்கியது. பழங்குடி மக்கள் பயன்படுத்திய ஊதுகுழல் வழிச் சாதனங்கள் மறைந்து போனது, அவர்களும் கல்வி அறிவுடன் செய்தித் தகவல்களை ஆவலுடன் படித்து அறிந்துகொண்டனர். இதனால் அச்சுக்கலை இன்று வியக்கத்தக்க அளவில் வளர்ந்து ஓரளவு படித்த மக்களுக்கும் பயன்படும்படியாக அமைந்துள்ளது. நாளிதழ், பருவ இதழ்கள், தனிச்சுற்று இதழ்கள், அச்சுத்துண்டு இதழ்கள் போன்றன புதுப்புதுக் கோணங்களில் வெளிவருகின்றன. இவைகளில் நவீன அறிவியல் அச்சு வளர்ச்சிக்கு ஏற்ப கலர் புகைப்படங்கள், 3டி புகைப்படங்கள் அச்சிடப்படுகின்றன. வானவெளியில் சுற்றிக்கொண்டிருக்கும் செயற்கைக் கோள்கள் எடுத்து அனுப்பும் புகைப்படங்கள், நிலவு மற்றும் நட்சத்திர மண்டலங்களில் இருக்கக்கூடிய அமைப்பை அப்படியே புகைப்படமாக இன்றைய அச்சுவழிச் சாதனங்கள் வெளியிட்டு வருகின்றன.

இன்றைய சமுதாயத்தின் எளிய தொடர்புச் சாதனங்களில் செய்தித்தாள்களே முதல்நிலை வகிக்கின்றன. டெக்கான் கிரானிக்கள் என்ற ஆங்கில இதழ் ஒரு ரூபாய்க்கும், தினகரன் என்ற தமிழ் இதழ் ஒரு ரூபாய்க்கும் விற்கப்படுகின்றது. செய்தித் தலைப்புகள், பத்திப்பிரிப்புகள், பக்கஒழுங்கு படங்கள் விளம்பரங்கள் முதலியன அச்சில் வாசகர்களின் எதிர் பார்ப்புகளுக்கு ஏற்றவாறு அமைகின்றன. செய்திக் கட்டுரைகள், செய்தி விமர்சனங்கள், இலக்கியச் செய்திகள், பொழுதுபோக்குக் கூறுகள் இவையெல்லாம் அச்சுவழிச் சாதனங்களின் சிறப்புப் பகுதிகளாக அமைந்துள்ளன. மின்வழிச் சாதனங்களின். வருகைக்குப் பின்பு அச்சுவழிச் சாதனங்கள் மதிப்பிழந்துவிடும் என்றிருந்த எதிர்பார்ப்புகளைத் தகர்த்து எறிந்தது அச்சுவழிச் சாதனங்களின் சாதனைகளாகும். அதிகப் பொருட் செலவுக்கு ஆட்பட வைக்காமல் நடுத்தரச் சமுதாயத்தின் பொருளாகாரக்கட்டுப்பாட்டிற்குள் அவை அடங்கிவிடுகின்றன. தொழில் அடிப்படையில் அவை நல்ல தயாரிப்புகளாக விளங்குகின்றன. நூல்கள் நல்ல நண்பர்களாகவும் விளங்குகின்றன.

அச்சுவழிச் சாதனங்களில் பலவழிகளில் மொழிவாரியாக வெளியிடப்படும் பத்திரிகைகளில் முன்னணி நாளிதழ்களாக ஆங்கிலம் - டைம்ஸ் ஆ்ஃப் இந்தியா.

இந்தி - தய்னிக் ஜாக்ரன், தய்னிக் பாஸ்கரன், ராஜஸ்தான் பத்திரிகை. மலையாளம் மலையாள மனோரமா, மாத்ரு பூமி, தெலுங்கு -ஈநாடு. வங்காளம் - ஆனந்த பஸார். தமிழ் - தினமணி, தினத்தந்தி, தினகரன், தினமலர் போன்ற இதழ்களையும் குறிப்பிடலாம்.

**மரபுவழி, அச்சுவழி வேறுபாடுகள்**

தகவல் தொடர்புச் சாதனங்களில் அச்சுப்பொறி சுண்டுபிடிப்பதற்கு முன்பே வழக்கத்தில் இருந்து வந்தவை மரபுவழிச் சாதனங்கள். இதை நம் முன்னோர்கள் பயன்படுத்திய அறிவியல் கலக்காத அறிவுபூர்வமான கருவிகள் என்று குறிப்பிடலாம். பல தலைமுறைகளாகப் பயன்படுத்தப்பட்டு வருவதனால் மரபுவழிச் சாதனம் என்று அழைக்கப்படுகின்றது. மனித இனம் உள்ள வரை மரபுவழிச் சாதனங்கள் மறையாது. ஆனால் ஒருநாள் மின்சாரம் தடைபட்டுப் போனால் அச்சுவழிச் சாதனம் நின்றுவிடும். மரபுவழிச் சாதனங்கள் மனித உணர்வுகளுடன் கலந்தது. அச்சுவழிச் சாதனங்கள் இரண்டாம் நிலையிலேயே உள்ளன.

மின்வழிச் சாதனங்கள்

மின் தொடர்பில் சாதனைகள் புரியும் மின்வழிச் சாதனங்கள் வளர்ச்சியிலும் சாதனை படைத்துக் கொண்டிருக்கின்றன. விண்கோள்கள் வழித் தகவல்களைப் பெறுகின்ற காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். வானொலி, தொலைக்காட்சி திரைப்படம் இவை மூன்றும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பரபரப்பான மக்கள் தொடர்புச் சாதனங்களாக விளங்குகின்றன.

**வானொலி**

இத்தாலி நாட்டைச் சேர்ந்த மார்கோனி என்பவர் 1901-ஆம் வருடம் வானொலியைக் கண்டுபிடித்தார். இந்த மண்ணில் மணம் பரப்பும் தகவல் தொடர்புச் சாதனமான வானொலிக்கு மற்ற சாதனங்களைவிட மிகப் பெரிய பொறுப்பு ஒன்று உண்டு. கேள்வி அறிவின் மூலமே அவை நேயர்களை நிறைவு செய்ய வேண்டியதிருக்கின்றது. இயற்கையின் சீற்றம் என்றால் ஒலித்தடைகள், மின்சாரம்

நின்றுவிட்டால் ஒலிபரப்புத் தடைகள், செய்திகள் புரியாவிட்டால் மொழித் தடைகள், இத்தனை தடைகளையும் சந்தித்து அவை நிலைத்து நிற்கின்றன. இந்தியாவின் எல்லாக் கிராமங்களையும், தொழில்நுட்ப ரீதியில் வானொலி தொடர்பு கொண்டிருக்கின்றது. நிர்வாகப் பகுதியினர், பொறியாளர்கள், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், செய்தியாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் எனப் பலர் பணியாற்றும் மிகப் பெரிய தொடர்புச் சாதனம் இந்திய வானொலியாகும்.

இந்திய வானொலி நிலையங்கள் ஒவ்வொரு நாளும் 19 மொழிகளில் 70 தேசிய செய்தி ஒலிபரப்பும், 2 மொழிகளில் மாநில அளவிலான 118 செய்தி ஒலிபரப்பும், பழங்குடி யினருக்கான 33 செய்தி ஒலிபரப்பும் செய்து சாதனைபடைத்து வருகின்றது. மேலும் வானொலிக்கு வரக்கூடிய நேயர் கடிதங்கள். நேயர் விருப்பங்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படுத்தப் படுகின்றது. நிகழ்ச்சி வழங்குபவர்கள் தயாரித்துள்ள நிகழ்ச்சி பற்றிய கட்டுரையை (Script) 15 நாட்களுக்கு முன்பாகப் பெற்று நிகழ்ச்சி தயாரிப்பாளர் பரிசோதித்து தேவையான மாற்றங்கள் இருந்தால் அதை திருத்திவிடுகின்றனர். இதனால் வானொலியில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகும் போது எந்தவிதமான தவறான கருத்துகளும் வெளியாவதில்லை. இதன் மூலம் வானொலி யினுடைய புகழும் தனித்தன்மையும் சிறப்பாக அமைந்துள்ளது எனலாம்.

**தொலைக்காட்சி**

தகவல் தொடர்புச் சாதனங்களில் தொலைக்காட்சி மிக நீண்ட ஒளி, ஒலிபரப்பு கொண்டதாக விளங்குகின்றது. இதில் பொழுது போக்கு நிகழ்ச்சிகள் ஒருபுறம் இருக்க அன்றாட நிகழ்ச்சிகள், புதிய புதிய கண்டுபிடிப்புகள் பற்றியும் அன்றாட நிகழ்ச்சிகள், மக்களுடைய வாழ்வியல் பற்றிய செய்தித் தொகுப்புகளும் வெளியாகின்றன. செய்தி ஒலிபரப்புக்காகவே தனி அலைவரிசை கொண்ட தொலைக்காட்சிகளும் இயங்குகின்றன. இந்த அலைவரிசைகளில் 24 மணி நேரமும் செய்திகளே ஒளிபரப்புகின்றன. இதனால் உலகினுடைய ஏதேனும் ஒரு பக்கத்தில் நடக்கும் நடப்புகள் உடனே உலகினுடைய எல்லாப் பகுதிகளுக்கும் தெரியும்படியாக

ஒளி பரப்பப்படுகின்றது. தேவைக்கு ஏற்ப இடை இடையே விளம்பரங்கள் ஒளிபரப்பு ஆகின்றன.

தொலைக்காட்சியில் சிறப்புத் தொடர்களாக அறிவியல், வேளாண்மை, தொழில்நுட்பம், கல்வி, மருத்துவம் மற்றும் மக்கள் நல மேம்பாட்டுக்கான மத்திய மாநில அரசுகளின் திட்டங்கள் பற்றிய விவரங்கள், பயன்படுத்துவதற்கான வழிவகைகள் பற்றிய குறிப்புகளும் வெளியிடப்படுகின்றன.

வினாக்கள்

1. தொடர்பு, தொடர்பியல் விளக்கம் தருக.
2. மக்கள் தகவல் தொடர்பு என்றால் என்ன?
3. மக்கள் தகவலியல் கருவி,பெறுநர் பற்றி விளக்குக.
4. மரபு வழிச் சாதனங்கள் பற்றி விளக்குக.
5. அச்சுச் சாதனங்கள் பற்றி கட்டுரை வரைக.
6. மின்னணுச் சாதனங்கள் பற்றி விளக்குக.

# அலகு 2

தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொடர்பினைத் தனித் துறையாக்கி அதற்கென ஒரு தனிப் பெருமையைத் தந்தவர் 'வில்பா ஷ்ரம்'.

காரண காரிய உறவு குறித்த மனித முயற்சியின் விளை வாகவே கோட்பாடு தோன்றியது. பொதுவாக காரணத்தை ஆராயும் பயனாக இது எழுந்தது. அச்சு இயந்திரங்கள் தோன்றாத காலத்தில் தேர்ந்த ஒரு சிலரின் தனி உடைமையாகவே அறிவு விளங்கியது. அரசு மண்டபங் களை மட்டும் அலங்கரிக்கின்ற பொருளாகவே கவிஞர்களது திறமையான புலமை அமைந்திருந்தது. செய்திப் பரிமாற்றம் என்பது குறிப்பிட்ட கூட்டங்கள், இனங்களுக்கிடையே மட்டும் குறுகியிருந்தது. செய்திகளைப் பலநூறு படிவங்கள் எடுத்து மக்களிடையே பரவச் செய்ததன் வாயிலாக அச்சகங்கள் அறிவையும், செய்தியையும் பொதுச் சொத்தாக்கின.

மக்கள் அறிவுடையவராவதை எந்தக் காலத்திலும் ஆட்சியாளர்கள் விரும்பியதில்லை. எனவே அச்சகங்களை அடக்க, முடக்க, கட்டும் படுத்த ஆட்சியாளர்கள் தொடங்கினர்.

கருத்துரிமை, எழுத்துரிமை பற்றிய வாதங்களைத் தோற்றுவித்தன. இதன் முடிந்த முடிவே கட்டற்ற பத்திரிகைச் சுதந்திரக் கோட்பாடாக மலர்ந்தது. அச்சகங்கள் தமக்கு அளிக்கப்பட்ட உரிமையினை மீறிய போது, சமுதாயப் பொறுப்புக்கொள்கை எழுந்தது. சில நாடுகளில் ஆட்சியாளர்கள் தாங்கள் விரும்பியக் குறிக்கோளை நிறைவேற்று வதற்குத் தகவல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தியதன் பயனாக விளைந்ததே சோவியத் பொதுவுடைமைக் கொள்கையாகும். (अ. भाήक्रा, नं. शतक, 2001 : 144)

ஃப்ரெட் சீபாட், தியோடர் பீட்டர்சன், வில்பா ஷ்ரம் ஆகியோர் எழுதிய "இதழ்கள் குறித்த நான்கு வகைக் கோட்பாடுகள்" (Four Theories of the Press -1956) என்னும் புகழ் வாய்ந்த நூல் செய்திப் பரிமாற்றம் குறித்து உலகளாவிய நிலையில் ஆராய்ந்தது. வேறுபட்ட சமூகங்களின் ஆன்மவியல், அரசியல் பின்னணியைப் பகுத்தாய்வது, தனி மனிதனுக் கும், அரசுக்கும் உரிய உறவு, அறிவின் தன்மை, உண்மை ஆகிய வற்றையும் கருத்தில் கொண்டு எழுந்த பகுப்பு முறை இது. எத்தகுத் தகவல் தொடர்புச் சாதனத்தைப் புரிந்து கொள்வதற்கும் இந்நான்கு பகுப்பு முறை குறித்த அடிப்படைக் கருத்துகள் பற்றிய அறிவு இன்றி யமையாததாகும்.

நால்வகைக் கோட்பாடுகள்

தகவல் தொடர்புச் சாதனங்களின் கோட்பாடுகளை நான்கு வகை களாகப் பாகுபடுத்துவர். அவை i) அரசு உரிமைக் கோட்பாடு ii) கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாடு III) சமுதாயப் பொறுப்புணர்ச்சிக் கோட்பாடு iv) சோவியத் பொதுவுடைமைக் கோட்பாடு என்பனவாகும்.

(i) சர்வாதிகாரக் கோட்பாடு

அரசு உரிமைக் கோட்பாடு என்பது இதழ்களாகிய நிறுவனங் கள், அவற்றின் பணி, இயக்கம் ஆகியவற்றில் பிறிதொரு பெரிய நிறுவனமாகிய அரசாங்கத்தால் 'ஒருங்கிணைந்த சமூகத்தில் கட்டுப்படுத்தப்படும் ஒரு கொள்கை' என்று சீபர்ட் என்பார் கருதுகிறார். தனிமனிதனைக் காட்டிலும் அரசு மேலானது என்றும் மனிதத் தேவைகள் அரசாங்கத்தால் நிறைவு செய்யப்படும் என்றும் இக்கோட்பாடு கருதுகிறது. இதன்படி தனிமனிதன் தனிமனிதனாக இன்றி, சமுதாயத்தின் உறுப்பினர் என்றளவில் முழுமையான திறமைகளை எய்துகிறான்.

பத்திரிகைகள் உருவானபோது தோன்றிய முதல் கோட்பாடு அரசுரிமைக் கோட்பாடு ஆகும். பத்திரிகை தொடங்கிய காலத்தில் இருந்த சமூகத்தையும், சமூகத்தில் அதன் பங்கையும் அது இனங் காட்டியது. அக்காலத்தில் பெரும்பாலும் முடியாட்சியின்

ஆதிக்கத்தின் கீழ் பத்திரிகை இருந்தது. பத்திரிகைகள் அரசு அதிகாரத்திற்கும், ஆளும் வர்க்கத்தின் நலன்களுக்கும் உட்பட்டு இயங்கின. இன்றும் சில நாடுகளில் பத்திரிகைகள், தொலைக் காட்சி, வானொலி போன்றவை அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளன. தற்போது உள்ள பல அரசுகள் இவற்றைத் தம் நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள விரும்புகின்றன. பல நாடுகள் பத்திரிகைச் சுதந்திரத்தை வலுக்கட்டாயமாக அடக்கி வைத்துப் பத்திரிகைத் துறையைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளன.

இதழியலாரின் சுதந்திரத்தைப் பறித்தல், அவர்களது சுதந்திரத்தை அதிகாரத்தால் கட்டுப்படுத்தல், அரசு ஆதிக்கத்திற்கு அவர்களை வலுக்கட்டாயப்படுத்தல் போன்றவற்றை இக்கொள்கை குறிக்கிறது. ஆளும் அரசையும், அதன் கொள்கைகளையும், எதிர்ப்பவர்களையும், ஏற்கனவே உள்ள விதிமுறைகளிலிருந்து விலகியவர்களையும் தணிக்கை செய்தல் அல்லது தண்டனை அளித்தல் போன்றவற்றின் மூலம் ஒடுக்கியது. அரசுக்கு எதிரான செய்திகள், மக்களிடம் சிந்தனை யைத் தூண்டக் கூடிய செய்திகள், மக்களைக் கிளர்ந்தெழச் செய்யக் கூடிய செய்திகள் போன்றவை தடை செய்யப்பட்டன.

1. சட்டம்
2. அரசு நேரடியாகக் கட்டுப்படுத்தல் அல்லது உற்பத்தியை அரசு நேரடியாகக் கவனித்தல்
3. நடைமுறை ஒழுக்க விதிகளை உருவாக்கிச் செயல் படுத்துதல்
4. வரிவிதித்தல், பொருளாதாரக் கட்டுப்பாடுகள் விதித்தல்
5. வெளிநாட்டுச் செய்திகளை உள் நாட்டில் கட்டுப்படுத்தி வெளியிடல
6. வெளிநாட்டுப் பத்திரிகையைக் கட்டுப்படுத்தி இறக்குமதி செய்தல்
7. ஆசிரியர் குழுவை அரசே நியமனம் செய்தல்.

8. பத்திரிகையைத் தடை செய்தல்

9. வெளியீட்டைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்.

10. உரிமம் வழங்குவதில் கட்டுப்பாடு போன்றவைகளில் இக்கோட்பாடு செயல்படுகிறது.

சர்வாதிகார ஆட்சியிலும், அடக்குமுறை அமைப்புகளிலும், இராணுவ ஆட்சியிலும், ஆக்கிரமிப்பு ஆட்சியிலும் இக்கொள்கை அமலில் இருக்கும். இத்தகைய சூழ்நிலைகளில் மக்கள் தொடர்புச் சாதனங்கள் வேறு எந்த அடிப்படையிலும் இயங்க முடியாது. சாவாதி காரத் தன்மை இல்லாத சமூக அமைப்பிலும் மேலாண்மைப் போக்கு இருப்பதைக் காணலாம். சில சமயங்களில் அரசுரிமைக் கோட்பாடு மக்களின் விருப்பங்களைப் பிரதிபலிப்பதாகவும் உள்ளது. சில சமயங் களில் பத்திரிகைச் சுதந்திரம் சமுதாய நலத்திற்கும், அரசின் நலன்களுக்கும் முரண்பட்டும் இருக்கும். சான்றாகப் பயங்கரப் புரட்சியின் போதும், போர் அச்சுறுத்தலின் போதும் இதைக் காணமுடியும். போர்க் காலங்களில் பத்திரிகைகளின் சுதந்திரத்தை அரசு கட்டுப்படுத்தும். போர்க்காலத்தில் ஒரு நாட்டின் இராணுவ இரகசியத்தை வெளியிட்டால். வெளிநாட்டினருக்கு ஆதாயமாகப் போய்விடும். அச்சமயங்களில் தணிக்கை முறை அமல்படுத்தப்படும். இச்சமயங்களில் அரசுரிமைக் கோட்பாடு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அரசு உரிமைக் கோட்பாட்டை முதலில் வரையறுத்தவராகக் கருதப்படும் தத்துவஞானி பிளாட்டோ, மனிதன் அடிப்படையில் தன்னலம் உடையவனாக இருக்கிறான். அதனால் நாட்டை உயர் குடியாட்சி नीललं (Aristocracy) &&& (Timocracy) का செல்வான். பின்னர் செல்வராட்சியிலிருந்து சிலராட்சிக்குக் (Obigarchy) கொண்டு செல்வான். அதனின்று குடியாட்சிக்குக் கொண்டு செல்வான். இறுதியாகக் குடியாட்சி யிலிருந்து கொடுங்கோலாட்சிக்குத் தாழ்த்தி விடுவான். அத்தகு நிலைமையைத் தவிர்ப்பதற்கு, நாடு மூதறிஞர்களால் ஆளப்பட வேண்டும் என்கிறார். அம்மூதறிஞர்கள் மேலான அதிகாரத் தால் கீழான கொள்கைகளை ஒதுக்கித்

தள்ளுவர். சாக்ரடீஸ் கூட அதிகாரத்துக்கு அடிபணியும் அடிப்படைப் பண்பினை ஆதரிக்கிறார். அரசியல் ஞானிகளாகிய மாக்கியவல்லி, ஹாப்ஸ், ஹேகல் போன்றவர்கள் அரசு உரிமைக் கோட்பாடுகளை ஆதரிப்பவர் களேயாவர். மாக்கியவல்லி, நாட்டுப்பற்றின் அடிப்படையில் எழும் ஆய்வு முறைகளுக்குக் கடுமையான கட்டுப்பாடு விதிப்பது நியாயம் என்கிறார். மேலும் அவர் நாட்டு மேலாதிக்கத்தினை நிலையானதாக, மேலானதாகக் கருதுகிறார். தனிமனிதக் கருத்துகள் நாட்டினைக் காட்டிலும் தாழ்வானவை எனக் கருதுகிறார்.

பாசிச - நாசிச மேலாதிக்கக் கொள்கை

பாசிச இயக்கத்தின் தலைவராக இருந்த முசோலினி முற்போக்குத் தன்மையையும், குடியாட்சியினையும் முழுமையாக வெறுத்தார். ஒட்டு மொத்தத் தனியுரிமை அதிகாரத்தையும் ஒரே தலைவனின் பண்பு களையும், சர்வாதிகாரத்தினையும் நம்பினார். இவற்றை வளர்ப்பதற்கு, பரப்புவதற்குத் தகவல் தொடர்பினைச் சார்ந்து நிற்க வேண்டியுள்ளது எனக் கருதினார். வன்முறையாலும், போராட்டத்தாலும் வெற்றி பெறுவதை முசோலினி நம்பினார். மேலும் போரழிப்புக் கோட்பாட்டினை மறுத்தல், அமைதிக் கோட்பாடு (Pacificism) முழுவதும் புறக்கணித்தல் மக்கள் இயக்கத்திற்குத் தலைமையேற்றல் வெறுத்தல், ஒருலகக் கொள்கையை ஒறுத்தல், சீரான முன்னணிப் படையின் மூலம் மக்களை ஒருங்கிணைத்தல், அழித்தல் ஆகியவற்றை முழுமையாக நம்பினார். முழுமையான ஒழுக்க வாழ்க்கையினை மக்கள் கடைபிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

**பாசிசக் கொள்கைகளை விளக்கும் முசோலினி**

கொள்கை நிலையிலும் பயன்பாட்டு முறையிலும் சிக்கலான குடியாட்சிக் கோட்பாடு முறையினைப் பாசிசம் சாடுகிறது;மறுக்கிறது, பெரும்பான்மையைப் பாசிசம் மறுக்கிறது. பெரும்பான்மை என்ற ஒன்றினாலேயே மக்கட் சமுதாயத்தை ஆட்சி செய்யலாம் என்பதைப் புறக்கணிக்கிறது. வெறும் எண்ணிக்கையை வைத்துக்

கொண்டு அவ்வப்போது கலந்துரையாடி ஆட்சி செய்யலாம் என்ற கொள்கையை ஏற்கவில்லை. மாற்ற இயலாத,பயன்பாடுடைய, நலன் தரத்தக்க ஏற்றத் தாழ்வினை உறுதிப் படுத்துகிறது. அச்சமின்மை, அனைவருக்கும் வாக்குரிமை என்ற இயந்திர இயக்கத்தினால் நிலையான சம நிலையினை உண்டாக்க முடியாது என்று கூறினார்.

நாசிச இயக்கத்தின் தனித்தலைவனாகிய அடால்ப் ஹிட்லரும் விளம்பர உத்திகளைத் திறமையாக முடுக்கி விட்டு, ஜெர்மானிய இனத்தின் உயர்நிலையினை உறுதிப்படுத்தினார், தன்னுடைய படைப்பான மெயின் காம்ஃப் (Mein Kanmf) என்னும் நூலில் செய்தித் தொடர்பு குறித்த அரசு உரிமைப் போக்கினை ஹிட்லர் விளக்குகிறார். கொள்கை பரப்பு யாவும் மக்களைச் சார்ந்தே அமைதல் வேண்டும். சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மிகக் குறைந்த அறிவுள்ள ஒருவனையும் சென்று சேரத்தக்க வகையில் அமைதல் வேண்டும். மக்களின் புரியும் தன்மை மிகக் குறைவானதே, ஆனால் அதற்கு நேர்மாறாக, மறப்பதில் மக்கள் மிகவும் திறம் பெற்றவர்கள் என்பதை அவர் அறிந்திருந்தார்.

நாசிகளைப் பொறுத்தவரை, உண்மை என்பது, 'நம் உண்மை' 'நமக்காக உண்மை' என்பதேயாகும். அந்நிலை ஜெர்மானிய மேலாண்மையும், நலனையும் மிகுவித்து அவர்களாட்சிக்கே உத்திரவாதமளிக்கும் உண்மையாக அமைந்தது.

பிளாட்டோ, மாக்கியவல்லி ஆகிய இருவரும் தகவல்தொடர்புச் சாதனங்களைக் கையாள்வதில் ஒருமித்த கருத்தைக் கொண்டிருந்தனர் என்பது வியப்பளிக்கக் கூடிய உண்மை.

பிளாட்டோ நல்லதைத் தீயதிலிருந்து காப்பதற்கு மேலாதிக்கம் வேண்டுமென்கிறார். மாக்கியவல்லி எத்தகைய அழிவிலிருந்தும் அரசைக் காப்பதற்கு மேலாதிக்கம் விழைகின்றார். மேலாதிக்கத்திற்கு வாதிடுவோர்

அனைவரும் மக்களியல்பு பற்றி நம்பிக்கையற்ற கருத்தினையே கொண் டிருந்தனர் என்பது கூர்ந்து நோக்கத்தக்கது.

மேலாதிக்க அரசு அமைப்பில், அரசின் குறிக்கோள்களையும், நோக்கங்களையும் செய்தித் தொடர்புச் சாதனம் முடிவு செய்யவோ, கேள்வி எழுப்பவோ இயலாது. அதற்கு மாறாக அவை அரசின் மிகப் ? பணிவான பணியாளனாகச் செயல்பட வேண்டும் என எதிர்பார்க்கப் படுகிறது. கம்யூனிசத்தைப் போலன்றி, மேலதிகார ஆட்சி, கொள்கை அடிப்படையில் பல்வேறு அரசு அமைப்புகள் பற்றி ஆய்வு செய்வதற்குத் தடையாக இருப்பதில்லை. இங்கு மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் நிலையான அதிகாரத்தைக் கீழ்ப்படுத்தும் அல்லது ஒழுங்கைக் குலைக்கும் செயலையும் செய்யக் கூடியது. டெனிஸ் மாக்வில் இக்கோட்பாட்டின் முதன்மைக் குறிக்கோள்களைக் கீழ்க்காணுமாறுசுருக்கிக் கூறுகிறார்.

1. மக்கள் ஊடகங்கள் நிலையான அரசுக்கு அடி பணிந்தே எப்பொழுதும் செயல்பட வேண்டும்.

2. பெரும்பான்மைக்கு ஊறு செய்யக் கூடாது.

3. ஆதிக்க அரசின் கருத்துகளுக்கு முரணாக அமைதல் கூடாது.

4. இவற்றைச் செயல்படுத்தச் செய்தித் தணிக்கை முறை பயன்படுத்த வேண்டும்.

5. மேலாண்மையைப் பொருந்தா முறையில் தாக்குதல், அரசின்

கொள்கைக்கு முரண்படுதல், ஒழுக்கவிதிகளுக்கு எதிரான போக்குகள் ஆகியவை குற்றங்களாகக் கருதப்படும்.

6. பத்திரிகையாளர்கள் தனிப்பட்ட எத்தகைய உரிமையும் அற்றவர்.(ஜே. மலான்சா, எண். கவரிங், 2001 : 145-147)

அரசு உரிமைக் கோட்பாட்டின்படி தகவல் தொடர்புச் சாதனங்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டில் வைப்பதற்குரியன. தகவல் தொடர்புச் சாதனங்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய நான்கு முறைகளை சீபர்ட் பின்வருமாறு கூறுகிறார்.

1. **தனியுரிமைச் சான்று முறை** (Patents system)
2. **உரிமை முறை**(licencing System)
3. **குற்றச்சாட்டு முறை** (Proseuction)
4. **தனிவரி முறை** (System of special Taxes )

1. **தனியுரிமைச் சான்று முறை** (Patents System)

16-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தை ஆண்ட டூடர்கள் (Tudors) அச்சுத் தொழில் தொடங்குபவர்களுக்குத் தனியுரிமைச் சான்று அல்லது தனி உரிமம் வழங்கினர். பின்பு இம்முறை ஒழுங்கு படுத்தப்பட்ட தொழில் முறையாக அமைந்தது. பல்வேறு வகையான வெளியீடுகளுக்குரிய தனியுரிமைச் சான்றுகள், அச்சகங்களுக்கு அளிக்கப்பட்டன. அரசு சம்பந்தப்பட்ட பணி களுக்குச் சான்றளிப்பதில் தனிக்கருத்து செலுத்தப்பட்டது. இங்கிலாந்து நாட்டில் இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக வழக்கில் இருந்த இம்முறை, பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தது.

மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சி, கல்விப் பெருக்கம், இதழ்களின் தேவை, தனியார் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி, சமய எழுச்சி. அரசியல் வளர்ச்சி போன்றன தனியுரிமைச் சான்று முறையைக் குலைத்தன.

2. உரிமம் அளிக்கும் முறை (Licencing System)

பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் வழக்கிலிருந்த மற்றொரு முறை உரிமம் அளிக்கும் முறையாகும். இம்முறை தணிக்கை முறையோடு கருதப்பட்டது. அதிக அளவில் வெளியீடுகள் வந்தபொழுது இம்முறை செயலிழந்தது.

3.குற்றச்சாட்டு முறை (Prosecution)

நிலைபெற்ற ஒழுக்க விதிகளை மீறுவதினால், நீதிமன்றத்தின் முன்னர் குற்றம் சாட்டுவது மற்றுமொரு முறையாகும். அரசத்துரோகம், அரசு எதரிப்புக்கிளர்ச்சி ஆகிய இரண்டுமே வெளியீட்டாளர்க்கு எதிராக எழுந்த குற்றச்சாட்டுகளாகும்.அரசத் துரோகக் குற்றம் மூன்று வகைப்பட்டன. அவை

1. ஆட்சியைக் கவிழ்ப்பது

2. ஆட்சியைக் கவிழ்ப்பதற்குரிய செயல்களில் ஈடுபடுதல்

3. அரசிற்கு எதிராகப் பிரச்சாரம் பண்ணுதல் என்பனவாகும்.

சர்வாதிகாரியை எதிர்த்தல் அவரது ஆட்சியின் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக அமைந்தது. இது மிகக் கொடிய அரசு எதிர்ப்புக் கிளர்ச்சியாகக் கருதப்பட்டுக் குற்றவாளிகள் மரண தண்டனைக்கு உரியவர்களாகக் கருதப்பட்டனர்.

4. கூலி பி பால் (சிறப்பு வரிகளின் அமைப்பு)

தனி வரி முறை தகவல் தொடர்புச் சாதனத்தைக் கட்டுப்படுத்து வதற்குரிய மறைமுக வழியாகப் பயன்படுத்தப்பட்டது. இதழ்கள் விற்பனையைக் கட்டுப்படுத்தி அதன் மூலம் பெறும் இலாபத்தைக் குறைத்தல்,அதிக விற்பனையுடைய இதழ்களைக் கட்டுப்படுத்த இம்முறை கையாளப்பட்டது.

**அரசுரிமைக் கோட்பாட்டின் முதன்மைத் தன்மைகள்**

1. ஆட்சி செம்மையாக நடைபெறவும், அரசின் கொள்கைகளை மக்களிடம் பரப்புவதற்கும் பத்திரிகைகள் உதவி செய்ய வேண்டும்.

2. ஏற்றுக்கொள்ளப்பெற்ற அதிகார விதிகளை, சட்டங்களை, ஒழுக்கங்களைப் புறக்கணித்துத் தகவல் தொடர்புக் கருவிகள் புதிதாக எதையும் வெளியிடக் கூடாது.

3. தகவல் தொடர்புக் கருவிகள் எப்போதும் ஏற்றுக்கொள்ளப் பெற்ற அதிகாரத்திற்கும் அமைப்புகளுக்கும் கட்டுப்பட்டே நடக்க வேண்டும்.

4. சமுதாயத்தின் பண்பாடு, நாகரிகம், நீதி, ஒழுக்கம், அரசியல் கருத்துகள் போன்றவற்றை அவமதித்து எதிர்க்கக் கூடாது.

5. இக்கொள்கையை நடைமுறைபடுத்தத் தணிக்கை முறையை மேற்கொள்ளலாம்.

6.அதிகார அமைப்பைத் தாக்குதல், அரசின் கொள்கைகளுக்கு மாறாக நடத்தல், ஒழுக்க விதிகளுக்கு முரணாகச் செயல் படுதல் போன்றவை குற்றவியல் நடவடிக்கைகளாகக் கருதப்படும்.

7. செய்தித்துறை நிறுவனங்களுக்கோ, பத்திரிகையாளர்களுக்கோ, உறுப்பினர்களுக்கோ, தகவல் தொடர்புக் கருவியின் அலுவலர் களுக்கோ அவர்களது அமைப்புகளுக்கோ எவ்வகைச் சுதந்திரமும் கிடையாது.

8. தனியாரிடம் உள்ள பத்திரிகைகளும் அரசின் கட்டுப் பாட்டுக்குள் இயங்கும் மக்களிடம் செய்தியை மறைக்கத் தணிக்கை முறை இருக்கும்.

9. பத்திரிகை தொடங்குவதற்கு அனுமதி தரும் போது அரசு மிகவும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படும். அரசின் அனுமதி இல்லாமல் பத்திரிகை தொடங்க முடியாது. (வெ. கிருட்டிணசாமி, 1992:326-327)

இக்காலத்தில் பத்திரிகைச் சுதந்திரம் என்று பெயரளவில் சொல்லப்பட்டாலும், நிலையை முற்றிலுமாக மாறிவிடாமல் பல நாடுகளில் அரசுரிமைக் கோட்பாடு கொண்டதாகவே விளங்குகிறது.

1. முழு அச்சகக் கோட்பாடு

சோவியத் யூனியன், சீனா, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளில் அச்சகங்களின் கட்டுப்பாடு முழுமையாக ஆட்சியாளரிடமே உண்டு. அவர்களை மீறி எதுவும் அச்சிட்டு வெளியிட முடியாது.

2. பெயரளவுச் சுதந்திரம்

கொலம்பியா, எகிப்து, சிரியா ஆகிய நாடுகளில் பத்திரிகைச் சுதந்திரம் கொள்கை அளவிலேயே வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், செயல்முறை என்று வரும் போது கண்காணிப்பு பலமாகவே இருக்கும்.

3. பத்திரிகைச் சிறப்புச் சட்டங்கள்

தென் ஆப்பிரிக்கா, ஈரான், ஈராக், இந்தியா, பாகிஸ்தான், லெபனான் ஆகிய நாடுகளில் பத்திரிகை ஆசிரியர்களைக் கைது செய்ய, சிறப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அதிகார வர்க்கத்தினரைக் கண்டித்து யாரேனும் எழுதி விட்டால் அந்தப் பத்திரிகை ஆசிரியருக்குச் சிறைத் தண்டனையோ, அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்க இந்தச் சட்டங்கள் வழி வகுக்கின்றன.

4.தந்திர அடக்கு முறை

துருக்கி, அர்ஜென்டினா மற்றும் இந்தோனேஷியாவில் 'இரும்புக் கரம்' 'கொண்டு பத்திரிகைகளை அடக்காமல் தந்திரமாகத் தட்டிக் கொடுத்தும், இனிமையாகப் பேசியும், பத்திரிகைகளைத் தம் வழியில் ஆட்சியாளர்கள் கொண்டு செல்கின்றார்கள். ஆனால், இதுவும் கூட ஆட்சியுரிமைக் கோட்பாடு என்றே வழங்கப்படும் (சிவ. சசிரேகா, 1992: 50-52)

i) கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாடு (Libertarian Theory)

17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜான்மில்டனை கட்டற்ற சுதந்திரக் கோட்பாட்டின் தந்தை' என்று கூறலாம். தவறானதை விடுத்து நியாய மானதைப் பேசுதல், தீயதைத் தவிர்த்து நன்மையைச் செய்தல் பொய்மையை நீக்கி உண்மையைக் காட்டுதல் ஆகியவையே கருத்து.சுதந்திரத்திற்கு அடையாளங்களாகும். கோட்பாட்டினைப் பின்பற்றி, இதனை மேலும் B L (John Stuart Mill), (John Erskine) மில்டன் வகுத்த இக் வளர்த்தவர்கள் ஜான் (Thomas Paine), (Thomas Jefferson) ஆகியோர் ஆவர். இவர்கள் அனைவரும் குடியாட்சி முறையினைத் தீவிரமாக ஆதரித்தவர்கள்.

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், பகுத்தறிவு, இயல்பான உரிமைகள் ஆகியவற்றில் இவர்கள் அதிக நம்பிக்கை கொண்டிருந்தனர். மக்களுக்குச் செய்திகளைச் சொல்லுதல், பத்திரிகைகளை விற்றல், பொழுதுபோக்கு அம்சங்களை வழங்குதல், உரிமையை நிலை நாட்டுதல், அரசு தவறு செய்யாதவாறு கண்காணித்தல் ஆகியவை பத்திரிகைகளின் இன்றியமையாய் பணிகள் என்று அவர்கள் கருதினார்கள். கட்டற்ற இதழ் சுதந்திரத்தைப் பின்பற்றும் நாடுகளில் அச்சகங்கள் தனியார் உடைமையாகவும், அவதூறு (Defamation) (Obscenity), (Impropriety), அமைதியின்மை (War - time Sedition) ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டவை யாகவும் இருத்தல் வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், பிரிட்டனிலும், மேற்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிலும் இத்தகைய கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாடு நடைமுறையில் இருக்கின்றது.

ஜான் ஸ்டூவர்ட்மில் கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாட்டுக் கொள்கையின் சாரங்களை சிறப்பு மிக்க தம் கட்டுரையாகிய 'உரிமை'யில் கூறுகிறார். மக்களினத்தில் ஒரே ஒருவரைத் தவிர பிறர் யாவரும் ஒரே கருத்தைக் கொண்டிருந்து, ஒருவர் மட்டும் மாறுபட்ட கருத்தைக் கொள் வாரானால் அவ்வினம் அந்த ஒருவரை அமைதிப்படுத்தி விடும், அடக்கி விடும். ஆனால், அந்த ஒரு மனிதர் முழு அதிகாரம் பெற்ற ஒருவராக இருந்தால், அவர் மனித இனம் முழுமையையும் அமைதிப்படுத்தி விடுவார். அடக்கிவிடுவார். அது நியாயமாகி விடும். எண்ணம் சரியாக இருக்குமானால் அவர்கள் உண்மைக்குப் பதிலாகத் தவற்றினைக் கற்றுக் கொள்ளும் நிலை உருவாவதில்லை. அது தவறாக இருக்கு மானால் உண்மைத் தவறோடு மோதியதின் விளைவாக, தெளிவான பார்வையும், விரும்பத்தக்க எ மனிதனின் இயல்பு, சமுதாயத்தின் பண்பு, மனிதன் சமுதாயத்தோடு கொண்டுள்ள உறவு, அறிவு, உண்மை ஆகியவற்றின் தன்மை இவற்றைப் பற்றிய கேள்விகட்குரியவைகளை அடிப்படையாகக் கொண்டே, கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாடு அமைந்துள்ளது.

மனிதன் சிந்திக்கும் இயல்புடையவன். ஆதலால் அவனைச் சுற்றியுள்ள உலகை இயங்க வைக்க முடியும். அவன் நலன்களைப் பெருக்குவதற்குரிய முடிவுகளை எடுக்க முடியும். மனிதன் சிந்திப்பதில், நினைவு கூர்தலில், பட்டறிவினைப் பயன்படுத்துவதில், அவற்றின் மூலம் முடிவு காண்பதில் விலங்கிலிருந்து வேறுபடுகிறான். இத்தகைய ஒரு தனித்திறமையினால், மனிதன் தனிப்பிறவியாகிறான். தன்னேரிலாத் தன்மையடைகிறான், நாகரிகத்தின் தலையாய உறுப்பாகிறான், அதனை வளர்ச்சியுறச் செய்கிறான். தனிமனித நிறைவே இறுதி நோக்கம் எல்லை அதுவே மனிதனின் குறிக்கோள் - சமுதாயத்தின் குறிக்கோள்- அரசின் குறிக்கோள் ஆகிறது. அரசே மனிதப்பெரு முயற்சியின் உயர்ந்த வெளிப் பாடு என்ற கருத்தினைக் கடுமையாக எதிர்க்கின்றனர். இக் கொள்கையினர் தனிமனிதன் தனித் திறமைகளை உணர்வதற்குரிய, சூழ்நிலைகளை உண்டாக்குவதற்கு அரசு இயங்குகிறது. சமுதாயத்தை உருவாக்கும் தனி மனிதனைக் காட்டிலும் சமுதாயம் சிறப்பான முக்கிய ஒரு தனி உறுப்பு என்ற கருத்தை இவர்கள் ஒப்புவதில்லை. அறிவு, ஞானம், ஆகியவற்றை பொறுத்த வரையில் கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாடு பண்டைய கிறித்துவ சமயக் கருத்தை ஒத்திருக்கிறது. சரி தவறு, நன்மை தீமை, உண்மை பொய் ஆகியவற்றை வேறுபடுத்துவதில் மனிதனிடத்து உள்ளார்ந்த ஆற்றல் பொருந்தியுள்ளது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.

**கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாடு வளர்ச்சி**

தனிமனித வாழ்க்கைநிலை குறித்துக் கவலையுறும் தன்மை, கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாட்டுக்கு முன்னர் தோன்றிய கொள்கையாகும். பிளாட்டோ, அரிஸ்டாட்டில், ரூசோ போன்ற அறிஞர்கள் தனிமனித ஆற்றலை அரசுக்காகவோ, சமுதாயத் திற்காகவோ தியாகம் செய்யவில்லை.பதினெட்டாம் நூற்றாண்டில் எழுந்த அறிவியல், புவியியல், கண்டுபிடிப்புகள் பொறுமையான ஆய்வின் மூலம் உலகத்தையேண்ணமும் உடைய சீரியதொரு பயனை இழக்க நேரிடும்.

மக்கள் இறைமைக்' கொள்கையைப் பரப்பியஜான்லோக் என்பவர், "அரசு என்பது மக்கள் தங்கள் அதிகாரத்தை ஒப்படைத்திருக்கும் ஓர் அறங்காவல் அமைப்பு மட்டுமே ஆகும்" என்று கூறினார். அதனால் ஒப்படைத்த அதிகாரத்தைத் திரும்பப் பெறுவதற்கு மக்களுக்கு உரிமையுண்டு என்றார். அவருடைய அரசியல் கொள்கை இறைமை அதிகாரத்தின் எல்லையை வரையறை செய்தது. மக்கள் உரிமையை மதித்து, வேறுபட்ட சமயக் கருத்துகள் அரசியல் ஒருமைப்பாட்டுக்கு ஊறு செய்யா வகையில் பொறுத்துக்காத்து பொருளாதார நிலைக்கு ஒத்து, மனித முயற்சிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்றார். இயற்கை விதியும், சமுதாயக் கட்டமைப்பும் அவரது அரசியல் கொள்கையின் அடிப்படைக் கூறுகளாகும். அமெரிக்க, பிரஞ்சுப் புரட்சிகளுக்கு லோக் அவர்கள் ஒரு தூண்டுதலாக அமைந்தார்

ஜான் மில்டன் 'ஆரியோபெசடிகா' (Ariopagitica) என்ற தன் நூலில் இருந்து சுதந்திரம் பற்றி உணர்ச்சியூட்டும் ஆய்வு ஒன்றினைச் செய்துள்ளார். மனிதன் தன் அறிவினைப் பயன்படுத்தி நல்லது கெட்டதை வேறுபடுத்திக் காண முடியும் என்று உறுதியுடன் நம்பினார். 'உண்மை' தனித்தன்மை பெற்ற சக்தியோடு நிலைத்திருக்கும் என்பதை உறுதியாக நம்பினார். வெளிப்படையான கட்டுப்பாடற்ற விவாதத்தில் 'உண்மை' நிலைபெறும் என்பது அவர் கருத்து.

ஜான்ஸ்டுவர்ட் மில் கருத்துச் சுதந்திரத்திற்கு நான்கு அடிப்படைக் கருத்துகளைக் கூறுகிறார்.

1. நம் கருத்தைக் கூறவிடாமல் தடுத்தலால், உண்மையைப் பேச விடாமல் நாம் தடுத்துக் கொண்டிருக்கிறோம்.

2. தவறான கருத்துக் கூட முழுமையான உண்மையை அறிவ தற்குரிய - ஒரு தினையளவு உண்மையைக் கொண்டிருக்கலாம்.

3. எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட பொதுக் கருத்து, முழுமையாக, உண்மையாக இருப்பினும் பொதுமக்கள் பகுத்தறிவு அடிப்படையில் ஆராய்ந்து ஏற்றுக்கொள்வதில்லை.

4.பொதுக் கருத்து அவ்வப்போது வாதத்திற்கு உட்படாவிட்டால் அதன் சக்தியை இழக்கின்றது.

கொள்கைப் பிடிப்பும் செயல்பாடும் உடைய தாமஸ் ஜெ∴பர்சன், "முடிவெடுப்பதில் தனிமனிதன் தவறாகச் சென்றாலும், குழுவாகச் செயல் படும் பொழுது, தவறான முடிவெடுப்பதற்கு வாய்ப்பில்லை" என்று நம்பினார். இச் செயல்பாட்டை உருவாக்கத் தனிமனிதர்கள் செய்தியறி தலில் பயிற்றுவிக்கப்பட வேண்டும். இத்தொண்டினைச் செய்வதற்கு - செய்திகளைத் தர, கல்வி புகட்ட தகவல் தொடர்புச் சாதனங்களை அவர் எதிர்நோக்கினார்.

இதழ்களுக்குக் குறைந்த அளவுக் குறுக்கீடுகளே இருக்க வேண்டும் என்று ஜெ∴பர்சன் கருதுகிறார். விமர்சனங்களைத் தாங்கும் எதிர்த்து நிற்கும் விருப்பமே ஒரு கூட்டாட்சியின் வலிமை என்பது அவர் எண்ணம்.

உரிமை பெற்ற ஒவ்வொரு மனிதனும் மக்களிடத்துத் தன்னுணர்வு களைப் பகிர்ந்து கொள்வதற்கு ஐயமற உரிமையுடையவனாகிறான். இதைத் தடுப்பதது, இதழ்களின் உரிமையை அழிப்பதாகும். ஆனால் இதழாசிரியர் ஒழுங்கற்ற, இன்னலுறுத்தும் சட்டத்துக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டால், அவனது மடத் துணிச்சலுக்கு ((temerity) உரிய பலனை அடைய வேண்டியது வரும். இவ்வாறாக, தனி மனித விருப்பம், இன்னும் உரிமை படைத்தே இருக்கிறது. உரிமை - விருப்பம் தவறாகப் பயன்படுத்தப்படும் பொழுதுதான் சட்டப்படியான தண்டனைக்கு உரியதாகிறது.

உரிமை விரும்புவோர் உண்மையையும், தவற்றினையும் மக்களுக்குக் கொடுப்பதில் தவறில்லை என்று எண்ணுகின்றனர். மக்களிடத்துக் காணப்படுகின்ற திறமைகளை அவர்கள் மிகவும் நம்புகின்றனர். அத்திறமைகளினால் சமுதாயத்துக்குத் தீங்கு விளைவிப்பதை நீக்குகின்றனர். சமுதாயத்துக்கும், தனி மனிதனுக்கும் உரிய தேவையை நிறைவு செய்வதை ஒப்புக் கொள்கின்றனர். இதுவே 'தன்னுரிமைப்

போக்கு' என்று அழைக்கப்படுகிறது. 'சிந்தனைகளின் திறந்தவெளிச்சந்தையும்', 'தன்னுரிமைப் போக்கும்' 'கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாட்டின் கருத்து வரையறைகளை (Conceptual boundaries) விளக் குவனவாகும். அரசின் கருத்துப் பரிமாற்றத் தனி உரிமையை (ஏகபோக) இக்கொள்கை கடுமையாக எதிர்க்கின்றது. இவற்றில் தனியார் உடைமையையும், நேரிய, சீரிய போட்டியினையும் பரிந்துரைக்கிறது. பொருள் படைத்தவர் செய்தித்தாள்களையோ, இதழ்களையோ, துணிச்சலோடு துவங்கலாம். பிற துறைத் தொழில்கள் போன்று, இலாபம் ஈட்டுவோர் நிலை பெறுகின்றனர். இலாபம் என்பது உறுதியாக மக்களாலேயே முடிவு செய்யப் படுகிறது. இக்கோட்பாட்டினர் பொருளாதாரச் சீர்மை பற்றிச் சிந்தனை செய்யவில்லை. தகவல் தொடர்புச் சாதனங்கள் தொழில் நுட்பத்தில் பிற்போக்கான நிலையில் இருந்த காலத்தில் செய்தித்தாள்கள் வாசகர்களின் கட்டணங்களைக் கொண்டே சமாளிக்க முடிந்தது. தொழில்நுட்பத்தில் மிகுந்த செலவும் மிகுதியான வெளியீட்டுச் செலவும் விளம்பரத்தைத் தவிர்க்க இயலாததாகிவிட்டன. விளம்பரங்களினால் வரும் வருமானம், தகவல் தொடர்புச் சாதனங்களை அரசாங்கக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க முடியும். ஆனால் விளம்பரதாரர்கள் கட்டுப்பாட்டுக்குள் அவை அடங்கிவிட வாய்ப்புள்ளது.

செய்தித்தொடர்புச் சாதனங்கள் அரசாங்கத்தின் தலையீடின்றி, இயங்க முடியாத இக்கட்டான சிக்கலில் இருப்பதை உணரலாம். அரசாங்கத்தின் பங்கு எந்த அளவுக்கு, எந்தப் பகுதிகளில் அமைய வேண்டும் என்பது எப்பொழுதும் ஆய்வுக்குரிய ஒன்றாக இருந்து வருகிறது. பொதுவாகப் பெரும்பான்மை நாடுகளில் தொலைபேசி, அஞ்சல் துறைகள் அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. மேலும் அரசு ஏற்றுமதி, இறக்குமதிகளையும், வரியமைப்புகளையும் கட்டுப்படுத்துகிறது. இவற்றின் மூலம் அரசு தகவல்தொடர்புச் சாதனச்செயல்பாட்டைக் கட்டுப்படுத்த இயலும், நீதித்துறையும் கட்டுப்பாட்டில் பெரியதொரு பணியைச் செய்கிறது.

அனைத்துக் குடியாட்சி அரசுகளும் தனிமனித மதிப்பு, பெருமை. தகுதி ஆகியன பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை ஒப்புக் கொள் கின்றன. அரசு ஊழியர் குறித்துக் கீழ்த்தரமான சொற்களைப் பயன் படுத்தும் பொழுது, அச்செயல் மிகவும் சிக்கலானதாக மாறிவிடுகிறது. அதே நேரத்தில் அரசு ஊழியா பொதுமக்கள் திறனாய்வுக்கும் (விமாசனத் துக்கும்) உட்படக் கூடியவராவர். இதன் காரணமாக அரசு ஊழியர் அவதூறுச் சட்டத்தின்படி மிகச் சிறிது பாதுகாப்பே பெறுகின்றனர்.

கீழ்த்தரமான, பால் உணர்ச்சியைத் தூண்டும் கருத்தினை வெளி யிடுவதைத் தடை செய்வதைக் கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட் பாட்டாளர்கள் ஒத்துக் கொள்கின்றனர். ஒழுக்க நெறி நீதிமுறைமை (Morality) என்பதை விளக்குவதற்கு முடியாமையால், கீழ்மை (Obsecurity) என்பதை வரையறை செய்யவும் இயலாததாகும்.

கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாட்டினர் தகவல் தொடர்புச் சாதனம் ஆற்ற வேண்டிய இரண்டு இன்றியமையாப் பணிகளைக் குறிக்கின்றனர். அவையாவன:

1. அரசாங்கத்தின் மீது மீள் தடையாகச் செயல்படுதல்.

2. முதியோர் கல்வி வளர்ச்சிக்கு ஒரு கருவியாக உதவுதல்.

அரசு உரிமைக் கோட்பாடு, அரசு தன் மதிப்பினைப் பாதுகாப்பதை ஒப்புக் கொள்வதைப் போல், கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாடு தனிமனித உரிமையை ஒப்புக்கொள்கிறது. கீழ்த் தரமான வெளியீட்டி லிருந்து பாதுகாப்பளிக்கிறது. இரண்டு வகைக் கொள்கைகளும் கல்வித் துறையில் தகவல் தொடர்புச் சாதனப் பணிக்கு முதன்மை தருகின்றன.

கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாட்டாளர் கொள்கையின் மிகப் பெரிய பயன் / விருப்பு வெறுப்பற்ற செய்தி எழுதும் முறை எனலாம். (Objective Reporting) "अल ा 2 फळना" (Facts of the day) உள்ளபடி வெளிப்படுத்துவதே அவர்களது ஒரே கடமை என்று செய்தியாளர்கள் கருதினர்.

அரசுச் செய்தி நிறுவனங்களை அணுகுவது குறித்துக் கட்டற்ற இதழ்

சுதந்திரக் கோட்பாட்டினர் புலனாய்வு தொடங்கினர். அரசாங்க நடவடிக்கைகள் பல தனி மனிதனின் வாழ்க்கையில் குறுக்கீடு செய்வ தாகக் கண்டுபிடிக்கப்பட்டது. தகவல் தொடர்புச் தொழில் துறை அமைப்புகளின் வாயிலாக, அரசு நடவடிக்கைகள் அனைத்தும் தங்கட்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்று தீர்மானித்தன.

இருபதாம் நூற்றாண்டில் திரைப்படம் ஒரு தகவல் தொடர்புச் சாதனமாகிவிட்டது. திரைப்படங்கள் திரையரங்குகளுடன் கொண்ட ஒப்புமைகள் குறைந்து, இதழ்களோடு கொண்ட ஒத்தத் தன்மைகள் பெருகின. கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாட்டினர் துணிச்சலான கேள்வி ஒன்றை எழுப்பினர். இதழ்கள் உரிமை யோடு இயங்க திரைப்படம் மட்டும் சான்றளிப்புக்கு ஏன் உட்படுத்தப்பட வேண்டும்? தணிக்கை ஏன் செய்யப்பட வேண்டும்? செய்தித்தாள்களுக்குக் கொடுக்கப்படும் உரிமைகள் அனைத்தும் திரைபடங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் வாதிட்டனர்.

iii) சமுதாயப் பொறுப்புணர்ச்சிக் கோட்பாடு (Social Responsiblity Theory)

கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாட்டின் விரிவாக்கமே சமுதாயப் பொறுப்புணர்ச்சிக் கோட்பாடு ஆகும். அதாவது, ஒரு தனி மனிதனைப் பற்றிய அவதூறு, ஆபாசம் மற்றும் முறையின்மைச் செய்திகளைக் கூறும் வழியில் செல்லாமல், அதே நேரத்தில் அந்தத் தனிமனிதரால் தீங்கு நிகழுமானால் அதைச் சுட்டிக் காட்டுகின்ற பொறுப்புணர்ச்சியோடு பத்திரிகை விளங்க வேண்டும். "ஒரு பத்திரிகையானது சமுதாயத்தில் தனக்குள்ள பொறுப்பினை உணர்ந்து அதற்கேற்றார்போல் நடந்து கொள்வது சமுதாயப் பொறுப்புக் கோட்பாடு எனப்படும்". (வெ.கிருட்டிணசாமி 1992 : 337)

சமுதாயப் பொறுப்புணர்ச்சிக் கோட்பாடானது அரசு உரிமைக் கோட்பாட்டுக் கொள்கை, கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாட்டுக் கொள்கை இரண்டின் கலவையாகும். சுதந்திரக் கோட்பாட்டு இதழ் களுக்கு முழுமையான உரிமைக்கு உறுதியளிக்கிறது. இந்த உரிமை பொறுப்பற்ற முறையில் பயன்படுத்தப்பட்ட பொழுது உண்மை, உணர்வு சீரிய எண்ணம் கொண்ட பொதுமக்கள், சமுதாயக் கட்டுப்பாட்டுக் கொள்கையை உருவாக்கி, எதிர்ப்பைப் புலப்படுத்தினர்.

இக்கொள்கை அமெரிக்காவில் தோன்றியது. கி.பி 1923 இல் அமெரிக்கப் பத்திரிகை ஆசிரியர்கள் குழு ஏழு பத்திரிகை விதிகளை உருவாக்கியது. இதிலிருந்து சமுதாயப் பொறுப் புணர்ச்சிக் கோட்பாடு தோன்றியது.

ஒழுக்கம், எல்லோருக்கும் ஒரே நீதி என்னும் குறிக் கோள்களை உடையது. பொறுப்பற்றவர்களிடம் கொடுக்கும் சுதந்திரமும் உரிமை களும் சலுகைகளும் சமுதாயத்திற்குக் கேடு நல்கும். அவர்கள் பொறுப்பற்ற நிலையில் மக்களுக்குச் செய்திகளை

வழங்கினால், மக்கள் மூடர்களாகி விடுவர். இதைத் தடுப்பதற்காகச் சமுதாயப் பொறுப் புணர்ச்சிக் கோட்பாடு தோன்றியது. பத்திரிகைத் துறையைத் தவறான முறையில் பயன்படுத்தக் கூடாது என்று இக்கோட்பாடு கூறுகிறது.

சமுதாயப் பொறுப்புணர்ச்சிக் கோட்பாடு மிகவும் பயனுள்ள கோட்பாடு ஆகும். இதில் பத்திரிகை போன்ற தனியார் நிறுவனங்களும், வானொலி போன்ற பொது நிறுவனங்களும் அடங்குகின்றன. இவை குடியரசு முறையில் செய்திகளை வழங்கும் சமுதாயப் பொறுப்பினை ஏற்றுள்ளன. இவை சமுதாயப் பொறுப்பிற்கும் சமுதாயச் சுதந்திரத் திற்கும் ஒரு சமன்பாட்டைக் காண்கின்றன.

சமுதாய பொறுப்புணர்ச்சிக் கொள்கை, செய்தி நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அனைத்துச் செயற்பாடுகளை ஒப்புக்கொள்கிறது. ஆனால் உரிமையாளர்களின் தன்னிச்சையான விளக்கத்தையும், பழக்கத்தையும் எதிர்க்கிறது. செய்தி நிறுவனங்கள் பொருளாதாரத் தன்னிறைவு கொண்டிருக்க வேண்டும் என்பதை ஆதரிக்கிறது.ஆனால் சில சந்தைக் கூடங்களில் பொருளீட்டுவதை ஒப்புவதில்லை. சமுதாய பொறுப்புக் கொள்கை ஆங்கில அமெரிக்கச் சிந்தனையாகும். வளமான இங்கிலாந்து அமெரிக்க அறிஞர்களின் சிந்தனையில் திளைத்தக் கொள்கையாகும்.

இங்கிலாந்து நாட்டில் 'ராயல் கமிஷன்' இதழ்களின் பொதுக்குழு ஒன்றை உருவாக்கியது. பொறுப்புணர்ச்சியை இதழ்களிடையே ஊக்குவிப்பதற்கும், மக்கள் பணியை வலியுறுத்துவதற்கும் இதனைத் தோற்றுவித்தது. செய்தி இதழ்களின் தவறானப் போக்கினைக் கண்டித்தது. குற்றச்சாட்டுகளை ஆய்வு செய்தது. முறையீடுகள் நிரூபிக்கப்பட்டால் குறைகள் தீர்க்கப்பட்டன. குற்றமில்லையேல் பதிலளிக்கப்பட்டது.

சமுதாயப் பொறுப்புணர்ச்சிக் கொள்கையை உருவாக்குவதில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் அமைக்கப்பட்ட செய்தித்தாள் உரிமைக்குழு பெரும் பங்காற்றியது. இக்குழுவின் ஆய்வறிக் கையான சுதந்திரமும் பொறுப்பும் உடைய இதழ்கள்' என்பதும், வில்லியம் கே. ஹோக்கிங் (William K. Hoeking) என்பவர் எழுதிய 'கொள்கை அமைப்புச் சட்டம்' (A Frame Work of Principles) தக்கவை.

பத்திரிகைக்குரிய ஆறு பொறுப்புகளை இக்கோட்பாடு குறிப்பிடு கின்றது. அவையாவன.

1. சமுதாய நடப்புகள் பற்றிய தகவல்கள், ஆய்வுரைகள், பொது மக்கள் விவகாரங்கள் மீதான விவாதம் ஆகியவற்றை வழங்குதல்.

2. சுயாட்சி பற்றி மக்களுக்கு அறிவித்தலும் அறிவூட்டலும்.

3. அரசுக்கு எதிரான தனிநபர் உரிமையைப் பாதுகாத்தல்.

4. பொருட்களை விற்போர், வாங்குவோர், விளம்பரப்படுத்துவோர் ஆகியோரை ஒருங்கிணைப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார சம நிலையைப் பராமரித்தல்.

5.பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்டிருத்தல் (கலை, கைத்தொழில், ஓய்வு நேர நிகழ்ச்சிகள் ஆகியவற்றை வழங்குவதன் மூலமாக மக்களுக்கு இனிமையான பொழுதுபோக்குச் சாதனங்களுக்கு வழி வகுத்தல்)

6. தனது பொருளாதாரத் தன்னிறைவினைக் காத்துக்கொள்வதன் மூலம் புறச்சக்திகளால் அடிமைப்படுத்தப்படாது சுதந்திரத்தை நினைவூட்டல்.

இவையனைத்தும் சமுதாய நலன் கருதி மேற்கொள்ளப்பட வேண்டியவை. பொதுமக்களின் கருத்தை உருவாக்குதல்,கருத்து களையும், பிரச்சினைகளையும் நன்முறையில் விவாதிக்கச் செய்தல், தொழில் நேர்மையைப் பாதுகாத்தல் எனும் சமூக நீதி இதனால் பராமரிக்கப்படும்.

இக்கோட்பாடு தனிமனிதச் சுதந்திரம், செய்திகளைத் தேர்வுசெய்யும் சுதந்திரம், தகவல் தொடர்புச் சாதனம், சமூகத்தில் தகவல் தொடர்புச் சாதனங்களின் பொறுப்பு போன்றவற்றிலுள்ள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான வழியைக் கூறவில்லை.

இக்கோட்பாடு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 20-ஆம் நூற்றாண்டில் உருவானது. இன்று இக்கோட்பாடு ஆங்கிலோ அமெரிக்க நாடுகளில் சிறந்த சான்று என்ற சிறப்பினை அடைந்துள்ளது. (சிவ. சசிரேகா, 1992 : 53-54)

சமுதாயப் பொறுப்புணர்ச்சிக் கோட்பட்டின் வரலாறு

கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாட்டினை ஆய்வு செய்த விளைவில் உருவானது சமுதாயப் பொறுப்புணர்ச்சிக் கோட்பாடு. மக்களை அடையும் முயற்சியில், செய்தி அமைப்புகள் விளம்பரம் செய்வதில் கட்டுப்பாடற்ற வளர்ச்சி கொண்டன. மக்களின் அளவற்ற

ஆதரவினால் அவை அரசுக்கு அச்சுறுத்தலாக இருந்தன. மக்களை விழிப்பூட்டும் கருத்தடிப்படையில் அறிஞர்களிடையே ஐயப்பாடு உண்டாயிற்று. இதழியல் தொழில் துறையினர் இடையே பணி உணர்வு வளர்ந்தது. தியோடர் பீட்டர்சன் என்பவர் இருபதாம் நூற்றாண்டின் ஆய்வுக் கருத்துகள் பற்றிக் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

1. அரசியல்,பொருளியல் துறைகளில் மாறுபட்ட கருத்துகளை மறுத்து தங்கள் நலனுக்காக இதழ்கள் அளவற்ற அதிகாரத்தினைக் கொண்டன. இதழ் உரிமையாளர்கள் தங்கள் சிந்தனைகளையே பரப்பினர்.

2. பெரிய தொழில் நிறுவனங்களின் அடிவருடிகளாக (Subservient) இருந்த விளம்பரதாரர்கள், ஆசிரியர் தலையங்கங்களையும், கருத்துகளையும் கட்டுப்படுத்த அனுமதித்தனர்.

3. இதழ்கள் சமுதாய மாற்றத்தைக் தடுத்திருக்கிறது.

4. அன்றாட நிகழ்ச்சிகளை வெளியிடுவதில், இன்றியமையாச் செய்திகளைக் காட்டிலும், மேற்போக்கான, கிளர்ச்சியூட்டும் நிகழ்ச்சிகட்கு மிகுந்த கருத்து செலுத்துகிறது. பொழுதுபோக்கில், மகிழ்வூட்டுவதில் கருத்துக்குறைவுடன் பின்னணியில் உள்ளது.

5. மக்கள் ஒழுக்கநெறிக்கு ஆபத்து விளைவித்து வருகிறது.

6.செய்தித்தாள். 'வாணிப இனம்' என்றழைக்கப்படும் செல்வக் கூட்டத்தால் கட்டுப்படுத்தப்படுவதால் இத்தொழிலில் புதிய தொழில் முனைவோர் புகுந்து வெற்றி பெறுதல் மிகக் கடினமாகிறது. ஆகையால் தாராளமான 'சிந்தனைகளின் திறந்த வெளிச்சத்கை' என்ற கொள்கை அடிபட்டுப் போகிறது.

செய்தித்தாள் உரிமைக்குழு இதழ்கள் நிறைவேற்ற வேண்டிய ஐந்து இன்றியமையாத கடமைகளை வற்புறுத்தியது.

1. அன்றாட நிகழ்ச்சிகள் குறித்த உண்மையான, சுருக்கமான அறிவுக்குகந்த செய்தி விளக்கங்களை வெளியிடுதல்.

2. விளக்கம் மற்றும் விமர்சனங்கள் குறித்த ஒரு கருத்து மேடையாக இதழ்கள் துலங்குதல்.

3. பல்வேறு சமுதாயக் குழுக்களுக்குத் தகுந்த பிரதிநிதியாக இருத்தல்.

4. சமுதாயத்தின் கொள்கைகளையும், குறிக்கோள்களையும், நீதிகளையும் வெளியிட்டு விளக்கமளித்தல்.

5. சம காலத்திலுள்ள அறிவார்ந்த சிந்தனைகளை மக்களுக்குக் கிடைக்கச் செய்தல்.

நாட்டு நடப்பினை, நடந்ததை, நிகழ்ச்சியை உண்மையாக வெளி யிடுவது மட்டும் போதுமானதன்று. நிகழ்ச்சி குறித்த உண்மையினையும் வெளியிடுவது இன்றியமையாததாகும். எனினும் செய்தியாளர்கள் 'உண்மை' என்பது விலகிச் செல்லும் (Exclusive) தன்மையது என்று கருதுகின்றனர். வில்லியம், ரிவர்ஸ் மற்றும் வில்பர் ஷ்ராம் ஆகியோர் தங்கள் படைப்பாகிய மக்கள் ஊடகத் தொடர்பியலில் பொறுப்புணர்வு எனும் நூலில் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றனர். சமூகம் தகவல் தொடர்புச் சாதனங்களைப் பொறுப்புடன் நடத்தும் மூன்று பெரிய கருவிகளைக் கொண்டுள்ளது. ஒன்று அரசாங்கம், மற்றொன்று செய்தித்தாள்கள் மூன்றாவது 'பொதுமக்கள்' என்பனவாகும். மாற்றங்களை வளர்ப்பதற்கு மூன்றினுக்கும் ஆற்றல்கள் வேறுபட்ட அளவில் உளதாயினும் ஏதேனும் ஒன்று மட்டும் மாற்றத்தை உண்டாக்கிவிட முடியாது, எதையும் விலக்கிட இயலாது, மூன்றிடத்தும் விரும்பத்தக்க சமநிலையை பாடுபட்டு உருவாக்கிட வேண்டும்.

**தகவல் தொடர்புச் சாதனம்**

செய்தித்தாள்கள் தரமான கருத்தையே வெளியிட வேண்டும். இதனை முற்படுத்த இரண்டு வழிகள் உள்ளன. 1. தன்னொழுங்கு (Self regulation) 2. ஊழியத்துறைப் பணியாளரிடம் தொழில் ஒப்படைப்பு (Professionolisation) என்பனவாகும். இதழாளர்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றி அமெரிக்க இதழாசிரியர் சங்கம் வரையறை செய்துள்ளது. அவைகளாவன பொறுப்புணர்ச்சி இதழ்கள் உரிமை, சுதந்திரம் உரிமை, துல்லியம், வேறுபாட்டின்மை, நடுவு நிலை தவறாமை என்பனவாகும். இவற்றுள் பொறுப்புணர்ச்சி அல்லது கடப்பாடு என்பதே மிகவும் முதன்மை நெறியாக உள்ளது.

**அரசாங்கம்**

சமூகப் பொறுப்புணர்ச்சிக் கோட்பாடுப்படி அரசாங்கம் உரிமை வழங்கினால் மட்டும் போதாது, விரைந்து அதை வளர்ச்சியுறச் செய்ய வேண்டும். எவ்வாராயினும் இன்றியமையாத் தேவை ஏற்படும் பொழுது மட்டும், சமுதாய நலனுக்கு இடர்ப்பாடு உண்டாகும் பொழுது

மட்டும் அரசாங்கம் களத்தில் இறங்குகிறது. அல்லற்படுத்தும் செயல்களைக் கொடுங்கரங்களால் அது ஒருபோதும் முடிவுக்குக் கொண்டு வருவது இல்லை.

இதழ்களின் உரிமை குறித்த குழு, தகவல் தொடர்புச் சாதனங்களின் உதவிகளைச் சமுதாயத்திற்குக் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்கிறது. தன்னொழுங்கமைவு கொண்ட இதழ்களும், தன் னிலைக் காப்புடைய (Self righting) மக்கள் இன்னமும் போதுமானதாக இல்லையெனில் அரசு அவற்றைப் பெற்றுத்தரல் வேண்டும்.

சமுதாயப் பொறுப்புணர்ச்சிக் கோட்பாட்டின் படி, கருத்து வெளியீட்டு

உரிமை என்பது அறவழி உரிமையாகும். அதனை அளிப்பது அரசின் கடமையாகும். கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாட்டின்படி கருத்துச் சுதந்திரம் என்பது இயற்கை உரிமை விதி, அந்த உரிமையை எவராலும் பறிக்க முடியாது. என்றாலும் எத்தகைய 'கடமை'யும் உரிமைக்கு விதிக்கப்படவில்லை. உரிமையுணர்வே விஞ்சிநிற்கிறது. கருத்து வெளிப்பாடு தனி மனிதனின் எண்ணத்திற்கும், மனச்சான்றுக்கும் உரிய கடப்பாடு என்று கருதுகிறது சோவியத் கோட்பாடு, அது ஓர் 'அறநெறி' உரிமை. அறநெறி உரிமை என்பது ஒரு தகுதி. "அதை நான் தனி விருப்பத்தைத் துறப்பது போன்று துறப்பதற்கு விரும்பவில்லை" என்கிறார் ஹாக்கிங், தனி மனிதனுக்கும், சமுதாயத்திற்கும் இஃது இன்றி யமையாதது,

சமுதாயப் பொறுப்புணர்ச்சிக் கொள்கை சோவியத் பொது வுடைமைக் கொள்கையோடு ஒத்து உரிமையைக் கடமையோடு இணைக்கிறது, ஆனால் சோவியத் பொதுவுடைமைக் கொள்கைபபடி கடமை பாட்டாளி மக்கள் குழுவைச் சார்ந்தது.

சமுதாயப் பொறுப்புணர்ச்சிக் கோட்பாட்டின் படி கடமை தனி மனித மனச் சான்றைச் சார்ந்தது.

பொதுமக்கள்

சிலர் "நான் தொலைக்காட்சியைச் செய்தி கேட்பதற்கே பயன்படுத்துகிறேன்; மற்றைய நிகழ்ச்சிகளைப் பார்ப்பது இல்லை; ஏனென்றால் அவை மக்களுக்குப் பயன்படாத நிகழ்ச்சிகளாகும்" என்று கூறுவதுண்டு, இத்தகைய கருத்துரைகள் வில்பர்ஸ்ராம் கருத்துப்படி

பொறுப்பற்றவை யாகும். கலை அறிவியல் தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைச் சமுதாய நலனுக்குப் பயன்படுத்த வேண்டும். தகவல் தொடர்புச் சாதனங்கள் இதைச் செய்யத் தவறினால் அவற்றைச் சரியான வழியில் செலுத்துவது பொது மக்கள் கடமையாகும்.

இக்குறிக்கோளைச் சமுதாயம் அடைவதற்கு அவர் பல வழி முறைகளை அறிவுறுத்துகிறார். ஆசிரியர் கடிதங்கள் வாயிலாகவும், தொலைபேசி வாயிலாகவும் கருத்துகளைத் தெரிவிக்கலாம். இத்தகு தனியார் முயற்சிகள் மூலமும், அமைப்புகளின் குறியீடுகளின் மூலமும் நிறைவு செய்யலாம். சான்றாக அமெரிக்க நாட்டில்,ஒலிபரப்புச் செயற்பாடு" (Action for broadcasting) "ஒலிபரப்பின் தேசியக் குடிமக்கள் " (National citizens committee for broadcasting Act) μπ செய்தி ஒலிபரப்புத் தரத்தை பெரிய அளவில் உயர்த்துவதற்கு உதவியுள்ளன.

iv) அச்சிடப்பட்ட பழத்தை அச்சிடுக (கம்யூனிஸ்ட் கோட்பாடு)

சோவியத் பொதுவுடைமைக் கொள்கையை அரசு உரிமைக் கொள்கையின் திருந்திய பதிப்பு என்று அழைக்கலாம். சோவியத் அமைப்பில் அதிகார மையம் கட்சியாகும். சோவியத் கொள்கைப்படி அதிகாரம் சமுதாயச் சார்புடையது. அது தனி மனிதனிடத்தும், நிறுவனங்களிலும் தங்குகிறது. பாட்டாளி மக்கள் குழுவைப் பொறுத்த அளவில், அதிகாரத்தை அடைவதற்குரிய ஒரு வழ சங்கம் அமைத்தல்" ஆகும். அந்த வாய்ப்பினைப் பொது வுடைமைக் கடர் வழங்குகிறது. ஆகையால் சோவியத் கட்டமைப்பில் கட்சிக் கட்டளையைப் பெறாமல், எத்தகைய ஒரு சிறு முடிவும் எடுக்கப்படுவதில்லை. தொழிற்சாலை, வாணிபம், கலைத்துறை ஆகியவற்றை நெறிப்படுத்துகிறது.

சோவியத் பொதுவுடைமைக் கோட்பாட்டில் அரசும் பத்திரிகையும் × வெவ்வேறானவை அல்ல. பத்திரிகைகள் அரசின் உடைமைகளாகவே இருந்தன. இக்கோட்பாட்டின் முக்கிய குறிக்கோள், சோவியத் பொது வுடைமை அமைப்பை நிலைத்திருக்கச் செய்து வெற்றி காண்பதும், சோவியத் பொதுவுடைமைக் கட்சியின் கொள்கைகளை உயர்த் துவதுமே ஆகும். இக்கோட்பாடு சோவியத் யூனியனிலும், பிற கம்யூனிச நாடுகளிலும் கைக் கொள்ளப்பட்டது. ஆனால் இன்று, இங்கு பொது வுடைமை ஆட்சி அகற்றப்பட்ட பின்னர், பத்திரிகைகள் பெரும்பாலும் தனியார் உடைமைகளாக ஆகியுள்ளன. பிற முதலாளித்துவ நாடுகளைப் போலவே இந்த நாடுகளிலும் இன்று பித்திரிகைகளுக்குச் 'சுதந்திரம்' தரப்பட்டுள்ளது.

சோசலிசச் சமூகத்தில் தொழிலாள வர்க்கமே அதிகாரத்தில் இருக்கும். அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள மனரீதியான உற்பத்தியைக் (Mental Production) கட்டுப்படுத்தியாக வேண்டும். தொழிலாள வர்க்க அமைப்புகளுக்கு அதாவது க தொடர்புச் சாதனங்கள் கட்டுப்பட்டாக வேண்டுட் மார்க்சீயம் புறவயமான சட்டங்களை வகுத்துள்ளது. ட் கட்சிக்கு லாறு பற்றி வ பத்திரிகை களும் புறவயமான சட்டங்களை வகுத்துள்ளது. எனவே பத்திரிகைகளும் புறவயமான யதார்த்தத்தையே பிரதிபலிக்க வேண்டும்.

**சோவியத் பொதுவுடைமைக் கோட்பாட்டின் முக்கிய விதிகள்**

1.தொடர்புச் சாதனங்கள் தொழிலாள வர்க்க நலனுக்காகச் செயலாற்ற வேண்டும். அந்த வர்க்கத்துக்குக் கட்டுப்பட்டு இருக்க வேண்டும்.

2. தொடர்புச் சாதனங்கள் தனியாருக்கு உரிமையானதாக இருக்கக்கூடாது.

3. சமூகத்துக்குச் சாதகமாகவே தொடர்புச் சாதனங்கள் செயலாற்ற வேண்டும்.

4. தணிக்கை முறையைச் செயல்படுத்த சமூகத்திற்கு உரிமை உண்டு. தடுக்க, தண்டிக்கவும் உரிமை உண்டு.

5. தொடர்புச் சாதனங்கள் சமூகம் பற்றியும் உலகம் பற்றியும் புற வயமான, தற்சார்பற்ற படப்பிடிப்பை மார்க்சிய, லெனினிய அடிப்படையில் தாங்க வேண்டும்.

6. பத்திரிகையாளர்கள் சமூக நலனுக்கும் பொறுப்பாவார்கள்.

மூன்று வழிகளில் தகவல் தொடர்புச் சாதனங்களை இக்கட்சி கட்டுப்படுத்துகிறது.

1. கட்சியே இதழாசிரியர்களை அமர்த்துகிறது.

2. எதை, எங்ஙனம் வெளியிட வேண்டும், என்பது பற்றிக் கட்சியே நெறிமுறைத் தொகுப்புகளை வழங்குகிறது.

3. அவ்வப்போது கட்சி, இதழ்களைத் திறனாய்வு செய்கிறது. உரிய நல்வுரை, அறிவுரையைத் தருகிறது.

சோவியத் செய்தித்தாள்கள் விளம்பரங்களை அதிக அளவில் வெளி யிடுவதில்லை. அவைகளுக்குச் செய்தி என்பது சமுதாயப் போக்கினை விளக்குவதாகும். பொதுவுடைமைக் கொள்கையின் பொதுவான முயற்சி சோவியத் சமுதாயத்தை உருவாக்குவதேயாகும்.

**அரசு உரிமைக் கோட்பாடு - சோவியத் பொதுவுடைமைக் கோட்பாடு வேறுபாடுகள்**

அரசு உரிமைக் கோட்பாடு தகவல் தொடர்புச் சாதனைகளை எதிர் முறையில் விளக்கிய பொழுது, சோவியத் பொதுவுடைமைக் கோட்பாடு உடன்பாடு நோக்கில் விளக்கியது. பிறிதொரு வகையில் குறிப்பிட்டால். அரசு உரிமைக் கோட்பாட்டினர் செய்யக் கூடாதவற்றை வரையறை செய்கின்றனர். சோவியத் கோட்பாட்டினர் செய்ய வேண்டுவனவற்றை வரையறுக்கின்றனர். சோவியத் நடைமுறை திட்டமிட்ட ஒன்று; ஆனால் அரசு உரிமைக் கோட்பாட்டினர் முறை கட்டுப்பாடுடைய ஒன்று.

கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாடு - சோவியத் பொதுவுடைமைக் கோட்பாடு வேறுபாடுகள்

கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாடு தனிமனிதனுடைய உரிமை களையும், விடுதலையையும் வற்புறுத்துகிறது. சோவியத் பொது வுடைமைக் கோட்பாடு உழைக்கும் வர்க்கத்தின் உரிமையை வற்புறுத் துகிறது. சுதந்திரக் கோட்பாட்டின்படி தகவல்தொடர்புச் சாதனங்கள் ஒரு தொண்டாகக் கருதப்படுகிறது. ஆனால் சோவியத் பொதுவுடைமைக் கோட்பாடு தகவல் தொடர்புச் சாதனங்களை ஒரு கருவியாகக் கருதுகிறது.

**கல்வி, கலை இதழ்கள்**

கல்விக்கெனத் தனி இதழ்கள் தோன்றி வளர்ந்தன. நல்லா சிரியன் (1906), (1917), (1917), (1933), கல்விக்கடல் (1924) என்பன குறிப்பிடத்தக்கன.

கல்விக்கென இதழ்கள் துவங்கியது போலக் கலைக்கென இதழ்கள் துவங்கினாலும் அவை பெரும்பான்மை பிற்காலத்தவை.சங்கீத அபிமானி (1934) என்பது சுதந்திரத்திற்கு முன் தோன்றிய இதழாகும். கலைகளுள் ஒன்றாகக் கருதப்படும் திரைப்படக்கலை பற்றியும் புத்தகங்கள் தோன்றின. அவைகளில் குறிப்பிடத் தகுந்தன சினிமா

உலகம் (1935), ஆடல் பாடல் (1935), ஒளி உலகம் (1935), மின்னொளி (1939), பேசும் படம் (1944) போன்றனவாகும்.

4. இளையோர் இதழ்கள்

இளையோர்களை மனத்தில் கொண்டு தோன்றிய இதழ்கள் பாலியர் (1911), (1918) (1935), அறிவுக் கதிர் (1935) போன்றனவாகும்.

5. மருத்துவ இதழ்கள்

மருத்துவம் தொடர்பான இதழ்கள் பல்வேறு காலக்கட்டங்களில் தோன்றின. மருத்துவத் துறையில் குறிப்பாக ஆயுர்வேதத் துறையில் இதழ்கள் அதிகமாகத் தோன்றின. அவை ஆரோக்கிய போதினி (1908), சுகாதார போதினி (1923), ஆயுள்வேதம் (1923), ஆரோக்கிய தீபிகை (1924), இயற்கை (1926), மருத்துவன் (1928), வைத்தியக் களஞ்சியம் (1934), (1935), (1938), பொழில் (1941), அகஸ்தியன் (1944) போன்றனவாகும்.

6. கலை மற்றும் தொழில் இதழ்கள்

கலை மற்றும் தொழில் இதழ்களாக வெளிவந்தவை,அச்சகத் தொழில் (1926), சிற்பக்கலை (1947) என்பனவாகும்.

7. அறிவியல் இதழ்கள்

அறிவியல் கருத்துகளைப் பரப்புவதற்கென 'விவேக சிந்தாமணி' (1892) என்ற இதழ் வெளிவந்தது. எனினும் முதன் முதலாக வெளிவந்த முறையான முழுமையான அறிவியல் இதழ் எனும் பெயரைப் பெறுவது 1917-இல் வெளிவந்த "தமிழ் நேசன்' என்பதாகும். சரியான விற்பனை யில்லாத இப்பத்திரிகை மிகக் குறுகிய காலத்திற்குள் நின்றுவிட்டது. பின்னர் வைத்தியபோதினி (1920), இயற்கை (1926), விவேகபோதினி (1929) போன்ற இதழ்களும் வெளிவந்தன. விடுதலைக்குப் பின்னர் இத்தகைய அறிவியல் இதழ்கள் மறுபடியும் தோன்றின. தற்போது 'ஹெல்த்', 'உடல்நலம்', 'பொறியியல்', 'களஞ்சியம்', 'துளிா' போன்ற இதழ்கள் வெளிவருகின்றன.

இலக்கிய இதழ்கள்

தமிழ்மொழியும், தமிழ் இலக்கியமும் வளர்ச்சியடைவதற்கு இலக்கிய இதழ்கள் ஆற்றிய பணிகள் குறிப்பிடத் தக்கதாகும். இலக்கியம், மொழி, பண்பாட்டு வளர்ச்சி ஆகியவற்றில் எண்ணற்ற செய்திகளும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் இலக்கிய இதழ்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. இலக்கிய இதழ்கள் பல்வேறு நோக்கங் களுக்காக வெளியிடப்படுகின்றன. இவ்விதழ்கள் இலாப நோக்கம் கருதாதவை,இலக்கிய இதழ்களின் படைப்பாளர்கள் பெரும்பாலும் தங்கள் படைப்புகளுக்கு ஊதியத்தை எதிர்நோக்குவது இல்லை. இந்த இலக்கிய இதழ்கள் அரசாங்கத்தின் உதவியையும் பொதுவாக திர்பார்ப்பதில்லை.

செந்தமிழ்

பழங்கால இலக்கியப் பத்திரிகைகளிலே முதல் இடம் பெற்றுள்ளது. 'செந்தமிழ்' (1902) எனும் மாத இதழாகும். இது சேதுபதி மன்னரால் தொடங்கி வைக்கப்பட்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் இன்றுவரை நடத்தப்பட்டு வருகிறது. இதன் தொடக்க கால ஆசிரியராக திரு திரு.ரா. இராகவ ஐயங்கார் இருந்தார். தற்பொழுது இதன் ஆசிரியராக இரா. அழகுமலை இருக்கிறார். இவ்விதழ் தமிழ்ப்புலமை பெற்ற ஆசிரியர்களில் ஆராய்ச்சி நிரம்பிய கட்டுரைகள் எழுதப்பட்டு இலக்கியப் பெட்டகம் எனக் கருதப்பட்டு வரும் திங்கள் இதழாகும்.

ஞானசாகரம்

1901-இல் ஞானசாகரம் எனும் இதழ் மறைமலை அடிகளை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. இதில் பல இலக்கியக் கட்டுரைகள் வெளிவந்தன.

செந்தமிழ்ச் செல்வி

செந்தமிழ்ச்செல்வி உயர்தரமான இலக்கியத் திங்கள் வெளியீடாகும். இது நெல்லையிலும், சென்னையிலும் நிறுவப் பட்டுள்ள சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடாகும். இது சென்னை யிலிருந்து 1923ஆம் ஆண்டு முதல் வெளியிடப்படுகின்றது. தமிழின் இலக்கண, இலக்கியப் பெருமைகளையும், சைவ சித்தாந்த அறிவு நூல் கருத்துகளையும், நன்காராய்ந்து வெளிப்படுத்தி வருகின்றது. செந்தமிழ்ச் செல்வியின் முதல் தலையங்கம் 'நமது பத்திரிகை' என்பதாகும். தொடக்க காலத்தில் இதழாசிரியர் குழுவில் மணி, திருநாவுக்கரசு, பா.வே.மாணிக்க நாயக்கர்,கா.சுப்பிரமணியபிள்ளை, ச.சச்சிதானந்தம், ந.மு. வேங்கடசாமி நாட்டார், அ. சிதம்பரனார், மா.வே. நெல்லையப்ப பிள்ளை, மு. கதிரேசச் செட்டியார் ஆகிய பெரும் புலவர்கள் இருந்தனர். இதன் பதிப்பாசிரியராகத் திரு. வ. சுப்பையா பிள்ளை விளங்கினார். தமிழறிஞர் பா.வே. மாணிக்க நாயக்கரின் அறிவியல் பூர்வமான ஆங்கிலக் கட்டுரைகள், க.ப. சந்தோஷம் என்பவரால் தொடர்ந்து சீராக மொழிபெயர்க்கப்பட்டு, செந்தமிழ்ச் செல்வியில் வெளியாகியுள்ளது.

**மணிக்கொடி**

1930-ஆம் ஆண்டுகளில் அரசியலில் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம் தீவிரமாக நடைபெற்றுக் கொண் டிருந்தது. அரசியல் போராட்டத்துடன் சமூகச் சீர்திருத்தமும் மொழி வளர்ச்சியும் வலியுறுத்தப்பட்டன. இந்தப் பின்புலத்தில் தமிழில் காலணா விலையில்

சுதந்திரச் சங்கு, காந்தி, ஜெயபாரதி போன்ற சிறு பத்திரிகைகள் மக்களை ஈர்க்க முயன்றன. அந்தக் காலக்கட்டத்தில்தான் 17.09.1933- இல் மணிக்கொடி என்ற வார ஏடு தோன்றியது. அது அரசியல் பத்திரிகையாகத்தான் செயலாற்றியது. கே. சீனிவாசன், வரா. டி.எஸ். சொக்கலிங்கம் ஆகியோரின் கூட்டு முயற்சியால் அவ்விதழ் இயங்கியது. இவ்விதழில் தமிழின் புது முயற்சியான 'நடைச்சித்திரம்' என்ற பகுதியை வ.ரா. தொடர்ந்து எழுதினார். மணிக்கொடி வார் ஏடு சிறுகதைகளுக்கு முக்கியத்துவம் தர முன்வந்தது. பின்னர் மணிக்கொடி நின்றுவிட்டது.

பி.எஸ்.ராமையாவின் கூட்டுமுயற்சியால் 1935 மார்ச் முதல் மணிக்கொடி கதைப் பத்திரிகையாக வெளிவந்தது. பின்பு மணிக்கொடி மாதமிருமுறையாக வெளிவந்தது.

மணிக்கொடியின் அமைப்பும் உள்ளடக்கமும் நோக்கும் போக்கும் முற்றிலும் மாறுபட்டுவிட்ட போதிலும், அது பழைய வார இதழின் தொடர்ச்சியாகவே கருதப்பட்டது. கதைப்பதிப்பின் முதல் இதழ் 'கொடி 3, மணி-1' என்று இலக்கம் பெற்றிருந்தது. இந்த முதல் இதழில் சி. செல்லப்பாவின் 'ஸரஸாவின் பொம்மை', பி.எஸ். ராமையாவின் புலியின் பெண்டாட்டி'. புதுமைப்பித்தனின் 'வேதாளம் சொன்ன கதை". 'துன்பக்கேணி' முதலான சிறு கதைகள் வெளியாயின.

மணிக்கொடி இதழின் தொடக்கத்தை பி.எஸ். ராமையா 'தமிழில் சிறுகதைக்கென்று தனியாக ஒரு பத்திரிகை இல்லாத குறையை நீக்குவதற்காகவும் பிற நாட்டவர் கண்டு போற்றும் படியான உயர்ந்த கதைகளை எழுதக்கூடிய உயர்ந்த எழுத்தாளர்களை வெளிப்படுத்தவும்' இவ்விதழ் தோன்றியதாக அதன் முதல் இதழில் குறிப்பிட்டுள்ளார்.

புதுமைப்பித்தன், ந. பிச்சமூர்த்தி,கு.ப. ராஜகோபாலன். பி.எஸ்.ராமையா, ந. சிதம்பர சுப்பிரமணியன், பெ.கோ. சுந்தரராஜன், சி.சு.செல்லப்பா, க.நா.சு.. லா.ச. ராமாமிருதம் ஆகிய படைப்பாளிகளின் சிறந்த சிறுகதைகள் பலவற்றை மணிக்கொடி வெளியிட்டுள்ளது.

இளையோர் இதழ்கள்

இளையோர்களை மனத்தில் கொண்டு தோன்றிய இதழ்கள் பாலியர், பாலவினோதினி,பால சிந்தாமணி, சிறுவர் அறிவுக் கதிர் (1935) போன்றனவாகும்.

5. மருத்துவ இதழ்கள்

மருத்துவம் தொடர்பான இதழ்கள் பல்வேறு காலக்கட்டங்களில் தோன்றின. மருத்துவத் துறையில் குறிப்பாக ஆயுர்வேதத் துறையில் இதழ்கள் அதிகமாகத் தோன்றின.

அவை ஆரோக்கிய போதினி (1908), சுகாதார போதினி (1923), ஆயுள்வேதம் (1923), ஆரோக்கிய தீபிகை (1924), இயற்கை (1926), மருத்துவன் (1928), வைத்தியக் களஞ்சியம் (1934), சித்தன்(1935), வைத்திய சாந்திரிகா (1938), தமிழ் மருத்துவ பொழில் (1941), அகஸ்தியன் (1944) போன்றனவாகும்.

6. கலை மற்றும் தொழில் இதழ்கள்

கலை மற்றும் தொழில் இதழ்களாக வெளிவந்தவை,அச்சகத் தொழில் (1926), சிற்பக்கலை (1947) என்பனவாகும்.

7. அறிவியல் இதழ்கள்

அறிவியல் கருத்துகளைப் பரப்புவதற்கென 'விவேக சிந்தாமணி' (1892) என்ற இதழ் வெளிவந்தது. எனினும் முதன் முதலாக வெளிவந்த முறையான முழுமையான அறிவியல் இதழ் எனும் பெயரைப் பெறுவது 1917-இல் வெளிவந்த "தமிழ் நேசன்' என்பதாகும். சரியான விற்பனையில்லாத இப்பத்திரிகை மிகக் குறுகிய காலத்திற்குள் நின்றுவிட்டது. பின்னர் வைத்தியபோதினி (1920), இயற்கை (1926), விவேகபோதினி (1929) போன்ற இதழ்களும் வெளிவந்தன. விடுதலைக்குப் பின்னர் இத்தகைய அறிவியல் இதழ்கள் மறுபடியும் தோன்றின. தற்போது 'ஹெல்த்', 'உடல்நலம்', 'பொறியியல்', 'களஞ்சியம்', 'துளிா' போன்ற இதழ்கள் வெளிவருகின்றன.

வினாக்கள்

1.ஊடகத் தொடர்பியல் கோட்பாடுகள் என்றால் என்ன?

2. ஆட்சி ஆதிக்கக் கோட்பாட்டை விளக்குக.

3. கட்டற்ற இதழ் சுதந்திரக் கோட்பாடு குறித்து கட்டுரை வரைக.

4. சமுதாயப் பொறுப்புணர்வு கொள்கையை விளக்குக.

5. கல்வி, இலக்கிய இதழ்கள் குறித்து விளக்குக.

# அலகு 3

பொதுமக்கள் கருத்து

ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்க அல்லது ஒரு விவாதத்தில் கலந்து கொள்ளத் தாமாக வந்துகூடும் கூட்டத்தினரே(spontaneous collection of people) பொதுமக்கள் எனப்படுகின்றனர். விவாதத்திற்குரிய ஒரு பொருளைப்பற்றி ஒருவர் கொண்ட எண்ணமே 'கருத்து' என்று சொல்லப்படுகிறது. கருத்து. வேறுபாடுகள் தோன்றியபோது ஒருவர் 'என்னைக் கேட்டால் (இது வேண்டாமென்று சொல்வேன்) என்றோ, 'எனக்கும் தெரிந்தவரையில், (இப்படி நடைபெற்றதில்லை)" என்றோ தம் உறுதியானது என்றோ, முற்றமுடிந்த முடிவு என்றோ அவரால் அறுதியிட்டு உரைக்க இயலாது. இத்தகுத் தற்காலிக முடிவே கருத்து எனபடுகிறது. இந்தக் கருத்து எப்போது வேண்டுமானாலும் மாறலாம்

எண்ணத்தில் பல வேறுபாடுகளைக் கொண்ட பொதுமக்கள் பலருடைய ஒட்டுமொத்தமான கருத்தே 'பொதுமக்கள் கருத்து' எனப்படுகிறது. பொதுமக்களின் கருத்துக்கள் ஒருமித்து இருக்கும் என்றோ, பெரும்பான்மையாக இருக்கும் என்றோ கருதி விடமுடியாது (not the unanimous opinion nor necessarily the opinion of the majority). இதனால்தான் பொதுமக்களுடைய கருத்துக்கள், வாதங்களும்,எதிர்வாதங்களும் கலந்தவையாக உள்ளன.

**மக்கள் கருத்தை அறிதலின் படிநிலைகள்**

1. தகவலைக் கேள்வியுற்றதும் உணர்ச்சிகள் ஊற்றெடுக் கின்றன.

2. தசுவலைப்பற்றிய பிறரது உணர்ச்சிகள் மதிப்பிடப் படுகின்றன.

3. தகவலைப்பற்றிய மக்கள் மதிப்பீடுகள் எடைபோட்டுப் பார்க்கப்படுகின்றன.

4. சில மதிப்பீடுகள், தகவலுக்கு எதிர்ப்பாகவும், சிய மதிப்பீடுகள் தகவலுக்கு ஆதரவாகவும் தெரிகின்றன.

5. தகவலைப் பற்றிய பொதுமக்கள் கருத்து இதன்வழி கணிக்கப்படுகிறது.

புதிய கருத்துப் பரவல்

ஒரு சமுதயாத்தில் புதிய கருத்துப் பரவத் தொடங்கும்போது அதற்கு ஆதரவும் எதிர்ப்பும் இருப்பது இயற்கை.

ஒருவர் கலப்புத்திருமணம் செய்துகொள்ள விரும்புகிறார் வீட்டாரும் உறவினரும் எதிர்ப்புத் தெரிவிப்பதால் தன் முடிலை மாற்றிக் கொள்கிறார். சிலர் சமுதாயத்தை எதிர்க்க துணிகின்றனர். இப்படிப்பட்டவர்களை "வீட்டைவிட்டு வெளியே போ" என்றும், "என் கண்முன் நிற்காதே" என்றும். "ஊரை வீட்டுக் தள்ளிவைப்பதாகப் பஞ்சாயத்து முடிவு செய்கிறது" என்றும் சமுதாயம் தனிமைப்படுத்துகிறது. என்றாலும், தயங்குகிறார்

சில சமயங்களில் தனியொருவர்க்கு அல்லது ஒரு பிரிவினர்க்குப் பிடிக்காத சில கட்டுப்பாடுகளை அவர்கள் கீழ் பிறிதினம் திணிப்பதுண்டு. "வரதட்சணை வாங்க மாட்டேன்" என்று ஒருவர் கொள்கைப்பிடிப்புடன் இருந்தாலும், வீட்டில் இரு தங்கைகள் திருமணத்திற்கு இருப்பதைக் காட்டி, "இப்படி வாங்கி, அப்படிக் கொடுத்துவிடலாம்!" என்று சமாதனம் பேசித் தம் கருத்தை அவர் மீது வீட்டார் திணிப்பதுண்டு. மக்களின் நடைமுறைக்கு ஏலாத ஒரு மொழியை அவர்கள் மீது அடிக்கடித் திணிக்க எத்தனிப்பதும் இதில் அடங்கும்

தாம் பின்பற்றிய புதிய கருத்தை அல்லது புதிய முறையைப் பிறரும் பின்பற்ற வேண்டும் என்று நினைப்பது மனித இயற்கை இதனால் தமது கருத்துக்கு அல்லது தாம் பின்பற்றும் முறைக்கு ஆதரவு கிடைக்கும் என்று நம்புகின்றனர். தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை நீண்டகாலமாகப் பலரும் பலமுறைகளில்

சொல்லியும் எழுதியும் வருகின்றனர். ஒவ்வொருவரும் தாம் பின்பற்றும் முறைக்கு மக்கள் ஆதரவைப் பெற் பெரும் முயற்சி செய்துள்ளனர். இறுதியில் அரசே சட்டமியற்றி எழுத்துச் சீர்திருத்தத்தை நிறைவேற்றியது.

கருத்துத் தலைவர்கள்

புதிய கருத்துக்களையும் புதிய செயல்முறைகளையும் மக்கள் மத்தியில் எடுத்து வைத்து அதற்கு ஆதரவு திரட்டுபவர்களைக் 'கருத்தாக்கத் தலைவர்கள்' என்று அழைக்கின்றனர். இவர்கள் பொதுமக்களை மனமாற்றம் செய்யும் ஆளுமை படைத்தவர்கள்: தகவல் தொடர்புச் சாதனங்களை நம்புவதைக் காட்டிலும், சிலர் சில குறிப்பிட்ட நபர்களையே (பொதுவாக சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றவர்கள்) வெகுவாக நம்புகின்றனர்.

1940 இல் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலின் போது தகவல் தொடர்புச் சாதனங்கள் மக்களை வெகுவாகப் பாதிக்கவில்லை. தகவல் தொடர்புச் சாதனங்களின் எதிர்ப்சாப்புக்கு மாறாக அத்தேர்தலின் முடிவுகள் அமைந்தன. இதற்குரிய காரணத்தை பால் வாசர்ஸ்ஃபெல்ட் குழுவினர் ஆராய்ந்தபோது, தகவல் தொடர்புச் சாதனங்களின் மீது நம்பிக்கை இழந்து, சமுதாயத்தின் மேல் அக்கறை உள்ள ஒரு சிலரின் கருத்தைக் கேட்டு அதற்கேற்ப மக்கள் வாக்களித்தார்கள் என்பது தெரியவந்தது. இத்தகு நபர்களைக் 'கருத்தாக்கத் தலையர்கள்' என்று வாசர்ஸ்ஃபெல்ட் ஆய்வுக் குழுவினர் பெயரிட்டனர். மக்கள் மத்தியில் செவ்வாக்குப் பெற்ற இவர்களே பின்னர் அரசியலிலும் செல்வாக்குப் பெற்ற தலைவர்களாக உருவாகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கருத்தாக்கத் தலைவர்கள் 95 சமுதாயத்தின் தலைவராகவோ, கிராமத்தின் செல்வாக்கைப் பெற்றவராகவோ (நாட்டாண்மை, சமீன்தார்) இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பள்ளிக்கூட ஆசிரியர் ஒருவர்கூட கருத்தாக்கத் தலைவராகலாம். கிராமத் தபால்காரரும் கூட கருத்தாக்கற் தலைவராக கருதப்படலாம். கிராம மக்கள் அல்லது குறிப்பிட்ட ஒரு குழுவினர்,

எல்லாவற்றிற்கும் கருத்தாக்கத் தலைவர்களைக் கலந்தாலோசித்த பின்னரே ஒரு முடிவுக்கு வருகின்றனர். ஒரு தகவலின் மெய்ம்மை இவர்களது கருத்தைக் கேட்ட பின்னரேயே முடிவு செய்யப்படுகிறது.

கருத்தாக்கத் தலைவர்களாக உருவாகிறவர்கள் சில பண்புகளைக் கொண்டிருப்பார்கள். அவர்கள் எப்போதும். விழிப்புணர்ச்சியுடன் செயலாற்றுவார்கள்; சமுதாய முன்னேற்றத்தில் அக்கறை கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு குடும்பத்தைப் பற்றியும் அக்குடும்ப உறுப்பினர்களைப் பற்றியும் தெரிந்து வைத்திருப்பார்கள். தகவல் தொடர்புச் சாதனங்களோடு மிகுதியான தொடர்பு கொண்டிருப்பார்கள், சமுதாயத்திற்கும் தகவல் தொடர்பு சாதனங்களுக்கும் இடையில பாலமாகச் செயலாற்றுவார்கள். இவர்கள இல்லையெனில் வெளியுலகத்துடனான தொடர்பு முற்றிலும் அறுந்துவிட்டதாக அந்த மக்கள் எண்ணுவார்கள்.

பொதுமக்கள் கருத்தும் தகவல்தொடர்புச் சாதனங்களும்

பொதுமக்கள் கருத்தை அறியநிலும் வளர்ப்பதிலும் தகவல் தொடர்பு சாதனங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. பொதுமக்களை பாதிக்கின்ற ஒரு செய்தியை நாளிதழ் ஒன்று வெளியிட்டா அறுநாளே அதற்கு ஆதாவும் எதிர்ப்பும் தெரிவித்து நாளில் அலுவலகத்திற்கு ஏரானமான சுடிதங்கள் வந்து குவிகின்றன வட்ட ஆட்சியர் ஒரு சட்டத்தை அமுல்படுத்த விழைகிறார் என்றால் அதை நாளிதழ் வெளியிட்டுச் "சம்பந்தப்பட்டவர்கள் இச்சட்டத்தால் தமக்கு ஏதேனும் பாதிப்பு அல்லது குறைபாடு இருந்தால் அதை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மதியம் முதல் 4 வரை நேரில் தெரிவிக்கலாம் என்று விளம்பரம் தருகின்றார். அன்மைக் காலத்தில் போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு யைந்த பெயாகளை நீக்குவதற்கும், பள்ளிகளில் 8ஆம் வகுப்பு வரை கட்டாயத் தமிழ்வழிக் கல்வியை அறிமுகம் செய்வதற்கும் மக்கள் கருத்தை அறிவதற்குத் தமிழக அரசு கூட்டிய கூட்டங்கள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகள் ஆகும். இவ்வாறு மக்கள் கருத்துக்கு மதிப்பு தரப்படுகிறது. விடுதலைப் போராட்டக்காலத்தில் மக்களின் தாவைத் திரட்டுவத்றகு இந்திய

இதழ்கள் ஆற்றிய பணிகய் மறக்கவியலாது, இவற்றுள் இந்தியா, விஜயா, சுதேசமித்திரன் Harijan, Young India போன்ற இதழ்கள் குறிப்பிடத்தக்கனவாக

ulse lagomel und Card قدام Sarande (Mass Campaign) terasa திட்டங்கள் வெற்றிபெற வழிவகுக்கும் பெரும்பாலான மக்களின் கருத்துக்கும் புறம்பான. ஆனால் நெடுநோக்கில் மக்களுக்கும் நாட்டிற்கும் நன்மை பயக்கின்ற திட்டங்களை அல்லது சட்டங்களை திரைவேற் எண்ணும்போது, அதுகுறித்த விழிப்புணர்ச்சியை மக்களுக்கு கூட்டி மக்கள் ஆதாவைத் திரட்ட வேண்டும். 2003ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மழைநீர் சேகரிப்பு விழிப்புணாகள் நடவடிக்கை இதற்கு நல்ல சான்றாகும் ஒவ்வொருமுறையும் தொழிலதிபர்கள், யணிகள் பொதுமக்கள் ஆகியோரது கருத்தறிவதை வழக்கமாகக் கொண்டுள்ளதை இங்கு எடுத்தும் காட்டலாம் ஊதிய உயர்வினை எல்லோரும் விரும்புகின்றனர். அதனால்தான் ஊதிய உயர்வு கேட்டும் விலைலா எதிர்த்தும் நினைத்த மாத்திரத்தில் மக்கள் போராட்டங்கள் நடத்துகின்றனர். ஆனால் வாதட்சணை வசங்குவது கொடுப்பது பற்றியும் கலப்புமணம் பற்றியும் இன்னமும் மக்களிடையே கருத்ற வேறுபாடுகள் உள்ளன. எனவேதான் இவற்றை வெற்றிகரமாகச் செயல்படுத்துவது கடினமாக உள்ளது.

சான்றாக, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பாவச்செயல் என்றும், இறைவன் தந்த கொடையை அழிப்பது போலாகும் என்னும் மதக்கொள்கைக்கு மாறானது என்றும். விகிதாசாரம் குறைந்துபோகும் என்றும் பல காரணங்களைக் காட்டி அதற்கு எதிர்ப்பரப்புரை செய்யும் நிலையம் உள்ளது. எனவேதான் குடும்பக்கட்டுப்பாட்டுப் பரப்புரை தேவையான அளவு (சில தேவையையும் மீறி) நடத்தாலும் முழுமையான வெற்றி கிடைக்காமற் போகிறது.

ஒருபடிநிலை பரவல் கொள்கை

தகவல் தொடர்பச் சாதனங்களிலிருந்து மக்களுக்குச் செய்திகள் சங்வித இடையூரும், இடையீடுஇல்லாமல் நேரடியாகச் சென்று சேருவதை இக்கொள்கை

விளக்குகிறது. தோலின் அடியில் ஊசி மூலம் செலுத்தப்படும் மருந்து இரத்தத்தில் விரைவாகவும் எளிதாகவும் கலக்கிறது. இது போன்ற செய்திகள் மக்களுக்கு எவ்வித இடையீடுமின்றி நேரடியாகவும் விரைவாகவும், எளிதாகவும் சென்று சேருகிறது என்பதை 1930-40 ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் நடத்திய ஆய்வுகள் புலப்படுத்தின. எனவே இக்கொள்கை 'தோலடியூடு ஊசி மாதிரி' என்றும் அழைகப்படுகிறது.

பெருகிவரும் சிக்கலான தகவல் தொடர்பச் சரதனங்களில் மூலம் வெளிப்படும் வேறுபடுதன்மை கொண்ட செய்திகள் எல்ல வி மக்களுக்கும் ஒரே தன்மையுடன் சென்று சேருவதில்லை எனப் பின்னர் கண்டறியப்பட்டது. மக்களுக்கும் கிடைக்கும் எல்பாச் செய்திகளும் தரன் காணப்பட்டு அவரவர்க்கு வேண்டிய செய்திகள் எட்டும் அவ்யப்பிரில் மக்களால் தேசத்தெடுக்கப்படுகின்றன என்று தெரியவந்தது. மேலும் புதிய கருத்துக்களும் செயல்முறைகளும் ஒரு சமுதாயத்தில் பரவும்பொழுது அதனை ஏற்பதில் மக்கள் தயங்கம் காட்டுகின்றனர் என்றும், அச்சமுதாயத்திலுள்ள செல்வாக்குப் பெற்ற ஒரு சிவரக் கலந்தாலோசித்த பின்னரேயே புதிய கருத்து அல்லது செயல்முறையைப் பற்றிய தங்கள் முடிவை வெளியீடுகின்றனர் என்றும் தெரியவந்தது. இதன் அடிப்படையில் இருபடி நிலைப் பரவல் கொள்கை உருவானது.

இருபடிநிலைப் பரவல் கொள்கை (Two-step flow theory)

கருத்தாக்கத் தலைவர்களின் வழியாகச் செல்லும் தகவல் தொடர்பினை விளக்கும் கொள்கை இருபடிப் பரவல் கொள்கை எனப்படுகிறது.

ஒரு செய்தி ஒருவருக்குச் சென்று சேருமுன் அது தடங்களைக் கடந்து செல்கிறது என்று மக்கள் தகவலில தொடர்ந்து நடத்றப்பட்ட ஆய்வுகள், புலப்படுத்தின. இதனால் கருத்தாக்கத் தலைவர்களின் பங்கு குறைந்து வருவது கண்டறிய பட்டது. மேலும் கருத்தாதிகத் தலைவர்கள் பிறரால் பாதிக்கப்படும்

எதிர்மறைப் போக்கும் நிலவியது. இதன் விளைவாகப் பலபடிநிலை அறிமுகம் செய்யப்பட்டது.

## பலபடிநிலைப் பரவல் கொள்கை (Multi-step flow theory)

இது இருபடிநிலைப் பரவல் கொள்கையின் நீட்சியாக கருதத்தக்கது. 'ஒரு செய்தி கேட்குநரைச் சென்று அடையும் முன் இத்தனைத் தடங்களைக் கடந்து செல்ல வேண்டும்' என்ற வரையறையை இக்கொள்கை உடைத்தெறிந்தது. வளர்ந்து வருகின்ற சமுதாயத்தில் சிந்தனைத் திறனுக்கேற்ப, அவர்களால் கேள்விப்படும் செய்திகளும். அச் செய்திகள் வரும் வாயில்களும், அச்செய்திக்கு மக்களிடம் காணப்படும் எதிர்விளைவும் அறுதியிட்டு உரைக்க முடியாதனவாக இருந்தன. எனவே தற்காலச் சமுதாயத்திற்குப் பெரிதும் பொருந்துவதாகப் இப்பலடிபநிலைப் பரவல் கொள்கை அமைந்தது.

**தகவல் தொடர்பு மாதிரி - விளக்கம்**

"மாதிரி என்பது தகவல் தொடர்பின் அநாவசியமான விளக்கங்களை நீக்கி விட்டு, இன்றியமையா அம்சங்களைச் சுருங்கிய சொற்களாகக் கொண்டுள்ளது. தகவல் தொடர்பு நிகழ்வதற்கு அத்தியாவசிய மானதைப் பற்றிய சிறந்த விளக்கத்தினை உள்ளடக்கியது" என்று ஸெரினோவும், மார்டென்ஸெனும் கூறுகின்றனர். (சிவ. சசிரேகா, 1992:)

தகவல் தொடர்பு முறைகளுக்குக் குறியீடாக அமைந்த கருத்து (Concept) வினை 'மாதிரி' என்ற சொல் குறிக்கும். A யிலிருந் B க்குத் தகவல் அனுப்பப்படும் போது நேரிடக் கூடிய ஒரு தனிப்ப பண்பே மாதிரியாகும்.]

மாதிரி என்பது தகவல் தொடர்பு அமைப்பினை வரைபடம் மூலம் விளக்குவதும், அத்தகவல் தொடர்பிலுள்ள முக்கியமான கூறுகளைக் காட்டுவதும், இக்கூறுகளுக்கிடையிலான தொடர்புகளை வெளிப்படுத்துதலும் ஆகும்.

"ஒரு பொருளின் அல்லது ஓர் உண்மையின் எளிமையாக்கப்பட்ட 'வரை வடிவம்' மாதிரி எனப்படும்".

ஒரு பொருளின் குறியீட்டு விளக்கம் மாதிரியாகும்".

" "மாதிரி என்பது ஒரு சிக்கலான கோட்பாட்டின் எளிமையான வடிவமாகும்"

ஓர் அமைப்பின் முதன்மைக் கூறுகள் அல்லது உறுப்புகள் அந்தக் கூறுகளின் அல்லது உறுப்புகளின் இடையேயுள்ள உறவுகள் போன்ற வற்றை மாதிரிகள் காட்டும். ஒவ்வொரு மாதிரியும் ஒரு பொருளின் அல்லது உண்மையின் சிறப்புகளை மட்டும் விளக்கிக்காட்ட முயலும். அவை தேர்ந்தெடுக்கப்பட்ட சில கூறுகளின் வடிவமாகும். (வெ.கிருட்டிணசாமி,1994:372)

தகவல் தொடர்பு மாதிரியின் பயன்கள்

தகவல் தொடர்பு மாதிரிகள் பல பயன்களைக் கொடுக்கின்றன.

1. காணமுடியாத,பார்க்க வாய்ப்புக் கிடைக்காதப் பொருள் அல்லது அமைப்பின் முழு உருவத்தைக் காட்டும்

2. சிக்கலான தகவலை எளிமையாக்கி விளக்க உதவும்

3. ஓர் அமைப்பின் முதன்மைக் கருத்துகளை அறிய துணை நிற்கும்.

4. விளைவுகளை அல்லது நிகழ்ச்சிகளின் வழிமுறைகளைக் கணிக்க உதவும்.

5. ஒரு பொருளை மற்றொன்றிலிருந்து பிரித்தறிய உதவும்.

6. அமைப்புகளின் வேகம், அதிலுள்ள உறுப்புகளின் தொடர்பு, ஓர் உறுப்பு மற்ற உறுப்புகளின் மீது செலுத்தும் ஆதிக்கம் போன்றவற்றை விளக்கும்.

7. தகவல் தொடர்பின் வழிமுறைகளையும் அதிலுள்ள பல்வேறு கூறுகளையும் விளக்கும்.

**தகவல் தொடர்பு மாதிரியின் அடிப்படைக் கருத்துப் படிவங்கள்**

பெரும்பாலான தகவல் தொடர்பு மாதிரிகள் குறைந்த எண்ணிக்கை உள்ள அடிப்படைக் கருத்துப் படிவங்களையே (Basic concepts) பயன் படுத்துகின்றன. அவையாவன

1. அனுப்புநர் (Sender)

2. 5 (செய்தி)

3. சமிக்ஞைகளாகவோ, குறியீடுகளாகவோ மாற்றக்கூடிய முறை (Encoding)

4. தொடர்புச் சாதனம் (Channel)

5. டி (ரிசீவர்)

6. அனுப்புநருக்கும், பெறுநருக்குமிடையேயான உறவு (Relationship)


7. தொடர்புக் குழுஉக் குறிகளை எழுதும் முறை (Decoding)

8. தகவல்கள் குறிப்பிடக்கூடிய செயல்களின் குறியிலக்கு பரப்பெல்லை (Range)

9. (விளைவு)

10. பின்னூட்டம் (Feed Back)


தகவல் தொடர்பு மாதிரிகளின் வகைகள்




### ஹெரால்ட் டி. லாஸ்வெல் மாதிரி (Herold D. Lasswell Model)

1948-இல் அமெரிக்க அரசியல் அறிவியலாளரான ஹெரால்ட் டி. லாஸ்வெல் சொல் மாதிரியைப் படைத்தார். அதுவே லாஸ்வெல் விதி எனப்பட்டது. இந்த மாதிரியானது தகவல் தொடர்பு முறையினை அடிப்படைக் கூறுகளாகப் பிரிக்கப் பயனுள்ள விதியாய் அமைந்தது. லாஸ் வெல்லின் மாதிரியானது மக்கள் தொடர்பு மாதிரிக்கே மிகவும் பொருந்துவதாகும்.

லாஸ்வெல் மாதிரி



லாஸ்வெல் மாதிரிதான் தகவல் தொடர்பு முறையில் எல்லா மாதிரிகளிலும் மிக அதிக அளவில் எடுத்தாளப்படுகின்றது. தகவல் தொடர்பு முறையின் கூறுகளைச் சுருங்கிய அளவில் தெரிவிக்கின்றது. அக்கூறுகள் பின்வருமாறு

**யார்** (Who)

**என்ன கூறுகிறார்** (Says What)

**எதன் வழியாக** (In which channel)

**யாருக்கு** (To whom)

**என்ன விளைவுடன்** (with what effect)

S- Source

M-Message


C- Channel

R-Receiver

E- Effect


இம்மாதிரியானது நேர்கோட்டுத் தன்மையுடையதாகவும், செய்தி செலுத்துதல் என்பதையே பிரதானமாகக் கொண்டுள்ளதையும் காணலாம். இம்மாதிரி பின்னூட்டு (Feed Back) செயல்படுவதற்கு வழியில்லாமல் செய்தி செலுத்துபவரையே கவனத்தில் கொண்டு செயல்படுகின்றது. மக்கள் தகவல் தொடர்பு ஆய்வுகள் லாஸ்வெல் மாதிரியையே முன்னுதாரணமாகக் கொண்டு செயல்படுகின்றன.

**ஷனன் - வீவர் மாதிரி**




தொடக்கத்தில் ஷனனும் வீவரும் மின்னணு வழித் தொடர்பியலில் உள்ள தொழில் நுட்பப் பிரச்சினைகளிலும், தொலைபேசியில் மனிதக் குரல் அனுப்பீட்டின் தரத்தை உயர்த்துவதிலுமே ஈடுபாடு கொண்டிருந்தனர். இருந்த போதிலும் அவர்கள் உருவாக்கிய மாதிரியை மனிதத் தொடர்பியலின் (Human Communication) அநேக வடிவங்களில் பொருத்திப் பார்க்க முடிந்தது. அம்மாதிரி பின்வருமாறு காட்டப் பட்டுள்ளது.

**ஷனன் - வீவர் மாதிரியின் விளக்கம்**




ஷனன்-வீவர் மாதிரியில் தகவல் மூலம் என்பது பெறுநருக்குக் கிடைக்கக்கூடிய தகவல்களிலிருந்து ஒரு தகவலைத் தெரிவு செய்கின்றது. பின்னர் அது தகவல் தொடர்புச் சாதனத்தின் மூலம் பெறுநருக்கு அனுப்பப்படுகின்றது. அங்குதான், அனுப்பப்பட்ட சமிக்ஞை மறுபடியும் தகவலாக மாற்றப்படுகின்றது. பின்னர் அது, இலக்கை நோக்கி அனுப்பப்படுகின்றது. சான்றாக பேச்சாளர்

வானொலியில் பேசும் போது அவருடைய மூளைதான் தகவல் மூலம்; பேச்சாளரே அனுப்புநராவார், வேறுபட்ட ஒலி அழுத்தமே சமிகளையாகும். வானொலியே தகவல் தொடடச் சாதனம், வாசகர்கள் பெறுநர், அவர்களுடைய மூளைதான் இலக்கு,

தகவல் தொடர்பு முறையில் சரியாகத் திட்டமிட்டுச் செயல்படாத போது தகவலானது சிதைக்கப்படலாம் அல்லது தகவலின் பொரு பொருளைத் தவறாகப் புரிந்து கொள்ளலாம். இச்சிதைவுகள் அல்லது தவறாகப் புரிந்து கொள்ளுதல் தடைகள் (Barries) எனப்படுகின்றன. வானொலி யில் நிகழ்ச்சிகள் ஒலி பரப்பாகும் போது ஏற்படும் தடைகள், தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் ஒலி, ஒளிப்பரப்பாகும் போது ஏற்படும் தெளிவற்ற மங்கலான படம், தொலைபேசியில் தெளிவற்ற குரல் போன்றவைகளை எந்திரவியல் தடைகள் (Technical Barries) எனக் கூறலாம்.

தகவல் தொடர்பில் அனுப்புநர் தகவலை அனுப்பும் போது. அத்தகவலை பெறுநருக்குத் தெரியாத மொழியிலாவது, பெறுநர் புரிந்து கொள்ள முடியாதவாறு பொருள் மயக்கம் தரும் சொற்களைப் (Ambiguous words) பயன்படுத்துவது கருத்துத் தடைகள் (Semantic Barriers) எனலாம்.

தகவல் அனுப்புபவரால் தடைகள் வருவது மட்டுமின்றி தகவலைப் பெறுவதாலும் தடைகள் ஏற்பட வாய்ப்புண்டு. இத் தடை 'பெறுநர் தடை' (Receiver Barrier) எனக் கூறப்படுகிறது. அனுப்புநரின் மொழி அல்லது குறியீடுகளைப் பெறுநர் தவறாய்ப் புரிந்து கொள்ளுதலே பெறுநர் தடைக்குரிய முக்கியக் காரணம் ஆகும். சான்றாக மலையாள மொழி தெரியாத ஒருவர் வேலை தேடி திருவனந்தபுரம் சென்று ஒரு கடை முதலாளியைப் பார்த்து வேலை கேட்க, கடை முதலாளி 'நாளெ ராவுல வா' எனக் கூற, வேலை தேடிப் போனவர் அடுத்த நாள் இரவில் போய் முதலாளியைப் பார்க்க முதலாளி கோபம் அடைகிறார். முதலாளியின் கோபத்திற்குக் காரணம் புரியாமல் வேலை தேடிச் சென்றவர் பரிதாபத் துடன் நிற்கிறார். காரணம் என்னவெனில் வேலை தேடிச்சென்றவருக்கு 'ராவு' என்பதற்கு மலையாள மொழியில் 'காலை' என்ற பொருள் உண்டு எனத் தெரியாது. இது மொழி

பிரச்சினையால் வந்த கருத்துத் தடையாகும். கருத்துத் தடை இருந்தால் தகவல் தொடர்பு முழுமை பெறாது.

ஷனன் - வீவர் மாதிரியானது குறிப்பிட்ட தகவல் தொடர்பு முறையில் தகவல் அமைப்பீட்டின் துல்லியத்தினை அளவிடுகின்றது. இதற்காக ஷனனும்- வீவரும் அளந்து மதிப்பிடத்தக்க அளவைக் கருத்துப் படிவத்தினை (Concept of entropy) அறிமுகப்படுத்தினர்.

தகவல்களைக் கட்டமைப்பதில் தகவல் மூலத்திற்குள்ள வாய்ப்பு அல்லது சுதந்திரத்தின் அளவாகத தகவல்களை இவர்கள் விளக்கினர். நோஇவர்கள் உருவாக்கிய மாதிரி தகவல் தொடர்பின் தொழில் நுட்ப நோக்கங்களைப் பற்றியே விளக்குகின்றது.

ஒரு குறிப்பிட்ட தகவல் தொடர்புச் சாதனத்தின் மூலம் அதிக பட்சமாக எவ்வளவு தகவல்களையும் அனுப்பலாமெனினும், ஒரு தகவல் தொடர்புச் சாதனம் எடுத்துச் செல்லும் திறனை அளப்பதெப்படி என்று கண்டறிய ஷனனும் வீவரும் கணிதவியல் கோட்பாட்டினை உருவாக் கினர். தகவல் தொடர்புச் சாதனம் மற்றும் அதன் திறன் பற்றிய அவர்களது முயற்சி, அவர்களுடைய தொழில் நுட்பம் மற்றும் கணிதவியல் பின் புலத்திற்கே ஏற்புடையதாக இருக்கிறது. (சிவ. சசிரேகா, 1992:12-17)

**வெள்ளித்தோட்டாக் கோட்பாடு (Bullet theory)**

முதல் உலகப்போரின் போது (1920) நாசிப்படையைச் (Naz) சார்ந்த கோயபல்ஸ் (Goebbels) என்பவன் பிரச்சார சாதனங்களில் மூலம் எந்தக் கொள்கையையும் மக்கள் மனதில் எளிதாகப் பகுத்திவிடலாம் என்று கனவு கண்டான். இந்தகோயபலஸ் ஹிட்லரிடம் கொள்கைப் பரப்பு அமைச்சராகப் பணியாற்றினான். இவன் ஆரம்பித்த Attock என்ற பத்திரிகை பொய்ப்பிரச்சாரத்திற்குப் பெயர் பெற்றது. "வெள்ளித் தோட்டாக்களான கொள்கைகளை வானொலி என்ற துப்பாக்கி மூலம் மக்களை நோக்கிச் சுட்டால் அவர்கள் பிரச்சாரம் என்ற தாக்குதலுக்கு ஆளாகியே தீரவேண்டும்" என்று இவன் நம்பினான் (வை. நடராஜன் & க.மணி - u.57) இதுவே

வெள்ளித்தோட்டாக் கோட்பாடு என அழைக்கப்படுகிறது. ஆனால் இக்கொள்கை பொய்யானது என்று நாளடைவில் மெய்ப்பிக்கப்பட்டது.

வினாக்கள்

1. பொதுமக்கள் கருத்து, புதிய கருத்து பரவுதல் குறித்து விளக்குக.
2. தகவல் தொடர்பியல் மாதிரிகள் என்றால் என்ன?
3. ஒருபடி நிலை, இருபடி நிலைப் பரவல் கொள்கைகொள்கை குறித்து விளக்குக.
4. லாஸ்வெல் மாதிரி -விளக்குக.
5. வீவர் மாதிரி - விளக்குக.
6. வெள்ளித் தோட்டாக் கோட்பாடு என்றால் என்ன?

## வானொலி வரலாறு

தகவல் தொடர்பைப் புரட்சிகரமானதாக மாற்ற பல புதிய கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. மனித வாழ்வின் வேகம், எதையும் விரைந்து செய்ய வேண்டும் என்னும் உந்துதல், நாகரிக வளர்ச்சி கல்வியில் முன்னேற்றம் போன்றவை வானொலிக் கண்டுபிடிப்பிற்கு முன்னோடியாயின.

கம்பியில்லாத் தந்தியின் அரிய சக்தியைப் பயன்படுத்தி மனிதக் குரலையும், இசையையும் மின்காந்த அலைகள் மூலம் வீடுகளில் கேட்கச் செய்வது எப்போது என்ற மக்களின் பேரார்வம் வானொலிக் கண்டுபிடிப்பிற்கு உதவியது. வானொலி காதுக்குரிய சாதனம். ஆகையால் அதனைப் 'பார்வையற்ற சாதனம்' (Blind medium) என்பர். ஆனால் வானொலி ஒலி வழியாக, நிகழ்ச்சிகளைக் கேட்பவரின் சிந்தனையையும், கற்பனையையும் தூண்டி அவர் உள்ளத்தில் ஒரு சிறந்த சித்திரத்தைப் பதித்து விடும் ஆற்றல் பெற்றது. வேறு ஒரு வேலையைச் செய்து கொண்டே வானொலியின் நிகழ்ச்சிகளைக் கேட்கலாம்.

## இந்தியாவில் வானொலி ஒலிபரப்பு - வரலாறும் வளர்ச்சியும்

செய்தி ஒலிபரப்பை நிகழ்த்திய தொடக்க கால நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. எனினும் இந்தியா ஒலிபரப்பில் பல தடைகளைக் கடந்து வந்து தான் இன்றுள்ள வளர்ச்சியை அடைந்துள்ளது.

பம்பாய் மாகாணத்தின் ஆளுநராக இருந்த சர் ஜார்ஜ் லாயிட்டின் வேண்டுகோளுக்கிணங்க, அஞ்சல் தந்தித் துறையின் ஒத்துழைப்புடன் 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' ஒரு சிறப்பு ஒலிபரப்பை 1921-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ஏற்பாடு செய்தது. பம்பாயிலிருந்து சுமார் 175 கி.மீ தொலைவில் புனே நகரில் இருந்த சர் ஜார்ஜ் லாயிட் இந்தச் சிறப்பு இசை நிகழ்ச்சி ஒலிபரப்பைக் கேட்டு மகிழ்ந்தார்.

தொலைதூர மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்களுள் வானொலி முதலிடமும் முக்கிய இடமும் வகிக்கிறது. வானொலி கண்டுபிடிப்பதற்கு முன்னால் புகையை எழுப்பியும், உயரமான இடங்களிலிருந்து கொடிகளைக் காட்டியும், தீப்பந்தத்தை அசைத்தும். மணியோசைகளை எழுப்பியும், முரசறைந்தும் தொலைதூரத்திற்குத் தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. நவீன தொலைதூரத் தகவல் தொடர்புச் சாதனங்களின் வரலாறு 1844 முதல் தொடங்குகிறது. இந்த ஆண்டில்தான் மோர்ஸ் என்பவர் மின்கம்பிகளின் வழியாகச் செய்திகளைக் குறியீடுகளாக மாற்றி அனுப்பலாம் எனக் கண்டுபிடித்தார். இது அவருடைய பெயராலேயே மோர்ஸ் ஒலிக்குறி (Mores code : 1844) என்று அழைக்கப்பட்டது. ஒவியலைகளுக்கும் (sound waves) மின்னோட்டத்திற்கும் (electric current) உள்ள உறவின் அடிப்படையில் பெல் (Bell : 1876) என்பவர் உருவாக்கிய ஒலிபெருக்கி (microphone) தொலைதூரத் தகவல். தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சியில் அடுத்த கட்டமாகக் கருதத்தகுவதாகும்.

ஒலியலைகளை மின்னலைகளாக மாற்றும் முயற்சி தொடர்ந்து நடந்துவந்தது. ஒளியலைகள், ஒலியலைகளைக் காட்டிலும் இருமடங்கு வேகமாகச் செல்லும் திறன் கொண்டவை. இதனால் ஒலியலைகளின் வேகம் மிகவும் குறைவாகவே இருந்தது. ஆனால் மின் ஒலியலைகளின் இவற்றை மின்ஒலியலைகளாக (Radio waves) மாற்றியபோது, அதை போல வேகம் இத்திறனை மார்க்கோனி சோதித்தறிந்தார். இவைTrans Allantic Forest : 1906) என்பவர். மின்ஒலி அலைகளைச் செவிமடுக்கும் அளவிற்கு ஆற்றல் பெற்றவையாக மாற்றும் சாதனத்தைக் (Vacuum tube) கண்டுபிடித்தார். இந்த ஆய்வுகள் மேலும் வளர்ந்ததன் விளைவாக 1922 இல் வானொலி ஒலிபரப்புத் தொடங்கப்பட்டது.

வானொலி ஒலிபரப்பின் அறிமுகத்திலும் வளர்ச்சியிலும் தமிழகத்திற்குக் குறிப்பிடத்தக்க பங்கு உண்டு. இந்தியாவிலேயே முதன் முதலாக 1924ம் ஆண்டு மே திங்களில் சென்னை மாகாணத்தில் (Madras Presidency) வானொலிக்குழு (Radio Cius) ஒன்று அமைக்கப்பட்டது; சூலைத் திங்களில் ஒலிபரப்புத் தொடங்கியது.அடுத்த இரு

ஆண்டுகளில் பம்பாயிலும் கல்கத்தாவிலும் வானொலி நிலையங்களை அமைக்கத் தனியார் நிறுவனங்கள் உரிமம் பெற்றன 1927ம் ஆண்டு பம்பாயிலிருந்து அமைப்பு முறையிலான வானொலி ஒலிபரப்புத் தொடங்கியது. 15 கிலோ வாட் ஆற்றலுள்ள இவ்வொலிபரப்பு 30 மைல் சுற்றளவை எட்டியது. இதே ஆண்டிலேயே கல்கத்தாவிலும் ஒலிபரப்புத் தொடங்கியது. பின்னர் சென்னையில் வானொலிக்குழு கலைக்கப்பட்டு 1930 ஏப்ரலில் அரசுச் சார்பிலான ஒலிபரப்புத் தொடங்கியது.

**வானொலி தனித்தன்மைகள், கோட்பாடுகள்**

இந்தியாவில் செய்தித்தாட்களின் வளர்ச்சிக்கு ஆங்கிலேயே அரசின் அடக்குமுறை முட்டுக்கட்டையாக இருந்ததுபோல வானொலியின் வளர்ச்சிக்குப் பொருளாதார நெருக்கடி பெரும் தடையாக இருந்தது. தொடங்கப்பட்ட வானொலி நிலையங்கள் அனைத்தும் இழப்பில் இயங்கிக் கொண்டிருந்தன. 'ஒலிபரப்பும் பொறுப்பேற்றிருந்த இந்தியாவின் 'பிராட்காஸ்டிங் கம்பெனி ஆப் இந்தியா ' ரூ.15 லட்சம் முதலீட்டை அதிகாரபூர்வமாக வைத்திருந்த போதிலும் நிறுவனச் செலவு போக கையில் ஒன்னரை லட்சன் ரூபாயே மீதி வைத்திருந்தனர்' எனும் குறிப்பு வியப்பைத் தருகிறது நிதி உதவிக்கு அரசு முன்வராத நிலையில் இந்தியன் ரேடியோகிராம் கம்பெனி மூன்றரை லட்சம் ரூபாயைக் கடனாக அளித்தது. ஆனாலும் இழப்புக்களே தொடர்ந்ததால் இந்தியாவிற்கு வானொம். பகல் கனவாகப் போய்விடுமோ என்ற சூழல் நிலவியது.

இந்நிலையில் அரசு சில தீவிரச் செயல்திட்டங்களை உருவாக்கியது. இதன் அடிப்படையில் சுமார் 40 லட்சம் ரூபாய் செல்லில் முதல் முயற்சியாக இந்திய ஒலிபரப்புச் சேவை (The Indian Broadcasting Service) ஒன்றை அரசு நிறுவியது. பி.பி.சி யிலிருந்து 1935 இல் லயனல் பீல்டன் (Lionil Fieldett) என்பவரை அனைத்து 4 . (Controller of Broadcasting) ஆங்கிலேய அரசு நியமித்தது. அடுத்த ஆண்டே பி.பி.சி.யின் ஆராய்ச்சிப் பிரிவுத் தலைவராக கிர்க் (H.L. Kirke) என்பவர். நியமிக்கப்பட்டார். இந்திய ஒலிபரப்பின் வளர்ச்சிக்காக அரசு 40 லட்சம் ரூபாயை ஒதுக்கி வைத்தது. கிர்க் அவர்கள் ஏற்கனவே இருந்த மத்திய அலைவரிசை நிலையங்கள் தவிர, 7 புதிய

மத்திய அலைவரிசை நிலையங்களைத் தொடங்கப் பரிந்துரை செய்தார். செய்தி அறிக்கை ஒலிபரப்பாக வேண்டி டெல்லியில் ஒரு சிற்றலை ஒலிபரப்பியையும் அமைக்க அவர் பரிந்துரைத்தார். 1936 ஆகஸ்டில் பி.பி.சி. யிலிருந்து வந்த சி.டபுள்யூ காய்டர் (C.W. Goyder) என்பவர் தலைமைப் பொறியாளராக நியமனம் பெற்றார். 1933 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்தியக் கம்பியில்லாத் தந்திச் சட்டம் (The Indian Wireless Telegram Act 1933) 1934 ௱ ုဖø வந்தது. 1935 செப்டம்பர் 10 இல் மைசூரில் 'ஆகாசவாணி' நிலையம் ஏற்படுத்தப்பட்டது.1936 சனவரியில் டெல்லி நிலையம் ஒலிபரப்பைத் தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து சில மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்திய ஒலிபரப்புச் சேவை (ISBS) என்ற பெயர் 'அகில இந்திய வானொலி' (All India Radio : AIR) என்று மாற்றம் பெற்றது (1936). இப்பெயர்மாற்றம் சுவையான பின்னணியைக் கொண்டதாகும். எண்ணித் துணிக கருமம்' என்ற குறள்மொழிக்கேற்பப் பன்னூறு முறை தீவிரமாக - ஆலோசித்த பின்னணியை வானொலி இயக்க முன்னோடி திரு. கோபாலசாமி தமது தன் வரலாற்று நூலில் சுவைபடக் குறிப்பிட்டுள்ளார். இவர் 1935ல் மைசூர் சமஸ்தானத்தில் தொடங்கப்பட்ட வானொலி நிலையத்திற்கு ஆகாசவானி (Akashavani) என்று பெயர் சூட்டினார்.! தமிழகம் தவி இந்தியாவின் பிற மாநிலங்கள் 'அனைத்தும் 'ஆகாசவாணி' என் உச்சரிப்புடனேயே இன்றுவரை தமது ஒலிபரப்பைத் தினந்தோறும் தொடங்குகின்றன, தமிழகத்தில் மட்டும் 'ஆல் இந்தியா ரேடியோ' என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.

இந்தியா விடுதலை பெற்றபோது 1947 இல் பதினோரு வானொலி நிலையங்கள் இருந்தன. இவற்றுள் ஆறு நிலையங்கள் இந்திய அரசின் கட்டுப்பாட்டிலும், ஏனையவை (மைசூர், பரோடா, திருவனந்தபுரம், ஹைதராபாத், அவுரங்காபாத்) சமஸ்தான ஆட்சியாளர்களின் கீழும். இயங்கின. அரசின் சுட்டுப்பாட்டிலிருந்த ஆறு நிலையங்களுள் 'இரண்டு (சென்னை, திருச்சி) தமிழ்நாட்டில் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். 1950 இல் வானொலி

நிலையங்களின் எண்ணிக்கை இருபத்தியொன்றாக உயர்ந்தது. ஒலிபரப்பில் வட்டார மொழிகளுக்குப் போதிய இடம் தரப்பட்டது. முதலாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில் (1951-55) பூனா ராஜ்காட், ஜெய்ப்பூர், இந்தூர், சிம்லா ஆகிய இடங்களில் புதிய வானொலி நிலையங்கள் அமைக்க ரூ.3.5 கோடி செலவிடப்பட்டது. திட்டக் காலத்தின் முடிவில் நாட்டின் மொத்தப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு அளவிற்கே வானொலி ஒலிபரப்புகள் எட்டின; கிட்டத்தட்ட 50 சதவீத மக்கள் மட்டுமே இதனால் பயனடைந்தனர்.

1957இல் விவித பாரதி ஒலிபரப்புத் தொடங்கப்பட்டது. இது இந்திய - வானொலி வளர்ச்சியில் ஒரு மைல்கல் எனலாம். வானொலி ஒலிபரப்பில் திரைப்படப் பாடல்களின் பங்கு தவிர்க்க இயலாதது என்பதற்கு விவித பாரதியின் அறிமுகம் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது .1982 இல் கேஸ்கர் (Keskar) என்ற தகவல் ஒலிபரப்பு அமைச்சர் 'சாஸ்திரிய சங்கீதத்'திற்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்ற நோக்கில் திரைப்படப் பாடல்கள் ஒலிபரப்பப்படுவதற்குத் தடைவிதித்தார். ஒவ்வொரு வானொலி நிலையமும் தம்மால் இயன்ற அளவு சாஸ்திரிய சங்கீதத்திற்கு அதிக நேரம் ஒதுக்கி நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்க வேண்டும் என்ற சுற்றறிக்கையை அனுப்பினார். பல நிலையங்களில் ஒலிப்பதிவு அறை போன்ற அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் அவர்களால் இதனைச் சரிவரச் செயல்படுத்த இயலவில்லை. சாஸ்திரிய சங்கீதத்திற்கு . முக்கியத்துவம் தருவதற்காக இசைப்பயிற்சி வகுப்புகளும். வானொலியில் தொடங்கப்பட்டன. ஆனால் மக்கள் இவற்றைப் பொருட்படுத்தவில்லை. அவர்கள் அப்போது ஆற்றல் மிக்க ஒலிபரப்புகளாகத் திகழ்ந்த இலங்கை வானொலி, பாகிஸ்தான் வானொலிகளைக் கேட்கத் தலைப்பட்டனர். மக்களை அதிகமாகக் கவர்ந்திழுக்கும் திரைப்படப் பாடல்களுக்கும், வர்த்தக விளம்பரங்களுக்கும் அவை அதிக முக்கியத்துவம் தந்தன. இதனால் அகில இந்திய வானொலி ஒலிபரப்புகளைக் கேட்பவர் எண்ணிக்கை வெகுவாகக் குறையத் தொடங்கியது. எங்கு பார்த்தாலும் இலங்கையிலும் பாகிஸ்தானிலும் வாசிக்கப்படும் செய்திகளும். அறிவிப்புக்களும் கேட்ட வண்ணம் இருந்தன.

மக்களின் உணர்வினை அறியாத அரசு, மாற்று ஏற்பாடுகளைச் செய்தது. திரைப்படப்பாடல்கள் மக்கள் மனதைக் கெடுத்து அவர்களது ஒழுக்கத்தைச் சீரழிக்கும் என்று தவறான கருத்தைக் கொண்டிருந்த அரசு, இசை விற்பன்னர்களை அழைத்து, மெல்லிசைகளைத் தயாரித்து வழங்கும்படிக் கேட்டுக்கொண்டது. அரசின் இம்முயற்சியும் தோற்றுப்போனது. மக்களின் ஆதரவையும். வருவாயையும் ஒருசேர இழக்க விரும்பாத அரசு, தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டது. இதன் பலனாக 1957 அக்டோபர் 2ம் தேதி காந்தி பிறந்த நாளன்று விவிதபாரதி வர்த்தக ஒலிபரப்பு அறிமுகம் செய்யப்பட்டது. முதலில் தினமும் 5 மணி நேரம் விவித பாரதி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது. பின்னர் 12 மணி நேரமாகவும் தற்போது அதிக அளவிலும் இதன் ஒலிபரப்பு வளர்ச்சி கண்டுள்ளது. விவித பாரதி நிகழ்ச்சிகள் மும்பையிலும் (இந்தி) சென்னையிலும் (தமிழ்) தயாரிக்கப்பட்டு குறைந்த சக்தி அஞ்சல் நிலையங்கள் மூலம் ஒலிபரப்பப்படுகின்றன. இதனால் வானொலி நிலையங்களுக்கு வர்த்தக ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் பல நாட்கள் முன்னதாகவே ஒலிப்பதிவு செய்யப்பட்டு அனுப்பப்படுகின்றன. தற்போது உடனுக்குடன் கேட்ட பாடலை உடனே ஒலிபரப்புகின்ற அளவுக்கு (வசந்த அழைப்பு) வர்த்தக நிகழ்ச்சிகள் வானொலியில் விரைந்த -முன்னேற்றம் கண்டுள்ளன. திரைப்படப் பாடல்களுக்காக மட்டுமே விவித பாரதி நிகழ்ச்சி ஏற்படுத்தப்பட்டதன்று. விவித பாரதியின் பெரும்பாலான நிகழ்ச்சிகள் திரைப்படப்பாடல்கள் ஒலிபரப்பாகவே இருந்தாலும் (80%) மெல்லிசைக்கும், நாடகம் போன்ற பிற நிகழ்ச்சிகளுக்கும் சிறிதாக (20%) நேரம் ஒதுக்கப்படுகிறது. தமிழகத்தின் சில திரைப்பட நடிகர்களும், மேடை நாடக நடிகர்களும், வானொலி நாடகங்கள் வாயிலாகவே பெரும்புகழ் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். விவித பாரதியின் பங்கும் பணியும் பற்றி ஆராய அமர்த்தப்பட்ட வர்கிஸ் குழு (Verghese Committee) விவித பாரதி நிகழ்ச்சிகள் சுவையாக இருந்தாலும் அவை பலருடைய விருப்பத்திற்கும் தக்கவாறு பல்வேறு பரிமாணங்களாக வளர்ச்சியடையவில்லை என்று அறிக்கை தந்துள்ளது.

விவித பாரதியில் விளம்பரங்களை ஒலிபரப்புவது பற்றிய ஆய்வினை நடத்த அரசாங்கம் திரு. சந்தா என்பார் தலைமையில் ஒரு குழுவினை (Chanda Committee) அமைத்தது. அக்குழு 1967 இல் தனது அறிக்கையைத் தந்தது. அதன்படி பம்பாய், பூனா நாக்பூர், கல்கத்தர் ஆகிய வானொலி நிலையங்கள் விளம்பரங்களை ஏற்றன. 1968 ஏப்ரலில் தில்லி வானொலி நிலையமும், 1969 எப்ரலில் சென்னை, திருச்சி வானொலி நிலையங்களும் வர்த்த விளம்பரங்களை ஒலிபரப்பத் தொடங்கின.

**வானொலிக் கோட்பாடுகள்**

அகில இந்திய வானொலி தம் ஒலிபரப்புகளில் சில கோட்பாடுகளைப் பின்பற்றுகிறது. அவையாவன.

1. ஒலிபரப்பில் நட்பு நாடுகளைக் குறை கூறக் கூடாது.

2. எந்தச் சமயத்தையோ அல்லது சமூகப் பிரிவினரையோ குறை கூறக் கூடாது.

3. மானநஷ்டம் ஏற்படுத்துவனவற்றையோ, தரக் குறைவான வற்றையோ ஒலிபரப்பக் கூடாது.

4. வன்முறையைத் தூண்டும் விதத்தில் ஒலிபரப்பு இருத்தல் கூடாது.

5. நீதி மன்ற அவமதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் எந்த ஒலிபரப்பும் இருத்தல் கூடாது.

6. குடியரசுத் தலைவரின் நேர்மை, நீதித்துறையின் நேர்மை ஆகிய வற்றிற்கு எதிராக ஒலிபரப்பக் கூடாது.

7. நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதிக்கும் எதையும் ஒலிபரப்பக் கூடாது.

8. தனிமனிதர் எவரையும் தனிப்பட்ட முறையில் பெயர் குறிப்பிட்டு குறை கூறக்கூடாது.

9. தேர்தல் அறிவிப்பு வெளியான பின்னர் ஒலிபரப்பாகும் எந்த நிகழ்ச்சியிலும், எந்த ஒரு அரசியல் கட்சியின் உறுப்பினரோ./ அனுதாபியோ பங்கேற்கக் கூடாது.

10. அரசியல் கட்சிகள் தம் செலவில் தயாரித்த திட்டமிட்ட விளம்பர நிகழ்ச்சிகள் எதுவும் ஒலிபரப்பக் கூடாது.

11. தேர்தலுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ள பிரதமர், முதலமைச்சர், அமைச்சர்கள் ஆகியோரின் ஒலிபரப்பும் இடம்பெறக் கூடாது.

4. ஒலிபரப்புக் கட்டுப்பாட்டாளர் (Controller of Broadcasting

1935-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தேதியிலிருந்து ஒலிபரப்புத் கட்டுப்பாட்டாளர் (Controller of Broadcasting) என்ற புதிய பதவி ஒன்று உருவாக்கப்பட்டது. 1935-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கழகத்திலிருந்து லயனல் ஃபீல்டன் (Lionel Fieldon) என்பவன் இந்திய அரசு ஒலிபரப்புச் சேவையின் முதலாவது ஒலிபரப்புக் கட்டுப்பாட்டாளராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

உலக நாடுகளில் வானொலி ஒலிபரப்பு -

1844-ஆம் ஆண்டு மோர்ஸ்ட் என்பவர் மின்கம்பிகளின் வழியாகச் செய்திகளைக் குறியீடுகளாக மாற்றி அனுப்பலாம் என்பதைக் கண்டுபிடித்தார். ஒலி அலைகளுக்கும், மின்னோட் டத்திற்கும் உள்ள உறவின் அடிப்படையில் அலெக்சாண்டர் தி கிரகாம்பெல் 1876-ஆம் ஆண்டில் ஒலிபெருக்கியை உருவாக்கி தொலைத் தகவல் தொடர்புச்சாதன வளர்ச்சியில் பங்கேற்றார். இதனைத் தொடர்ந்து மார்க்கோனி பல ஆராய்ச்சிகளைச் செய்து ஒலி அலைகளை மின் அலைகளாக மாற்றினார். இவர் 1896-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தமது வானொலிக் கண்டுபிடிப்பை இங்கிலாந்தில் பதிவு செய்தார். 1901-ஆம் ஆண்டு மார்க்கோனி வானொலி நிறுவனத்தைத் தொடங்கினார். 1904-ஆம் ஆண்டு பிலிமிங் என்பவர்

மின்னணுக் குழாயில் மின்னலைகளை ஒரே திசையில் ஓட விட்டுக் காட்டினார். லீ.டி. காரஸ்ட் என்னும் அமெரிக்க அறிவியலாளர் மின்னணுக் குழாயில் கம்பிப் பின்னலைச் சேர்த்து வலிமை உடைய குழாயாக மாற்றினார்.

1920-ஆம் ஆண்டு நவம்பர் இரண்டாம் தேதி அமெரிக்காவிலுள்ள பிட்ஸ் பர்க்கில் உலகத்தின் முதல் ஒலிபரப்பு நிலையம் நிறுவப்பட்டது. இந்த ஒலிபரப்பு நிலையத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஹார்டிங்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி முதல் ஒலிபரப்பாகியது.

ஐரோப்பிய நாடுகளில் இங்கிலாந்து ஒலிபரப்பில் அதிக அக்கறை காட்டிய முதல் நாடாகும். ஆனால் தனிமனிதன் விரும்பிய எதையும் ஒலிபரப்புவதற்குப் பிரிட்டன் பல கட்டுப்பாடுகளை விதித்தது. 10 வாட் ஆற்றலுக்கு மேல் ஒலிபரப்புச் செய்தல் கூடாது என்று தடை விதித்தது. எந்த நேரத்திலும் ஒலிபரப்புத் தடைசெய்யப்படலாம் என்ற அச்சத்திலேயே ஒலிபரப்பினர்.

1922-ஆம் ஆண்டு இலண்டனில் 100 வாட் ஆற்றலில் ஒலி பரப்புநிலையம் நிறுவப்பட்டது. இதே ஆண்டில் பிரிட்டனின் ஆறு நிறுவனங்கள் ஒன்றுகூடி 'பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன்' (BritishBroadcasting Corporation) என்ற பொது நிறுவனத்தை உருவாக்கினர்.இந்நிலையம் தினசரி நிகழ்ச்சிகளை ஒலி பரப்பியது. இதனைத் தொடர்ந்து பர்மிங்ஹாமிலும், மான்ஸ் செஸ்டரிலும் ஒலிபரப்புகள் தொடங்கப்பட்டன. 1923-ஆம் ஆண்டு செக்கோஸ்லோவாக்கியாவிலும் ,ஜெர்மனியிலும், பெர்லினிலும் ஒலிபரப்புகள் தொடங்கப்பட்டன.

தொடக்க காலங்களில் 100 முதல் 500 மீட்டர் நீளமுடைய மத்திய அலைகளிலும், 1000 முதல் 2000 மீட்டர் நீளமுடைய நெட்டலை களிலும் ஒலிபரப்புகள் செய்யப்பட்டன. 1926-ஆம் ஆண்டு குறுகிய அலைகளைப் பயன்படுத்தி நெடுந்தொலைவிற்குச் செய்திகளை அனுப்பினர். 1928-ஆம் ஆண்டில் உலகில் 400 வா நிலையங்கள் இருந்தன. 1948-ஆம் ஆண்டு 'டிரான்சிஸ்டர்' கண்டு பிடிக்கப்பட்டது.

உலகிலுள்ள அனைத்து வானொலி நிலையங்களுக்கும் தலைமைச் செயலகம் ஜெனிவாவில் உள்ளது. இச்செயலகம், வானொலி நிலையங்களுக்குரிய அலைவரிசைகளைத் தீர்மானிக் கின்றது. ஒரு வானொலி நிலையத்தின் அலை வரிசையில் மற்றொரு வானொலி நிலையம் குறுக்கிடாதவாறு இச்செயலகம் பணியாற்றுகிறது. உலகிலுள்ள அனைத்து வானொலி நிலையங்களுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துகிறது.

**வங்காள வானொலிக் குழாம்**

வங்காள வானொலிக்குழாத்திற்கு (Radio club) சிறிய வானொலி ஒலிபரப்புக் கருவி மூலம் நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப தற்காலிக அனுமதி வழங்கப்பட்டது. இந்தக் குழாம் 1923 நவம்பரில் தனது ஒலிபரப்புச் சேவையைத் தொடங்கியது.

1924-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பம்பாய் வானொலிக் குழாம் மார்க்கோனி ஒலிபரப்புக் கருவி மூலம் தனது ஒலிபரப்புப் பணியைத் தொடங்கியது. சென்னையில் 1926-ஆம் ஆண்டு மாதம் 16ஆம் தேதி சென்னை மாகாண வானொலிக் குழாம் தோற்றுவிக்கப்பட்டது. தொழில்சாரா வானொலி ஆர்வலர்களின் முயற்சியால் தொடங்கப்பட்டன.

இவ்விரண்டு நிலையங்களுமே மத்திய அலை வரிசையில் தமது நிகழ்ச்சிகளை ஒலிபரப்பின. இந்திய ஒலிபரப்பு நிறுவனம் வெற்றிகரமாகத் தனது சேவையைத் துவக்கிய போதும், அதிக நிர்வாகச் செலவின் காரணமாகவும், வருமானம் குறைந்ததாலும் 1930-ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்திய ஒலிபரப்பு நிறுவனம் செயலிழந்தது.

3. இந்திய அரசு ஒலிபரப்புச் சேவை (Indian State Broadcasting Service)

இந்திய ஒலிபரப்பு நிறுவனத்தின் கீழ் இயங்கி வந்த வானொலி ஒலிபரப்பு நிலையங்களை அரசே ஏற்பதற்கான விரிவான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அவற்றிற்கு அரசின் நிரந்தர நிதிக் குழுவும் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி, 1930-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒன்றாம் தேதி ஒலிபரப்புப் பணி அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அதற்கு 'இந்திய அரசு ஒலிபரப்புச் சேவை' (Indian State Broadcasting Service) என்று பெயரிடப்பட்டது.

1930-ஆம் ஆண்டுகளில் உலக நாடுகளை அலைக்கழித்த மாபெரும் பொருளாதாரத் தேக்கம் இந்தியாவையும் தாக்கியது. எனவே, இந்திய அரசு ஒலிபரப்புச் சேவைக்குப் பணம் செலவழிக்க யோசனை செய்தது. அதனடிப்படையில் இந்திய அரசு மக்களின் வரிப்பணத்தைப் பெருமளவு செலவழிக்கின்ற வகையில் எவ்வித ஒலிபரப்பு வளர்ச்சிப் பணியையும் மேற்கொள்ள முடியாது என அறிவித்தது.

வானொலி நிலையங்களை மூடிவிடுவதென்று தீர்மானித்து அரசு அறிவிப்பை வெளியிட்டவுடனே மக்களிடத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. அனைத்துத் தரப்பிலும் இருந்தும் அரசுக்கு எதிர்ப்புத் தோன்றியவுடன், எப்படியேனும் ஒலிபரப்பைத் தொடர வேண்டும் என்ற கோரிக்கையும் வலுப்பெற்றது. தீவிரப் பரிசீலனைக்குப் பின்னர், பெரும் தயக்கத்துடன், மக்களின் கோரிக்கைக்குச் செவிசாய்ப்பதாகக் கூறிய அரசு தற்காலிகமாகத் தொடர்ந்து ஒலிபரப்பு நீடிக்கும் என்று அறிவித்தது. இதனடிப் படையில் 1932-ஆம் ஆண்டு மே மாதத்தில் அரசாங்க நிாவாகத்தின் கீழ் தொடர்ந்து வானொலி ஒலிபரப்பினை நீட்டிப்பது என்று

திட்டவட்டமாக முடிவெடுக்கப்பட்டு, இன்று வரை அரசின் கட்டுப்பாட்டிலேயே வானொலி தொடர்ந்து செயலாற்றி வருகின்றது.

வானொலி நிலையங்களின் நிதியாதாரத்தைப் பெருக்குவதற்காக வானொலிப் பெட்டிகள், அதற்கான வால்வுகள் மீதான சுங்கத் தீர்வையை உயர்த்துவதென்று அரசு

முடிவெடுத்தது. 1993ஆம் ஆண்டில் வானொலி உரிமம் வசூலிப்பதற்கான இந்திய வடர்லஸ் தந்திச் சட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்தது.

4. ஒலிபரப்புக் கட்டுப்பாட்டாளர் (Controller of Broadcasting

1935-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தேதியிலிருந்து ஒலிபரப்புத் கட்டுப்பாட்டாளர் (Controller of Broadcasting) என்ற புதிய பதவி ஒன்று உருவாக்கப்பட்டது. 1935-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கழகத்திலிருந்து லயனல் ஃபீல்டன் (Lionel Fieldon) என்பவன் இந்திய அரசு ஒலிபரப்புச் சேவையின் முதலாவது ஒலிபரப்புக் கட்டுப்பாட்டாளராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

**வானொலி நிகழ்ச்சிகள்**

வானொலி நிகழ்ச்சிப் பிரிவின் தலைவர் நிலைய இயக்குநர் ஆவார்.இவருக்கு உதவி செய்வதற்காக நிகழ்ச்சிப் பொறுப்பாளர்கள் பலர் இருப்பர். மகளிர், குழந்தைகள் நிகழ்ச்சிகள், இளையபாரதம், நாடகம், இலக்கியம் போன்ற

நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் பொறுப்பு நிகழ்ச்சி பொறுப்பாளர்களையே Programme executives) சாரும். இவர்களையே பெக்ஸ்(PEX) என்று அழைப்பதுண்டு. இவர்களுக்குக் கீழ் பல ஒலிபரப்புப பொறுப்பாளர்கள் (Transmission executives) இருப்பர். நிகழ்ச்சி பொறுப்பாளர்களுக்கு உதவி புரிய பல அலுவலக உதவியாளர்கள் இருப்பர். இவர்களை சுருக்கமாக 'ட்ரெக்ஸ்'(Trex) என்பர். இவர்கள் வானொலி நிகழ்ச்சிகள் தயாரிக்க உரிய நபர்களை அழைக்கும் படிவங்களை அனுப்பி உதவி புரிவார்கள். நிகழ்ச்சிப் பொறுப்பாளர்களுக்கு உதவிபுரிய பல தற்காலிகப் பணியாளர்களும், நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப அறிவிப்பாளர்களும் உள்ளனர்.

சிறுவர் நிகழ்ச்சிகள்

அகில இந்திய வானொலியின் வரையறுக்கப்பட்ட நேயர்களுக்கான நிகழ்ச்சிகளில், சிறுவர்களுக்கான நிகழ்ச்சி ஒரு தனி இடத்தைப் பெற்றிருக்கிறது.

அகில இந்திய வானொலியின் சிறுவர் நிகழ்ச்சிகள்

1. மூன்றிலிருந்து எட்டு வயதிற்குட்பட்டவர்களுக்கான 'மழலை' நிகழ்ச்சிகள்

2. ஒன்பது முதல் பதினான்கு வயதிற்குட்பட்டவர்களுக்கான 'சிறுவர் நிகழ்ச்சிகள்' என இருவகையாக அமைகின்றன.

18.8.1946-ஆம் ஆண்டில் 'திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம்' சிறுவர்களுக்கான நிகழ்ச்சியைத் தொடங்கியது. 'மணிமலர்' என்ற நிகழ்ச்சித் தலைப்பில் பிற்பகல் 1.00 மணி முதல் 1.30 மணி வரை இந்நிகழ்ச்சி ஒலிபரப்பானது. 1982 ஆம் ஆண்டில் அகில இந்திய அளவில் ஆறு வானொலி நிலையங்களில் சிறுவர் நிகழ்ச்சிகளுக்கான சிறப்புப் பிரிவுகள் தொடங்கப் பெற்றன.

மழலையர் நிகழ்ச்சிகளில் புராண இதிகாசங்களிலிருந்து கதைகள், மழலைப் பாடல்கள், பல குரலிசை போன்ற நிகழ்ச்சிகளும், போராட்ட வீரர்களின் வாழ்க்கை வரலாறுகளும், தேசப்பற்று, ஆரோக் கியமான வாழ்வு, சிறு சேமிப்பு, சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பற்றிய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன.

கிராமப்புற சிறுவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் சில வானொலி நிலையங் கிராமப்புற சிறுவர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன. மதுரை வானொலி நிலையம் கிராமப்புற சிறுவர்களுக்கான நிகழ்ச்சியினை நாற்றங்கால் என்ற தலைப்பில் ஒலிபரப்புகின்றது. இந்த நிகழ்ச்சி ச்சி வாரந்தோறும் சனிக்கிழமை மாலை மணி 6.10 முதல் 6.30 வரை ஒலிபரப்பாகின்றது.

சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குபவர் 'வானொலி அண்ணா 'வானொலி அக்கா' என்றழைக்கப் படுகின்றனர். இது ஒரு தொகுப்பு நிகழ்ச்சியாகும். தலைவர்கள், அறிவியற் அறிஞர்கள், சமூகப் பணியாளர்கள், மகான்கள், அறிவியல், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, கலை, பண்பாடு, ஒழுக்கம், மனித

மதிப்புகள், இலக்கியம், விளையாட்டு ஆகியன குறித்து சிறுவர்களுக்காக ஒலிபரப்பப்படுகின்றன. குறிப்பிட்ட கால இடைவெளியில் பொது அறிவு வினாடி வினாப் போட்டி நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன.

சிறுவர்களின் கலைத் திறன்களை வளர்ப்பதற்காக, சிறுவர் இசைக்கெனத் தனி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறுவர் இசை நிகழ்ச்சியில் கர்நாடக, ஹிந்துஸ்தானி வாய்ப்பாட்டு மற்றும் இசைக் கருவிகள் இசைத்தல் இடம்பெறுகின்றன.

13.25. மகளிர் நிகழ்ச்சிகள்

தகவல் தொடர்புச் சாதனங்கள் பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் துணை நிற்கின்றன. இந்த வகையில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மகளிர்க்கென நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றது. அகில இந்திய வானொலியின் பெண்களுக்கான இந்தச் சிறப்பு நிகழ்ச்சிகளின் நோக்கம் பெண்களுக்கு கல்வியளித்தலும், மகிழ்வித்தலுமாகும். இது ஒரு தொகுப்பு நிகழ்ச்சியாகும். கிராமப்புற பெண்கள், நகர்ப்புற பெண்கள் கல்வி அறிவு பெற்றோர், பெறாதோர், பணிபுரியும் பெண்கள், இல்லப் பெண்கள் ஆகிய அனைத்துப் பிரிவினர்களுக்கும் நிகழ்ச்சிகளை வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன.

பெண்களின் வசதிக்கேற்ப முற்பகல் நேரத்திலும், மாலை நேரத்திலும் ஒலிபரப்புகின்றன. மேலும் அதில இந்திய வானொலியின் காலத்தில் மகளிர் ஒலிபரப்பில் தாய்சேய் நலம், திருமண வயது. கருவற்ற காலத்தில், பேறு காலத்தில் பெண்கள் கவனிக்கப்பட வேண்டியவை, கருவுற்ற பெண்டிருக்குச் சத்துணவு, குழந்தை வளர்ப்பின் பல்வேறு கால கட்டங்களில் பராமரிப்பு, தாய்ப்பால், பெண்சிசுக் கொலை, குழந்தை களைத் தாக்கும் கொடிய நோய்கள். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், குழந்தைப் பருவத்தில் ஊனம், சிக்கனம் மற்றும் சேமிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, குடிசைத் தொழில்கள், கிராமப்புறத்தில் வேலை வாய்ப்புகள்,

மத்திய மாநில அரசுகளின் வேலை வாய்ப்புத் திட்டங்கள், இலவச சட்ட உதவி, கல்வி, எழுத்தறிவு போன்ற நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன.

13.26. இளைய பாரதம் - இளைஞர்களுக்கான நிகழ்ச்சிகள்

அகில இந்திய வானொலியின் தொகுப்பு நிகழ்ச்சிகளில் (Composite Programmes) இளைஞர்களுக்கான இளையபாரதம் நிகழ்ச்சியும் ஒன்றாகும். 23.07.1969-இல் புதுடெல்லி வானொலி நிலையம் சோதனை முறையில் இளைஞர்களுக்கான தனி அலை வரிசையினைத் தொடங்கியது. இந்நிகழ்ச்சியில் கல்லூரி மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று முதல் தரமான நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கினர். 'தலைமுறையின் எதிரொலி' (Echoes of Generation) என்ற இளைய பாரத நிகழ்ச்சி, 1976-ஆம் ஆண்டு ஆசிய ஒலிபரப்புச் சங்கத்தின் (Asian Broadcasting Union - ABU) விருதினைப் பெற்றது. பின்னர் கல்கத்தா, ஹைதராபாத், ஜம்மு, ஸ்ரீநகர் வானொலி நிலையங்கள் இளைஞர் களுக்கான தனி அலைவரிசையைத் தொடங்கின.

திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் 1969-ஆம் ஆண்டு இளைஞர்களுக்கான நிகழ்ச்சியினை ஒலிபரப்பியது. சென்னை வானொலி நிலையம் தமிழிலும், ஆங்கிலத்திலும் தினந்தோறும் சராசரியாக 80 நிமிடங்களுக்கு இளையபாரதம் நிகழ்ச்சியினை ஒலிபரப்பு கின்றது. திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் இளைய பாரதம் நிகழ்ச்சிக்கென 135 நிமிடங்களை ஒதுக்கியுள்ளது. இளையபாரதம் நிகழ்ச்சி தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றிருக்கின்றது. 15லிருந்து 30 வயதிற்குட்பட்ட இளைஞர்களின் எண்ணங்களை, கருத்துகளை வெளிப்படுத்த இந்நிகழ்ச்சி ஒரு வடிகாலாக அமைந்திருக்கிறது.

தேர்வு -சிறப்பு நிகழ்ச்சிகள்

அகில இந்திய வானொலியின் சில நிலையங்கள் பொதுத் தேர்வு களுக்கு முன் பத்தாம் வகுப்பு மற்றும் இறுதி ஆண்டு மானாவர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன. மதுகை ன ஒலிபரி பணையம் 'தேர்வுக்குத்

தயாராகுங்கள்' என்ற நிகழ்ச்சியினை ஒலிபரப்புகின்றது. இந்நிகழ்ச்சி 1989-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

### 13,29. தொழிலாளர்களுக்கான நிகழ்ச்சிகள்

நகர்ப்புற மற்றும் கிராமப்புறத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் பயன்பெறுகின்ற வகையில் அகில இந்திய வானொலி நிலையம் தொழிலாளர்களுக்கான நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றது. தற்போது 33 வானொலி நிலையங்கள் தொழிலாளர்களுக்கான நிகழ்ச்சியை ஒலிபரப்புகின்றன. அகில இந்திய வானொலியின் தொழிலாளர்களுக் கான இந்த நிகழ்ச்சிகள் கல்வி மற்றும் தகவல் பணியினை முதன்மையாகக் கொண்டுள்ளன. இது ஒரு தொகுப்பு நிகழ்ச்சியாகும். வானொலி நிலையங்கள் வாரத்திற்கு இருமுறை 30 நிமிடங்கள் தொழிலாளர்களுக்கான நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன.

### 13.30. வானொலி நாடகங்கள்

பெரும்பாலான வானொலி நாடகங்கள், அனைத்திந்திய வானொலியின் பணியாளர்களாலேயே தயாரிக்கப்படுகின்றன. சில சமயங்களில் பிரபல நாடகத் தயாரிப்பாளர்களும் வானொலிக்காக நாடகங்களைத் தயாரிக்கின்றனர். குரலாய்வு அடிப்படையில் நிலையக் கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மகளிர் நிகழ்ச்சிகள், இளைஞர் நிகழ்ச்சிகள், தொழிலாளர் நிகழ்ச்சிகள் போன்றவற்றில் நாடகங்கள் இடம் பெறுகின்றன. தேசிய ஒருமைப்பாடு, சமூக ஒத்திசைவு, குடும்பக் கட்டுப்பாடு, சமூக அநீதிகளை ஒழித்தல், கல்வியின் முக்கியத்துவம் போன்ற கருத்து களடங்கிய நாடகங்களுக்கு வானொலியில் முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. வானொலி நாடகங்களில் கதை மாந்தர்களைக் காண முடியாது ஆதலால் குரல் மாறுபாடுகளுக்கு மிகுந்த அழுத்தம் தரப்படுகின்றது.

பெண்கள் நல வாழ்வு நிகழ்ச்சிகள்

மத்திய அரசும், மாநில அரசுகளும், யூனியன் பிரதேசங்களும் பெண்கள் மேம்பாட்டிற்காகப் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. இந்த நலத்திட்டங்களின் முக்கிய நோக்கம் பெண்களைத் தேசிய வளர்ச்சி நீரோட்டத்திற்குக் கொண்டு வருவதேயாகும். இதற்காக அகில இந்திய வானொலி பல நல வாழ்வு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றன. பெண் கல்வி, வேலைவாய்ப்பு, உடல் நலம், உள நலம், பெண் உரிமை களைப் பாதுகாக்கும் சட்டங்கள், ஆண்-பெண் சமம் போன்றவைப் பற்றிய நிகழ்ச்சிகள் வானொலியில் இடம் பெறுகின்றன.

பெண்களின் உடமைக்கும், உணர்வுக்கும், முன்னேற் றத்திற்கும். வாழ்வுக்கும் பாதுகாப்புத் தருகின்ற வகையில் மத்திய அரசு பல்வேறு சட்டங்களை இயற்றியுள்ளது. இந்தச் சட்டங்களின் பல்வேறு அம்சங்கள் பற்றிய நிகழ்ச்சிகளை வானொலி ஒலி பரப்புகின்றது. இளமைத் திருமணத் தடைச் சட்டம், உடன்கட்டைத் தடைச் சட்டம், வரதட்சணைத் தடைச் சட்டம், சம உரிமைச்சட்டம், விதவைகள் மறுமணச் சட்டம், சுகாதாரச் சட்டம், பெண்ணிற்குச் சொத்தில் சம உரிமைச் சட்டம், வாரிசு உரிமைச் சட்டம், மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புச் சட்டம் பற்றிய நிகழ்ச்சிகளை வானொலி ஒலிபரப்புகின்றது.

பெண்களின் முன்னேற்றத்தில் பெண்களின் ஆரோக்கியம் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு அகில இந்திய வானொலி, தமிழக அரசின் பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்தக இயக்கம் மற்றும் (UNICEF ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியத்துடன் இணைந்து தாய்- சேய் என்ற தலைப்பில் 26 பகுதிகளைக் கொண்ட இத் தொடர் நிகழ்ச்சி தமிழ் நாடு மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள வானொலி மையங்களிலிருந்து 1986 ஏப்ரல் மாதம் தொடங்கி நவம்பர் மாதம் வரை ஒலிபரப்பாகியது.

அகில இந்திய வானொலியும், தேசிய எழுத்தறிவு இயக்கமும் இணைந்து முதியோருக்கான வானொலி எழுத்தறிவுக் கல்வி நிகழ்ச்சியினை 1990-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடங்கியது. 15 லிருந்து 35 வயதிற்குட்பட்ட பெண்களுக்கு

அடிப்படை எழுத்தறிவை அளிப்பதற்கு வானொலி உதவுவதே இதன் பிரதான நோக்கமாகும். 26 பகுதிகளைக் கொண்ட இத்தொடர் நிகழ்ச்சி உத்திரபிரதேசம், பீகார், மத்தியபிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களிலுள்ள வானொலி நிலையங்களிலிருந்து ஒலிபரப்பாகிறது.

13.32. குழந்தைகள் நல நிகழ்ச்சிகள்

அகில இந்திய வானொலி குழந்தைகள் மற்றும் சிறுவர் நலத்திற்காக நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றது. சிறுவர்களைச் சிந்திக்க வைக்கவும், நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளவும், சீரிய முறையில் வாழ வழி காட்டும் வண்ணமும் வானொலி நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்படுகின்றன. சிறுவர்களின் அறிவுத் திறனையும், மனத்திட்டத்தையும், நுகர்ச்சித் திறனையும் மனத்தில் கொண்டு எளிமையான, இனிய மொழி நடையில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்புகின்றன. சிறுவர், பெண் குழந்தைகளுக்காக ஆரோக்கியம், சத்துணவு, குடிநீர், சுற்றுப்புறச் சுகாதாரம், கல்வித் துறைகள் சம்பந்தமான தேசியத் திட்டச் செயலாக்கத்திற்கு வானொலி தனது சேவையை நல்குகிறது. குறிப்பாகச் சத்துணவிற்கு முக்கியத் துவம் அளிக்கப்படுகின்றது.

அகில இந்திய வானொலியின் டெல்லி தலைமையகத்தில் செயல்பட்டு வரும் மத்தியக் கல்வித் திட்டமிடுதல் பிரிவு அறிவியல் வழிமுறை' என்ற தலைப்பிலான சிறப்புத் தொடர் நிகழ்ச்சியினை 1990 ஆம் ஆண்டில் ஒலிபரப்பியது. இத்தொடர் 10 முதல் 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கான

அறிவியல் நிகழ்ச்சியாகும். சுற்ற சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் பொருட்டும். வனத்தை மேம்படுத்தவும் சிறுவர்களுக்கு விழிப்புணர்வு கொடுக்கின்ற விதத்தில் அகில இந்திய வானொலியின் επισκεπτών ηπατησου κτιρίο, αληπτι மாநில அரசின் வனத்துறையும் இணைந்து ஒலிபரப்புத் திட்டமொன்றைத் தயாரித்தது. 13

பகுதிகளைக் கொண்ட 'நிசாகா சம்பதா' (Nisarg Sampada) என்ற தலைப்பிலான இத் தொடர் நிகழ்ச்சி 1987-ஆம் ஆண்டில் ஒலிபரப்பானது. திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் இத் தொடர் நிகழ்ச்சியைத் தமிழில் 08.10.1989 இல் ஒலிபரப்பத் தொடங்கியது. இவ் ஒலிபரப்பு 13 வாரங்கள் ஒலிபரப்பப்பட்டது.

13.33. குடும்ப நல நிகழ்ச்சிகள்

நோயில்லாத, மகிழ்ச்சியான வாழ்க்கைக்குத் துணைபுரியும் வண்ணம் உடல்நலம் மற்றும் குடும்ப நலம் பற்றிய நிகழ்ச்சிகளை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகின்றன. பெரும்பான்மையான வானொலி நிலையங்கள் வாரத்திற்கொரு முறை 'ஆரோக்கிய நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன. இந்த நிகழ்ச்சியோடு மூன்று மாதத்திற்கொரு முறை 30 நிமிடங்களுக்கான 'மருத்துவ மலர்' நிகழ்ச்சியையும் சில நிலையங்கள் ஒலிபரப்புகின்றன. உயிர்க்கொல்லி நோயான எய்ட்ஸ் நோயைத் தடுப்பதற்கும், ஒழிப்பதற்கும் தனது சீரிய பணியினை வானொலி செய்து வருகின்றது. பால்வினை நோய்கள், இரத்தப் பாதுகாப்பு மற்றும் அதன் மருத்துவ நிர்வாகம் பற்றிய நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன. தூய்மையான குடிநீர், மாசுபடிந்த குடிநீரினால் உண்டாகும் வியாதிகள், போதைப் பொருள் ஒழிப்பு போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகின்றது.

குடும்பக்கட்டுப்பாடு நிகழ்ச்சி ஒலிபரப்பு அங்கீகரிக்கப்பட்டதன் விளைவாக 1967-ஆம் ஆண்டு மே மாதம் அகில இந்திய அளவில் 22 வானொலி நிலையங்களில் குடும்பநலப் பிரிவுகள் தோற்று விக்கப்பட்டன. இந்தப் பிரிவுகளில் ஒன்று சென்னை வானொலி நிலையத்திற்குக் கிடைத்தது. பெருமைக்குரிய ஒன்றாகும். இந்தச் சிறப்புப் பிரிவின் தொடக்க காலத்தில் சென்னை வானொலி நிலையம் நாள்தோறும் இரண்டு நிமிடங்களுக்கு மட்டுமே குடும்பக் கட்டுப்பாடு நிகழ்ச்சியை ஒலிபரப்பியது.

1970-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் குடும்பக்கட்டுப்பாடு சேவையை வழங்கும் முறைமையானது ஆரோக்கியத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட சேவையாகக்

குறிப்பாகத் தாய்- சேய் நலம், சத்துணவு போன்றவற்றுடன் இணைத்து குடும்ப நலம் என்று அழைக்கப்படலாயிற்று.

1977-ஆம் ஆண்டு முதல் சென்னை வானொலி நிலையம் குடும்பநல நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்காக நாள்தோறும் 10 நிமிட நேரத்தை ஒதுக்கியது. இந்த ஒலிபரப்பு நேரம் 1978-ஆம் ஆண்டு முதல் நாள் தோறும் 20 நிமிடங்களாக உயர்ந்தது. அகில இந்திய வானொலியின், 36 நிலை யங்கள் குடும்பநல நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன. 7

13.34. கிராம வளர்ச்சி நிகழ்ச்சிகள்

இந்தியா போன்ற வளரும் நாடுகளில் அரசின் கொள்கைகள், வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வைப் பொது மக்களிடையே ஏற்படுத்துவதில் வானொலி முக்கியப் பங்காற்றுகிறது. அகில இந்திய வானொலி அரசின் பல்வேறு திட்டங்களான கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி சுயவேலை வாய்ப்புக்காகக் கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி, தேசியக் கிராம வேலை வாய்ப்புத் திட்டம், கிராமப்புற விவசாயிகளுக்கான வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டம், இந்திரா வீட்டு வசதித் திட்டம் போன்றவற்றைப் பற்றிய நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன.

அகில இந்திய வானொலியின் ஒலிபரப்புக்களில் பெண்களின் உடல் நலத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதோடு மன நலத்திற்கும் சமூக நலத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

1978-79-ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம் 1980-81-ஆம் ஆண்டில் இந்தியா முழுமைக்கும் விரிவாக்கப்பட்டது. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை -

எளிய மக்களின் வருவாயைப் பெருக்க அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம் பற்றிய நிகழ்ச்சிகளை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகின்றது.

இந்திய வானொலியின் செய்தி ஒலிபரப்பில் இருவகைகள் உள்ளன.

1. தலைநகரான புதுதில்லியிலிருந்து ஒலிபரப்பப்படும் செய்தி அறிக்கைகள். இவை இந்தி, ஆங்கிலம் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பிற இந்திய மொழிகளில் 'குறிப்பிட்ட நேரங்களில் ஒலிபரப்பாகும். இவற்றைப் பிற வானொலி நிலையங்கள் வாங்கி அஞ்சல் செய்கின்றன. இவற்றுள் மத்திய அரசு மற்றும் பிற நாட்டு அரசுகளின் தகவல்கள் முதலிடம் பெற்றிருக்கும்.

2. மாவட்டத் தலைநகரங்களிலிருந்து ஒலிபரப்பப்படும் மாநிலச் செய்திகள் (Regional News). இவற்றை அந்தந்த மாநிலத் தலைநகரங்களிலிருக்கும் வானொலி நிலையங்கள் அவ்வம் மொழிகளில் தயாரிக்கின்றன. இவற்றைப் பிற நகரங்களிலிருக்கும் வானொலி நிலையங்கள் வாங்கி அஞ்சல் செய்கின்றன. இச்செய்திகளில் அந்தந்த மாநில விவகாரங்களுக்கே முன்னுரிமை தரப்படுகின்றது.

தொடக்கக் காலத்தில் வானொலி செய்திகள் ஒரு நாளைக்கு இருமுறையும், ஒவ்வொருமுறையும் 15 நிமிடங்களுக்கும் ஒலிபரப்பாயின. கால நீட்சி கேட்போர்க்கும் அயர்வைத் தந்தது ஒரு நாளைக்கு இருமுறைகள் மட்டுமே செய்திகளை ஒலிபரப்வேதக அவற்றை மிகத் இக்குறைகள். தற்போது களையப்பட்டுள்ளன. தற்போது ஒருநாளைக்கு இருமுறை ஒலிபரப்பாகும் விரிவான செய்தி அறிக்கை, 10 நிமிடங்களுக்குச் சுருக்கப்பட்டுவிட்டது. ஒரு மணி நேரத்தி கொருமுறை உலகின் நிகழ்ச்சிகள் 5 நிமிடங்களில் உடனுக்குடன் ஆங்கிலத்தில் தரப்படுகிறது. செய்தியை, அமைப்பதிலுள்ள் சிரமத்தைப் பின்வருமாறு குறிப்பிடுவர்.

'தமிழில் பத்துமணித்துளிகளுக்கு உரிய செய்தி அறிக்கையை அமைக்க கிட்டத்தட்ட 1500 சொற்கள் தேவைப்படுகின்றன. இச் சொற்களைக் கொண்டு ஒரு

பத்திரிகையில் இரண்டு பத்திகளை நிரப்பலாம். தனிப்பட்ட நிகழ்ச்சியைப் பற்றிய ஒரு(Individual Stories) செய்தி நூறு சொற்களுக்கு மேற்படாவண்ணம் அமைக்கப்படுகின்றது'.

இதனால் வானொலிச் செய்திகள் செறிவும், ஆற்றலும் பெற்று விளங்குகின்றன. இன்று ஒவ்வொரு நாளும் 19 மொழிகளில் 70 முறை தேசியச் செய்தி அறிக்கைகள் ஒலிபரப்பாகின்றன. 22 மாநில மொழிகளில் 118 மாநிலச் செய்தி அறிக்கைகள் ஒலிபரப்பப்படுகின்றன.

பன்னாட்டு ஒலிபரப்பு

உலக நாடுகள் பலவும் பல்வேறு நாட்டு மக்களுக்கான அவரவர்கள் மொழியில் பன்னாட்டுச் சேவை ஒலிபரப்பை நடத்துகின்றன. இவற்றுள் இலண்டனின் BBC, அமெரிக்காவின் VOA (Voice of America), Radio Moscow, Radio Peking, Radi Malaysia, Radio Dautseue, Sechilles, Sri Lanka Broad castm Corporation, Radio Australia அலைவரிசைகளில் பன்னாட்டு மக்களுக்காகத் தம் நிகழ்ச்சிக ஒலிபரப்புகின்றன. இந்தியாவும் 1939 இல் தனது பன்னாட்டு சேவை ஒலிபரப்பைத் தொடங்கியது. இன்று இந்தியமொழிகளிலும், 17 அயல் மொழிகளிலும் இந்தியாண பன்னாட்டு ஒலிபரப்புத் தொடர்கிறது. ஆற்றல் மிகுந்த 4450 சிற்றலை வரிசைகளில் 148 மொழிகளில் தங்களது நிகழ்ச்சிகளை உலகெங்கிலுமுள்ள 60 நாடுகள் ஒலிபரப்பி வருகின்றன. இவற்றோடு ஒப்பிடும்போது இந்தியாவின் இடம் மிகச் சிறியதே. கடலில் கரைந்த நாடுகளில் வாழும்' இந்தியர்களைச் சென்றடைவதில்லை என்ற குறை உள்ளது. இந்நிகழ்ச்சிக்காக ஆண்டுதோறும் சுமார் 3% லட்சம் தெங்கள் ஒதகள் கக் ெபான்க்கிட்டுள்ளனர். இவற்றுள் பாவடாகு மேற்பட்ட கடிதங்கள் ஒலிபரப்பால் பாதிப்படையாதவர்களிடமிருந்து வருவதாகக் கண்டுள்ளனர். பொதுவாக இந்தியப் பன்னளுத்து ஒலிபரப்பு, பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான், சரட்டு நாடுகள், மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றை இலக்காக வைத்துச் (target areas) செய்யப்படுகின்றது. ஆனால் இந்த ஒலிபரப்பு பற்றிய கருத்துக்கள். (feed back) இப்பகுதிகளிலிருந்து வருவதில்லை எனும் குறை உள்ளது. இக்குறையை

நீக்குவதற்கு விவித பாரதியின் குறைகளைக் கண்டறிவதற்கான வர்கீஸ் சுமிட்டியே வழிவகைகளைப் பரிந்துரை செய்துள்ளது.

கல்வி ஒலிபரப்பு

சென்னை, மும்பைய், கொல்கத்தா, தில்லி போன்ற தலைமை நிலையங்கள் கல்வி ஒலிபரப்புகளைத் தயாரித்து வழங்குகின்றன. இவை ஒவ்வொரு முறையும் 30- நிமிட நேரத்திற்கு வாரத்திற்கு 3 நாட்கள் ஒலிபரப்பாகின்றன. எல்லாப் பள்ளிகளிலும் கல்வி ஒலிபரப்புகளைக் கேட்பதற்கு வாய்ப்பில்லை. பெரும்பாலான பள்ளிகளில் வானொலிப் பெட்டிகளே இல்லை. 1980 ஆம் ஆண்டுக் கணக்கின்படி நாட்டிலுள்ள சுமார் ஒருலட்சம் பள்ளிகளில், சுமார் 20,000 பள்ளிகளில் மட்டுமே 'வானொலிப் பெட்டிகள் உள்ளதாக அறிகிறோம். இவற்றிலும் 40% பள்ளிகளே தொடர்ந்து கல்வி ஒலிபரப்புகளைச் செவிமடுக்கின்றன என்று கணக்கிட்டுள்ளனர். சில பள்ளிகள் தங்களது வகுப்பு நேர அட்டவணையிலேயே கல்வி வானொலி நிலையதவாவி ஆலோசனைக் குழு ஒன்றை அவ்வப்பொழுது (Consultant Panel) அமைக்கின்றனர். விக்குழுலில் அரசுப் பள்ளிக்கல்வித்துறையில் உறுப்பினர்கள், பள்ளித் தலைமையாசிரியர்கள், வானொலி இறலில் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் தரும்ஆலோசனையின்படி கல்வி ஒலிபரப்பாகின்றன. நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பாகின்றன.

கிராம ஒலிபரப்பு

இந்தியா விவசாய நாடாதலால், தொடக்கக்காலந்தொட்டே கிராம ஒலிபரப்பு நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை தரப்பட்டு வந்துள்ளது. இந்தியாவில் வானொலி அறிமுகமான உடனேயோ எல்லைப்புது மார்க்கோனி கம்பெனியார். சமஸ்தரனத்திற்கு (Beshawar) டிரான்சிஸ்டர்களை அன்பளிப்பாகத் தந்தனர். அப்புதிய கருவி கிராம மக்கள் எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது. மக்களுக்கு இதன்மீது இருந்த ஈடுபாட்டை உணர்ந்து அரசாங்கத்தார் 1936 இல் தில்லியைச்

சுற்றியுள்ள 50 கிராமங்களில் இதுபோன்ற வானொலிப் பெட்டி வசதியைச் செய்து தந்தனர்.

அகில இந்திய வானொலி நிலையத்தினர் 1949 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட பல கிராமங்களில் கிராம வானொல் மன்றங்கள் (Farm Radio forums) அமைத்தனர். இவர்கள் வானொல் நிலையத்தார் ஒலிபரப்பும் கிராமிய நிகழ்ச்சிகளைக் கேட்டு, அதன் விளைவுகள் /தாக்கம் பற்றிய அறிக்கையை வானொய் நிலையத்திற்கு அனுப்பி வந்தனர். இவ்வறிக்கையின் அடிப்படையில் கிராமிய நிகழ்ச்சிகளின் ஒலிபரப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆனாலும் கிராம வானொலி மன்றங்கள் வாயிலாக எதிர்பார்த்த ஆதரவும் பலனும் கிட்டவில்லை. எனவே இந்திய தூக UNESCO உதவியுடன் 1956 இல் வயது வந்தோர் கல்வித்திட்டத்தைத் தயாரித்தது. அதற்கேற்ப வானொல் நிலையங்கள் கிராமிய நிகழ்ச்சியினை அமைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின்படி ஒலிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகளைக் கேட்டு அதுபற்றிய அறிக்கையைத் தயாரித்து அனுப்பும் பணி மும்பையில் உள்ள டாட்டா சமூக அறிவியல் ஆய்வுக் கழகத்திடம் (Tata Institute of Social Sciences) ஒப்படைக்கப்பட்டது. இக்கழகம் சமூகவியல் அறிஞர் பால் நீரத் (Paul Neurath தலைமையில் அறிக்கையைச் சமர்ப்பித்தது. கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் கிராம ஒலிபரப்பில் அதிகப் பயனைத் தருகின்றன என ஆய்வில் தெரியவந்தது. கிராம நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும் நேரம், நிகழ்ச்சிகள் மாற்றம் போன்றவற்றைப் பற்றியும் இக்குழு ஆய்வு செய்து ஆலோசனைகளை வழங்கியது.

கிராமிய நிகழ்ச்சிகளுள் பேட்டிகள் கலந்துரையாடல்கள். பேச்சுகள், நாட்டுப்புறப் பாடல்கள், செய்திகள் ஆகியன அடங்கும். வானொலியினால் கிராமங்களும் கிராமமக்களும் அதிகம் பயனுற வேண்டும் என்ற நோக்கில் 1974 வரை சுமார் 70,000 வாபெயாம்ை பெட்டிகள் டிடெங்கிராமம் உர்பாவேர்ப்ேபட்ட கிராமங்களுக்கு வழங்கப்பட்டன. விராமம்சுப்போவோமே!', 'நாட்டு நடப்பு, உழவர்களுக்கு'. 'விரிவாக்கப் 'பணியாளர்களுக்கு', 'பண்ணை செய்தி', 'உழவர் உலகம்', போன்ற பல தலைப்புகளில் காலை (6.40). மதியம் (2.15 மணி), மாலை (6.30 மணி),

இரவு (7.30 மணி) ஆகிய நான்கு வேளைகளிலும் வழங்கப்படுகிறது. விமணிய முறைகளை நவீனமாக்குவதிலும், உற்பத்தியைப் பெருக்குவதிலும் (பசுமைப் புரட்சி Garibe Hatao) முனைந்து நின்ற அரசு 1990 ஆம் ஆண்டு முதல் விவசாய நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் 19ரக் தொடங்கியது. தமிழ் நாட்டில் சென்னை, திருச்சி, கோவை, மதுரை, நெல்லை வானொலி நிலையங்கள் கிராமிய நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குவதில் பெரிதும் முன்னேற்றம் கண்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் அணைகளில் நீர் மட்டம் பற்றிய செய்தி, விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்து விடுவது பற்றிய குறிப்பு, நல்ல விதைகள் கிடைக்கும் இடங்கள், விதை நேர்த்தி செய்யும் முறைகள், அந்தந்த வட்டாரத்தில் உள்ள பயிர்களைத் தாக்கும் நோய்கள், அவற்றைத் தடுக்கும் முறைகள், அதிக மகசூல் பெறுவதற்கான வழி வகைகள், பண்ணைப் பராமரிப்பு, வேளாண்மைப் பல்கலைக் கழகம் அனுப்பிய பயன்மிகு குறிப்புகள், இப்பல்கலைகழகம் விவசாயிகளுக்கு நடத்தும் அஞ்சல்வழிப் பாடம், விவசாய விளைபொருட்களை விற்கும் முறை, உழவர்களுடன் பேட்டி, உழவுத் தொழில் கருத்தரங்குகள் போன்றவை தெளிவாகவும், சுவையாகவும் தயாரித்து வழங்கப்படுகின்றன.

வானொலியின் பேச்சுரைகள் (Spoken Word)

வானொலி நிகழ்ச்சிகள் உரை, இசை ஆகிய இருபிரிவுகளில் அடங்குகின்றன. 'உங்கள் சிந்தனைக்கு', 'குறளமுதம்', 'சேவைச் செய்திகள்', 'இப்படியே போனால்' (திருச்சி) நிகழ்ச்சிக் குறிப்புகள், 'விரிவாக்கப்பணியாளர்களுக்கு', 'விவசாயிகளுக்கு', 'மாதர் அரங்கம்', கல்லி ஒலிப்ரப்பு, பேட்டி, கலந்துரையாடல், செய்திகள், Spot light போன்றவை பேச்சுரை நிகழ்ச்சிகளாகும். வர்த்தகம் ஒலிபரப்பு, 'நீங்கள் கேட்டவை' திரைமலர், திரைகாளம், திரை இசை பல்வேறு தலைப்புகளில் ஒலிபரப்பப்படும் பேரைப்படப்பாடல்கள், மெல்லிசை, சேர்ந்திசை, வாத்திய இயை போன்றவை இசை நிகழ்ச்சிகளாகும். வானொலியில் பேச்சுவு நிகழ்ச்சிகளே பேரிடம் பெறுகின்றன.

பண்டையக் காலந்தொட்டே செவியும் வாயும் மிக இன்றியமையாத தகவல் தொடர்பு மூலங்களாகக் கருதப்பட்டு வந்துள்ளன. 'செவியிற் சுவையுணரா...'. 'செலி கைப்பச் சொற் பொறுக்கும் வேந்தன் 'செவிக்குணவில்லாத போழ்து' என்று செவிப்புலனின் பெருமையைக் குறட்பாக்கள் எடுத்தியம்புகின்றன. இதன் இன்றியமையாமையை உணர்ந்தே 'கேள்வி' (செவிமடுத்தல்) என்ற அதிகாரம் திருக்குறளில் இடம் பெற்றுள்ளது எனலாம். இறையனார் களவியலுரை சற்றேறக்குறைய அறுநூறு ஆண்டுகளாகத் தலைமுறை தலைமுறையாகச் செவிவழி உரையாகவே தொடர்ந்து வந்ததும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். அச்சுக்கலை அறிமுகமான பின்னர் செவிப்புலன் தன் முதன்மையை இழந்தது .செவியின் இடத்தைக் கண் பெற்றது; வாய்விட்டும் படிக்கும் வழக்கமும் மறைந்தது. ஆனால் வானொலியின் வரவுக்கும் பின்னர் செவியும் வாயும் மீண்டும் முதலிடம் பெற்றன.

வானொலி உரைகள்

தனிநபர் உரைகள், நூல் மதிப்புரைகள், கலந்துரையாடல்கள் என்று. இது பலவகைப்படும். ஒவ்வொன்றிற்கும் குறிப்பிட்ட கால அளவு உண்டு. பொதுவாக வானொலி உரைகள் 6 முதல் 1 நிமிடங்கள் வரை நிகழ்த்தப்படுவதுண்டு. பேருரையாயின் நிமிடங்கள் வரை நீளும். நூல் மதிப்புரைகள் 6 முதல் 15 நிமிடங்களுக்கு நிகழும். கலந்துரையாடல்கள் 30 முதல் 4 நிமிடங்கள் வரை நிகழ்த்தப்பெறும்.

வானொலிக்கு எழுதுவதற்கும் பத்திரிகைக்கு எழுதுவதச்சி வேறுபாடுகள் உள்ளன. பத்திரிகைகளில் அரசியல், அறிஸ் கட்டுரைகளைப் பல பத்திகளில் நீட்டி எழுதலாம். ஆனால் வானொலி

உரையைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்தல் வேண்டும். இந்தக் கால எல்லையைக் கருத்தில் கொண்டு வானொலி உரையைத் தயாரித்தல் வேண்டும். முக்கியமான செய்திகளை மட்டுமே உணர்த்துவது நோக்கமாக இருக்க வேண்டும். தேவையற்ற விளக்கங்களையும் எல்லோருக்கும் தெரிந்த செய்திகளையும் சொல்வதைத் தவிர்க்க வேண்டும். 'காலம் பொன் போன்றது' என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும். சொல்ல பாத்ததுத் நேரடியாகச் சொல்ல வேண்டும்; சுற்றிவளைத்துச் சொல்லக் கூடலத. கேட்பவர் உள்ளத்தில் நேரடியாகச் சென்று தைப்பது பே சொல்லவேண்டும்.

வானொலி உரைகள் பதிவு செய்யப்படும் முன்பு அவை நிகழ்ச்சித் தயாரிப்பாளரால் பார்வையிடப்படுகின்றன. (Programme Executive) நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் கருத்துக்களையும் சாதி உணர்வினைத் தூண்டும் சொற்களையும், அரசைக் குறைகூறும் தொடர்களையும் பிறர் மனல்தப் புண்படுத்தும் பதங்களையும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் நீக்கி விடுவார். (எ-டு) வானொலி உரையில் 'குருடர்' என்று சொல்லக் கூடாது, "பார்வையற்றோர்" என்றே சொல்லவேண்டும். பின்னரேயே அதற்குப் பேச்சு பதிவு செய்யப்படுகிறது. 12 நிமிடங்களுக்குரிய உரை 14 நிமிடங்களாக நீண்டுவிட்டால் தேவையற்றது போல் கருதப்படுகின்ற சில உரைப்பகுதிகள் ஒலிப்பதிவுக்குப்பின்னர் நீக்கப்பட்டு (editing) ஒழுங்குபடுத்தப்படுகின்றது.

வானொலியில் உரையாற்றுபவர்க்கு நல்ல குரல் வளம் வேண்டும். வானொலி உரைகள் மிக நீண்டு அமைந்துவிடக் கூடாது. புத்தகத்தைப் படிப்பவர்கள் ஏற்கனவே படித்த கருத்தை மறந்துவிட்டால், அதை நினைவுபடுத்த புத்தகத்தைப் புரட்டிப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் வானொலி உரையைக் கேட்பவர்க்குக் குழப்பம் ஏற்பட்டால் அதை அவர் உடனே தீர்த்துக் கொள்ள இயலாது. எனவே வானொலி உரைகள் எளிமையாகவும், தெளிவாகவும்,

குறுகியதாகவும் செறிவுடையதாகவும் இருத்தல் வேண்டும். தொடக்கம் முதல் இறுதி வரை வானொலி உரையைக் கேட்பவர்கள், அதைத் தொடர்ந்து பின்பற்றி வருமாறு வானொலி உரைகள் அமைதல் வேண்டும்.

**வானொலியும் தன்னாட்சியும்**

நன்கு திட்டமிட்ட முறையில் நம் நாட்டில் வானொலி ஒலிபரப்பு விரிவு செய்யப்பட்ட போது நமது எதிர்பார்ப்புகள் பலவாக இருந்தன. ஆனால் அவை யாவும் முழுமையாக நிறைவேறவில்லை, மிகக் குறைந்த அளவில் வானொலியின் செயல்பாடு முன்னேறியுள்ளது. எனவே வானொலி அமைப்பானது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று பலர் கருதினர். இதன் விளைவாக முதன்முறையாக 1964-ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் வானொலி, தொலைக்காட்சிக்குத் தன்னாட்சியுரிமையை (Autonomous) வழங்குவதற்கும், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து அவற்றை விடுவிப்பதற்கும், தெளிவாகவும், நடுநிலைமையோடும் வானொலி, தொலைக்காட்சி ஆகியன செயல்படுவதற்காகவும் ஒரு குழுவை நியமிக்க அரசு எண்ணியது.

அகில இந்திய வானொலிக்கு 'பிரசார் பாரதி' என்ற பெயரில் தன்னாட்சித் தகுதியைத் தந்துவிட்டாலும் அது இன்னமும் அரசின் பிடியில் உள்ளது. எனவே அரசின் கைப்பாவையாக அது இயங்குகிறது என்ற குறை நிலவுகிறது. பி.பி.சி. யைப் போல் அகில இந்திய வானொலிக்கும் தன்னாட்சிக் கழக அந்தஸ்து அளிக்க வேண்டும் என்று பண்டித நேரு விரும்பினார் (March 1948) அது இன்று ஓரளவு நடைமுறைக்கு வந்துள்ளது. அகில இந்திய வானொலியின் செயற்பாடுகள் பற்றி அமைக்கப்பட்ட சந்தா கமிட்டி (Chanda Committee Report: Ap 6, 1966), வர் (Verghese Committee Report: Feb 6, 1978) வானொலிக்குத் தன்னாட்சி உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன. 1989 இல் தேசிய முன்னணிக்கட்சி தனது (National Front) தேர்தல் அறிக்கையில் வானொலிக்கும். தொலைக்காட்சிக்கும் தன்னாட்சி வழங்குவது குறிப்பிட்டிருந்தது. அக்கட்சி ஆட்சிக்கு வந்ததும் தன்னாட்சி வழங்குவதற்கான

பிரசார் மசோதா'வைச் சட்டபூர்வமாக்குவதற்கு தொடக்க நிலை முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் தேசிய முன்னணி அரசு 1990 இறுதியில் (7.11.1990) கவிழ்க்கப்பட்ட பின் வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் தன்னாட்சித் தகுதி வழங்குவதற்கான முயற்சிகள் முடங்கிவிட்டன. பின்னர் நடந்ததேர்தலில் ஆட்சியைப் பிடித்த பாரதீய ஜனதா கூட்டணி அரசு வானொலிக்குத் தன்னாட்சி. படிப்படியாக வழங்கப்படும் என அறிவித்தது. அந்த அறிவிப்பை செயல்முறைப்படுத்தி வருகிறது. பற்றிக்

வானொலி: இன்று

மக்களுக்காக ஒலிபரப்பப்படும் வானொலி நிகழ்ச்சிகளைப் பற்றி பன்னாட்டுக் கல்வி மற்றும் பண்பாட்டு நிறுவனம் (UNESCO) ஓர் அறிக்கையைத் தந்துள்ளது. அவ்வறிக்கையின் குறிப்பிடத்தக்க கூறுகள் வருமாறு:

1. அவ்வந்நாட்டு ஒலிப்பரப்புகள் அந்நாட்டு மக்களின் பண்பாட்டையும் அரசின் கருத்துக்களையும் திட்டங்களையும் செயற்பாடுகளையும் எடுத்துக் கூறுவதாக இருக்க வேண்டும்.

2. உலகச் செய்திகளைத். திறமையாகவும், உள்நோக்கம் இன்றியும் தெரிவிப்பதாக இருக்கவேண்டும்.

3. உலகப் பிரச்சினைகள் பற்றிய அந்நாட்டின் சுருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்வதாக இருக்கவேண்டும்.

4. உலக அரங்கில் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு உலக அமைதிக்கு வழிவகுப்பதாக இருக்கவேண்டும்.

550 மில்லியன் மக்கள் தொகை உள்ள நாட்டிற்கு 110 மில்லியன் வானொலிப் பெட்டிகள் வேண்டும் என்று (UNESCO) அறிக்கை கூறுகிறது. இதன்படி ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு ஒரு - வானொலிப் பெட்டியாவது வேண்டும். தற்போது

இந்தியாவின் கிராமப் பகுதிகளில் 'நூறு பேர்கள் கொண்ட ஒரு குழுவிற்கு ஐந்து வானொலிப் பெட்டிகள் தேவை' என்ற தொலைக்காட்சியின் நிறைவேறிவிட்டதாகக் வியத்தகு வளர்ச்சிக்கு ஈடுகொடுத்து வானொலியும் வளர்ந்துள்ளமை, மக்களிடம் வானொலி கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது. இதனால் வானொலி மக்களுக்கு என்றும் உற்ற தோழனாகவே இருந்து வருகிறது."

இந்தியா சுதந்திரம் பெற்றபொழுது ஆறு வானொலி நிலையங்களே இருந்தன. இரண்டு நிலையங்கள் (சென்ானை, திருச்சி) தமிழகத்தில் இருந்தன. இன்று இந்தியா முழுவதும் 98 வானொலி நிலையங்கள் செயல்படுகின்றன. இவை தவிர நான்கு உள்ளூர் ஒலிபரப்பு நிலையங்களும், 142 மத்தியலை அஞ்சல் நிலையங்களும், 40 சிற்றலை அஞ்சல் நிலையங்களும் நான்கு நுண்ணலை (VHF:FM) அஞ்சல் நிலையங்களும் : இந்தியாவின் வானொலி ஒலிபரப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1985 - 90) இதுவரை உள்ள வானொலி நிலையங்களையும் சேர்த்து மொத்தம் 205 வானொலி நிலையங்களை அமைக்கவும், 150 மத்தியலை அஞ்சல் நிலையங்களையும் 54 சிற்றலை அஞ்சல் நிலையங்களையும் ஏற்படுத்தவும் குறியளவு நிர்ணயிக்கப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அகில இந்திய வானொலி நிர்வாகம் மற்றும் விரிவாக்கப்பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.4 கோடியாகும். ஆனால் இது ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ.700 கோடியாக உயர்ந்தது. இதன் மூலம் வானொலி ஒலிபரப்புக்கு அரசு தரும் முக்கியத்துவத்தையும் அதன் வளர்ச்சி வேகத்தையும் அறியலாம்.

வைர விழா கண்ட திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம்

நாடு விடுதலை பெறுவதற்கு 8ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1939 மே மாதம் 16ஆம் தேதி திருச்சிராப்பள்ளியில் வானொலி நிலையம் தொடங்கப்பட்டது. இதைத் தொடங்கி வைத்துப் பேசிய அப்போதைய சென்னை மாகாண முதலமைச்சர் மூதறிஞர் இராஜாஜி வானொலியின் ஆற்றலை வியந்து போற்றினார்.

வானொலியால் நாடு முழுவதும் மகிழ்ச்சியைப் பரப்பலாம். மகிழ்ச்சி என்பது உயிருக்கு அடையாளம். மகிழ்ச்சியே ஆத்மாவின் அந்தரங்க சொரூபம், உயிர் உள்ளதற்கும் உயிரற்றதற்கும் வித்தியாசம் மகிழ்ச்சியே, 'மகிழ்ச்சியில்லா ஊர், "உயிரற்ற ஊராகும். உணவுப் பொருள் மட்டும் உயிருக்குப் போதாது, மகிழ்ச்சியும் வேண்டும். உணவு உடலாகிறது: மகிழ்ச்சி, மனமாகிறது, பரிசுத்தமான விளையாட்டுகளும் ஆடல், பாடல், நிகழ்ச்சிகளும் ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்பாடு செய்யவேண்டும். மகிழ்ச்சியைப் பரீப்ப இந்த வானொலி நல்ல இயந்திரமாகும்"

இவ்வானொலி நிலையத்தில்தான் 1981-ஆம் ஆண்டு நவம்பர் 14ந் தேதி மாநிலச் செய்திப் பிரிவு தொடங்கப்பட்டது. இங்கிருந்து நாள்தோறும் பகல் 1.45 மணிக்கு மாநிலச் செய்திகள் ஒலிபரப்பாகின்றன. தமிழகத்தின் மையத்தில் அமைந்துள்ள இவ்வானொலி நிகழ்ச்சிகள் எண்ணிக்கையில் அதிகமான நேயர்களைக் கொண்டுள்ளது.-நிலையம் தொடங்கப்பட்ட போது கிலோவாட் திறனுள்ள ஒலிபரப்பி மட்டுமே இருந்தது. தற்போது இந்நிலையத்தின் ஒலிபரப்புத் திறன் 100 கிலோவாட்டாக உயர்ந்துள்ளது. அறுபது ஆண்டுகள் நிறைவைக் கண்ட திருச்சி வானொலி நிலையம் வைரவிழாவைக் கொண்டாடியது.

இவ்வானொலி நிலையம் அண்மையில் அறிமுகம் செய்த 'வசந்த அழைப்பு' என்ற நேர்முகத் தொலைபேசி நேயர் விருப்ப நிகழ்ச்சி மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. வாழ்க்கை முன்னேற்றக் குறிப்புக்களைத் தருவதுடன், நேயர்கள் நம்பிக்கையுடன் தங்கள் வாழ்க்கையைத் தொடர்வதற்குரிய

ஆலோசனைகளையும் அறிவிப்பாளர்கள் அளிக்கின்றனர். செப்டம்பர் 2003 இல் இவ்வானொலி நிலையத்தின் நிகழ்ச்சிகள் கணனி உதவியுடன் சமீபத்திய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஒலிபரப்பப்படுவது. குறிப்பிடத்தக்கதாகும்.

வினாக்கள்

1. வானொலி வரலாறு குறித்து விளக்குக.
2. வானொலி வளர்ச்சி பற்றி எழுதுக.
3. வானொலி கோட்பாடுகள் என்றால் என்ன?
4. பன்னாட்டு, செய்தி ஒலிபரப்பு குறித்து விளக்குக.
5. கல்வி, கிராம ஒலிபரப்பு பற்றி விளக்குக.
6. இன்றைய வானொலி குறித்து கட்டுரை வரைக.

# அலகு 5

## தொலைக்காட்சி வரலாறு

தற்கால அறிவியல் உலகில் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கின்ற சாதனமாகத் தொலைக்காட்சி திகழ்கிறது. எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னால் தகவல் தொடர்பில் செவிப்புலத்திறன் குறைந்து வாய்மொழித்திறன் மிகுந்தது, ஆனால் காலத்தையும் தூரத்தையும் வென்று விட்ட சாதனமாகத் தொலைக்காட்சி வந்துதித்தபோது மாபெரும் உலகமே குக்கிராமமாக மாறிவிட்டது. இத்தகு புரட்சிக்கு வித்திட்டவர் 'பெயர்டு' (John Logie Baird: 1925) என்பவராவார். தமது சோதனையில் வெற்றிகண்ட இவர், 1926, சனவரி மாதம் 27 ஆம் நாளில் தமது கருவியை, புகழ்பெற்ற அறிஞர்கள் மத்தியில் இயக்கிக் காட்டினார். இத்துறையில் பலரும் தொடர்ந்து ஈடுபட்டதன் விளைவாக 1936இல் இங்கிலாந்தில் தொலைக்காட்சி வழி தகவல் ஒளிபரப்பு நடைமுறைக்கு வந்தது. 1953 முதற்கொண்டே வண்ணத் தொலைக்காட்சி ஒளிபரப்பைத் துவங்கிய முதல் நாடு என்ற பெருமையை அமெரிக்கா பெற்றது.

இந்தியாவில் முதன்முதலாக யுனெஸ்கோ ஆதரவுடனும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உதவியுடனும் 1959, அக்டோபர்த் திங்கள் 15 ஆம் நாள் புதுதில்லி நிலையத்திலிருந்து தொலைக்காட்சி ஒளிபரப்புத் தொடங்கியது. தொடக்க காலத்தில் இருநாட்களும், ஒவ்வொரு நாளும் இருபது நிமிடங்களும் வாரம் நிகழ்ச்சிகள் 40 கி.மீ. சுற்றுவட்டாரத்திற்கு மட்டும் தெரியும் திறன் கொண்டிருந்தன. முதலில் சமுதாய மேம்பாட்டு

நிகழ்ச்சிகளை அளித்து வந்த அரசு, பிற பொழுது போக்கு தயாரித்து வழங்க முடிவ செய்தது. நிகழ்ச்சிகளையும்

மக்கள் ஆதரவு ஒருபுறமும், மக்கள் ஆதரவைக் கண்டு கொண்ட தொலைக்காட்சித் தயாரிப்பாளர்கள் மறுபுறமும் அரசை நெருக்கவே, 1965 ஆகஸ்டில் தொலைக்காட்சிப் பெட்டிக்கான பாகங்களை இந்தியாவிலேயே தயாரிப்பதற்கு அரசு அனுமதி வழங்கியது. இந்தியாவின் தொலைக்காட்சி வளர்ச்சியில் இது பெரும் ஊக்க போனசாக இருந்தது எனலாம். 1967 சனவரியில் விவசாய நிகழ்ச்சி (Krishi Darsan) தொடர் நிகழ்ச்சியாக வழங்கப்பட்டது. 60 கி.மீ. தொலைவிலும் கூட நிகழ்ச்சிகளைத் தெளிவாகப் பார்க்கும் வண்ணம் ஒளிபரப்பின் ஆற்றல் அதிகரிக்கப்பட்டது. 1970 இல் தொலைகாட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பு மூன்று மணி நேரமாக நீடிக்கப்பட்டது. 1975 இல் சுமார் ஒரு லட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகள் இந்தியாவில் இயங்கின என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அறிமுகம் செய்யப்பட்ட குறுகிய காலத்திலேயே அதிக வளர்ச்சியைக் கண்ட தொலைக்காட்சி ஒளிபரப்புகள் இந்தியாவின் முக்கிய நகரங்களில் அடுத்தடுத்துத் தொடங்கப்பட்டன. 1972 இல் பம்பாயிலும், 1975 இல் கல்கத்தாவிலும், சென்னையிலும் தொலைக்காட்சி ஒளிபரப்பு ஆரம்பமானது. 1976 சனவரி முதல் தொலைக்காட்சிப் பிரிவு அகில இந்திய வானொலி அமைப்பிலிருந்து பிரிந்து 'தூர்தர்ஷன்' (Doordarshan) என்ற பெயரில் தனித்து இயங்கத் தொடங்கியது. தொடர்ந்து தொலைக்காட்சியில் விளம்பரங்களும் அறிமுகம் செய்யப்பட்டன. 1980 இல் இந்தியாவில் சுமார் 9.5. லட்சம்

தொலைக்காட்சிப் பெட்டிகள் இருந்தன என்று கணக்கிட்டுள்ளனர். ஆனால் இது இந்தியாவின் மக்கள் தொகையில் 2 சதவீதமே ஆகும். இதனை அறியும்போது தொலைக் காட்சிச் சேவையில் நாம் எவ்வளவு தொலைவு பின்தங்கியுள்ளோம் என்பது தெரியவரும். உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி நடைபெற்றுவரும் வேளைகளில் சலுகை விலையில் தொலைக் காட்சிப் பெட்டிகளை விற்பனை செய்வதற்குப் பல நிறுவனங்கள் பல சலுகைத் திட்டங்களை அறிவித்தன. இதனால் இந்தியாவில் தொலைக்காட்சிப் பெட்டி வைத்திருப்போர் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்தது.

தொலைக்காட்சி செயற்கைக்கோள் வழி ஒளிபரப்பு

செயற்கைக்கோள் தொலைக்காட்சி என்பது பூமியைச் சுற்றி வரும் தகவல் தொடர்பு செயற்கைக்கோளிலிருந்து நேரடியாக பார்வையாளரின் இருப்பிடத்திற்கு ஒளிபரப்புவதன் மூலம் பார்வையாளர்களுக்கு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வழங்கும் ஒரு சேவையாகும் . பொதுவாக செயற்கைக்கோள் டிஷ் மற்றும் குறைந்த இரைச்சல் பிளாக் டவுன்கன்வெர்ட்டர் என குறிப்பிடப்படும் வெளிப்புற பரவளைய ஆண்டெனா வழியாக சமிக்ஞைகள் பெறப்படுகின்றன .

ஒரு செயற்கைக்கோள் ரிசீவர் பின்னர் விரும்பியதைக் குறிக்கிறது தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒரு பார்வைக்கு தொலைக்காட்சி தொகுப்பு. பெறுநர்கள் வெளிப்புறமாக இருக்கலாம் செட்-டாப் பெட்டிகள், அல்லது ஒரு உள்ளமைக்கப்பட்ட தொலைக்காட்சி ட்யூனர். செயற்கைக்கோள்

தொலைக்காட்சி பரந்த அளவிலான சேனல்கள் மற்றும் சேவைகளை வழங்குகிறது. இது பொதுவாக பல தொலைதூர புவியியல் பகுதிகளில் கிடைக்கக்கூடிய ஒரே தொலைக்காட்சி நிலப்பரப்பு தொலைக்காட்சி அல்லது கேபிள் தொலைக்காட்சி சேவை.

நவீன அமைப்புகள் சமிக்ஞைகள் ஒரு தகவல் தொடர்பு செயற்கைக்கோளிலிருந்து ஒளிபரப்பப்படுகின்றன எக்ஸ் இசைக்குழு அல்லது கேu இசைக்குழு (12 – 18 GHz) அதிர்வெண்கள் ஒரு மீட்டருக்கும் குறைவான விட்டம் கொண்ட ஒரு சிறிய டிஷ் மட்டுமே தேவை.[2] முதல் செயற்கைக்கோள் டிவி அமைப்புகள் வழக்கற்றுப் போன வகையாகும், அவை இப்போது அழைக்கப்படுகின்றன தொலைக்காட்சி பெறுதல் மட்டுமே. இந்த அமைப்புகள் பலவீனமான அனலாக் சமிக்ஞைகளைப் பெற்றன சி-பேண்ட் (4 – 8 GHz) இருந்து FSS வகை செயற்கைக்கோள்கள், பெரிய 2 – 3 மீட்டர் உணவுகளின் பயன்பாடு தேவைப்படுகிறது. இதன் விளைவாக, இந்த அமைப்புகளுக்கு "பெரிய டிஷ்" அமைப்புகள் என்று செல்லப்பெயர் சூட்டப்பட்டது, மேலும் அவை அதிக விலை மற்றும் குறைந்த பிரபலமாக இருந்தன.[3]

பயன்படுத்தப்படும் ஆரம்ப அமைப்புகள் அனலாக் சிக்னல்கள், ஆனால் நவீனர்கள் பயன்படுத்துகிறார்கள் டிஜிட்டல் சமிக்ஞைகள் இது நவீன தொலைக்காட்சி தரத்தை பரப்ப அனுமதிக்கிறது உயர் வரையறை தொலைக்காட்சி, கணிசமாக மேம்படுத்தப்பட்டதால் நிறமாலை செயல்திறன் டிஜிட்டல் ஒளிபரப்பு. 2022 நிலவரப்படி, ஸ்டார் ஒன் டி 2 அனலாக்

சிக்னல்களில் மீதமுள்ள செயற்கைக்கோள் ஒளிபரப்பு பிரேசிலிலிருந்து மட்டுமே.[4][5]

இரண்டு வகைகளுக்கு வெவ்வேறு பெறுநர்கள் தேவை. சில பரிமாற்றங்கள் மற்றும் சேனல்கள் மறைகுறியாக்கப்படவில்லை, எனவே இலவசமாக ஒளிபரப்ப, வேறு பல சேனல்கள் குறியாக்கத்துடன் அனுப்பப்படுகின்றன. பார்வைக்கு இலவசம் சேனல்கள் குறியாக்கம் செய்யப்பட்டுள்ளன, ஆனால் கட்டணம் வசூலிக்கப்படவில்லை, அதே நேரத்தில் ஊதிய தொலைக்காட்சி நிரலாக்கத்தைப் பெற பார்வையாளர் குழுசேர்ந்து மாதாந்திர கட்டணம் செலுத்த வேண்டும்.[6]

சேட்டிலைட் டிவி 2010 களில் இருந்து நுகர்வோரின் வீழ்ச்சியைக் கண்டது தண்டு வெட்டு மக்கள் இணைய அடிப்படையிலான நோக்கி நகர்கின்ற போக்கு ஸ்ட்ரீமிங் தொலைக்காட்சி மற்றும் இலவசம் ஓவர்-தி-ஏர் தொலைக்காட்சி.

சைட் (Site)

இந்தியத் வளர்ச்சியில் SITE எனப்படும். தொலைக்காட்சியின் செயற்கைக்கோள் வழித் தொலைக்காட்சித் திட்டம் (Satellite Instructional Television Experiment) குறிப்பிடத்தக்கதாகும். 1967 ஆராய்வதற்காக வந்த யுனொஸ்கோ குழு, துணைக்கோள்களின் வழி தகவல் தொடர்பினால் இந்தியாவின் கிராமங்கள் வளர்ச்சி பெற இயலும் எனக்கருதியது. இதன் அடிப்படையில் இந்திய அரசின் அணு ஆற்றல் துறை (Dept. of Atomic Energy) அமெரிக்க நாட்டின் தேசிய வான்வழி மற்றும் விண்வெளி ஆய்வு

நிறுவனத்துடன் (National Aeronautic and Space Administration) ௧ ௧ செய்து கொண்டது, இதன்படி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சார்பில் ஆகஸ்டு 1975 இல் ATS 6 என்ற 'துணைக்கோள் ஆப்பிரிக்காவின் தென் கோடி முனைக்கு மேல், நிலையாக இருக்கும்படி (Geostationary) செலுத்தப்பட்டது. மகாராட்டிர மாநிலத்திலுள்ள ஆர்வி என்ற தரை நிலையத்திலிருந்து (earth transmitter) வந்த நிகழ்ச்சிகளை இச்செயற்கைக்கோள் வாங்கி, இந்தியாவிலுள்ள ஆறு மாநிலங்களுக்கு (ஒரிசா, மத்தியபிரதேசப் பீகார், ராஜஸ்தான், ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம்) அனுப்பிவைத்தது. இத்திட்டத்தில் சுமார் 2500 கிராமங்கள் பயன்பெற்றன.ஒரேநேரத்தில் இரு மொழிகளில் நிகழ்ச்சிகளை அனுப்பிவைத்தமை இத்திட்டத்தின் சிறப்பம்சம் ஆகும். சான்றாக ஆந்திராவிலும் கர்நாடகத்திலும் இந்நிகழ்ச்சி ஒலிபரப்பாகும் போது, ஆந்திராவில் உள்ளோர் தெலுங்கு மொழியிலும் கர்நாடகத்தில் உள்ளோர் கன்னட மொழியிலும் நிகழ்ச்சியைத் தேர்ந்தெடுக்க இதில் வசதியிருந்தது. ஆனால் ஆறு மாநிலங்களுக்கு. நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டாலும் இரு மொழிகளில் மட்டும் அவற்றின் பயனை நுகர முடியும் என்ற நிலை, இத்திட்டத்தின் பெருங்குறையாக நாளடைவில் தோன்ற ஆரம்பித்தது.

சிறுவர் கல்வி, விவசாயம், உடல்நலம், தாய்சேய் நலம் போன்றவற்றைப் பற்றிய நிகழ்ச்சிகள் SITE மூலம் "அஞ்சல் செய்யப்பட்டன. காலை 10.00 முதல் 11.30 வரையிலும் நான்கு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. மடங்கள் தெலுங்கு அல்வதல் நிரை நீடித்தது. இவற்றில் 40 நிமிடங்கள் தெலுங்கு அல்லது கன்னம நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. இதனைத் தொடர்ந்து 30 நிமிடங்களுக்கு இந்தி நிகழ்ச்சியும் 20 நிமிடங்களுக்கு சிரிய நிகழ்ச்சியும் இடம்பெற்றன. இவ்வாறு கல்விச் சேவையையும் நலப்பணியையும் மட்டுமல்லாது நாட்டு விடுதலையைக் குறிக்கும்

இருமுக்கிய நாட்களிலும் இதன் பணி தொடர்ந்தது. 1975 ஆம் ஆண்டு சுதந்திர நாளன்று அந்நாளைய பிரதமர் இந்திராகாந்தி செங்கோட்டையில் கொடி ஏற்றியதையும், 1976 ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்பையும் SITE ஒளிபரப்பு நாடுமுழுவதும் அஞ்சல் செய்தது.

தரையில் நிறுவப்படுகின்ற அஞ்சல் நிலையங்கள் T transmitters) 65-80 .. 5 ஒளிபரப்பவல்லன . இதன்படிப் பார்த்தால் இந்தியாவிலுள்ள சுமார் 5,60,000 கிராமங்கள் பயனுற வேண்டுமெனில் பெரும் பொருட்செல்வில் அஞ்சல் நிலையங்களை அமைக்க வேண்டி யிருக்கும். எனவே இதற்கு மாற்று ஏற்பாடாக SITE திட்டத்தில் பயன்படுத்தியது போன்று செயற்கைக் கோள் ஒன்றை விண்ணில் ஏவ அரசு முடிவு செய்தது. மேலும் 1976 சூலை 31 ஆம் தேதிக்குப் பின்னர் SITE ஒளிபரப்புக்குத் துணை செய்த அமெரிக்க NASA நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தம் முடிவுக்கு வந்ததால் இந்தியா தனக்கே சொந்தமாக செயற்கைக்கோள் ஒன்றைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதன் விளைவாக INSAT 1A என்ற செயற்கைக் கோளை அமெரிக்காவின் கேப் கென்னடி ஏவு தளத்திலிருந்து இந்தியா விண்வெளியில் வெற்றிகரமாகச் செலுத்தியது (10.4.1982). ஆனால் விரைவிலேயே இது செயலிழந்தது. இந்த இழப்பினை ஈடுசெய்வதற்காக அடுத்த ஆண்டிலேயே (15.8.1983) INSAT - 1B செயற்கைக் கோளை இந்தியா விண்ணில் ஏவியது. இதன் மூலம் இந்தியாவெங்கிலும் தேசிய ஒளிபரப்பு. ஒரே நேரத்தில் அஞ்சலாகும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. இதனால் தினமும் இரவில் 9.00 மணி முதல் நிகழ்ச்சிகள் முடியும் வரை தேசிய நிகழ்ச்சிகளை அனைத்துத் தொலைக்காட்சி நிலையங்களும் அஞ்சல் செய்தன.

இந்தியாவின் தொலக்காட்சி வரலாற்றில் ஒரு மைல் கல்லாகக் கருதப்படுகிறது. இந்தியா இத்தகுந் தகவல் ஒளிபரப்புச்

செயற்கைக்கோள்களை வெற்றிகரமாக விண்ணில் தொடர்ந்து ஏவி, வருகிறது.

**கல்வி ஒளிபரப்பு**( ETV Educational Television )

வானொலி, தொலைக்காட்சி ஆகிய அரசு சார்புள்ள மக்கள் தகவலியல் சாதனங்களின் முதன்மையான பணி மக்களுக்கு. அறிவூட்டல் என்று கருதப்படுகிறது. இதனால் அறிவூட்டக்கு. மையமாகக் கொண்ட கல்வி ஒளிபரப்புக்குத் தொலைக்காட்சியில். தனித்திட்டம் வகுக்கப்பட்டது. இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய முன்னேறிய நாடுகளின் வளர்ச்சிக்குக் கல்வி ஒளிபரப்பு முக்கியமாகத் திகழ்ந்தது என்பதை அறிந்த அரசு அந்நாடுகளைப் பின்பற்றிக் கல்வி ஒளிபரப்பினைத் துவங்கியது.

அமெரிக்காவிலுள்ள ஃபோர்டு நிறுவனத்தின் (Ford Foundation) பு (STS: School Television Service) 1961 அக்டோபரில் கல்வி ஒளிபரப்பு துவங்கியது. முதலில் ஒவ்வொரு வாரமும் 20 பாடங்கள் ஒளிபரப்பாவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. காலையில் ஒருமுறையும், மாலையில் ஒருமுறையும் இந்நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாயின. இயற்பியல், வேதியியல், ஆங்கிலம், இந்தி, சமூகவியல் பற்றிய நிகழ்ச்சிகள் இதில் இடம்பெற்றன. இதன் விளைவை ஆய்ந்தறிவதற்காக பால் நரேத் (Paul Neurath) தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவினரும் இதன் செயல்பாடு ஆற்றல்மிக்கதாகத் திகழ்கிறது என்று கருத்துரைத்தனர். இதன் அடிப்படையில் கல்வி ஒளிபரப்பு மேலும் விரிவாக்கப்பட்டு 1984 முதல் இன்று பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் அமைந்துள்ள கல்வி ஒளிபரப்புப் பணிமையங்கள் (AVRC :

Audio Visual Research Centre) கல்விப்பாடங்களைத் தயாரித்து ஒளிபரப்பி வரும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அளவிற்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

மண்டல ஒளிபரப்பில் அந்தந்த மாநில மொழியில் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகள் ஒவ்வொரு தொலைக்காட்சி நிலையத்திலிருந்தும் மாலை 6.00 மணி முதல் 8.40 மணி வரை ஒளி பரப்பாகின்றன. பொதுவாக கல்வி, பொழுது போக்கு நிகழ்ச்சிகள் மண்டல ஒளிபரப்பில் ஒளிபரப்பப்படுகின்றன.

வினாடி வினா நிகழ்ச்சிகள் தேசிய அளவில் ஒளிபரப்பாவது போன்று மண்டல அளவிலும் ஒளிபரப்பாகின்றன. இவ்வினாடி வினா நிகழ்ச்சிகளில் இசை, ஓவியம், இலக்கியம், அறிவியல், நாட்டு நடப்பு, பாராளுமன்ற, சட்டசபை சம்பந்தப்பட்ட வினாக்கள் கேட்கப்படும்.

சிறுவர், சிறுமியர்களுக்கான குழந்தைகள் நிகழ்ச்சியும் மண்டல ஒளிபரப்பில் ஒளிபரப்பாகின்றன. இவற்றின் மூலம் நன்னடத்தை. ஆகியவற்றை சிறுவர், சிறுமியர்கள் கடைபிடிக்க வழிவகுக்கிறது. மேலும் குழந்தைகள் வளர்ப்புமுறை, குழந்தைகள் நல்லொழுக்கங்கள் நலம் பேணுதல் குறித்த பல நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பாகின்றன. குழந்தைகள் நலம் பேணுதல் குறித்த நிகழ்ச்சிகளில் குழந்தைகளுக்குத் தாய்ப்பாலூட்டுதலின் முக்கியத்துவம், உடல்நலம் நோய்த்தடுப்பு முறைகள் போன்றன ஒளிபரப்பாகின்றன. பேணுதல்,

மனமகிழ்வூட்டும் ஒளிபரப்பில் பண்பாட்டு நிகழ்ச்சிகள் முக்கிய இடம்பெறுகின்றன. இயல், இசை, நாடக நிகழ்ச்சிகள், மெல்லிசை, கிராமியக்கலை நிகழ்ச்சிகள், நடன வடிவங்கள், திரைப்படங்கள் ஆகியவை ஒளிபரப்பாகின்றன.

தேசிய நிகழ்ச்சிகள்

1982-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் தூர்தர்ஷன் இரவு 8.40 மணியிலிருந்து தேசிய நிகழ்ச்சிகளை டில்லியிலிருந்து அஞ்சல் செய்கிறது. 1990-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து இந்த அஞ்சல் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இரவு 8.30 மணிக்கு ஒளிபரப்பத் தொடங் கியது. ஒரிசா, மகாராஷ்டிரா, குஜராத், பீகார், ஆந்திரப்பிரதேசம், உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள கிராமம் மற்றும் நீண்ட தொலைவு மக்களுக்காக இன்சாட் (INSAT) செயற்கைக்கோள் மூலம் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைத் தூர்தர்ஷன் அளித்து வருகிறது. இந்த மாநிலங்களில் சக்தி மிகுந்த டிரான்ஸ்மீட்டர்கள் மூலம் செயற்கைக் கோள் நிகழ்ச்சிகள் பெறப்படுகின்றன. தேசிய நிகழ்ச்சிகள் வார நாட்களில் சுமார் 2 மணி 50 நிமிடங்களுக்கு அஞ்சல் செய்யப்படுகின்றன. வெள்ளி, சனிக்கிழமைகளில் பின்னிரவு நேரங்களில் ஹிந்தி, ஆங்கில மொழித் திரைப்படங்கள் 2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ஆம் நேதி முதல் பரிசோதனை அடிப்படையில் ஒரு வாரம் வீட்டு ஒரு வரம் நேர்நடக்கைகள் சிட்டட்டடட்பட்டன. 1980-ஆம் சில வாகலில் நாம்மால் முதல் பிற்பகல் ஒளிபரப்புத் தொடங்ழம்ை விலிருந்து பின்னர் சனிக்கிழமைகளுக்கும் அது நீட்டிக்கப்பட்டது. தற்போது வார நாட்கள் முழுவதும் பிற்பகல் ஒளிபரப்பு உண்டு ஆனால் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.15 மணி முதல் 1.30 மணி வரை காது

கேனாதோர், வாய் பேசாதோருக்கான வாராந்திரச் செய்தி அறிக்கைக்கு பின்னர் பிராந்திய திரைப்பட ஒளிபரப்புடன் பிற்பகள் ஒளிபரர்கள் துவங்குகிறது.

அனைத்து முக்கிய தொலைக்காட்சி நிலையங்களும், சிறிய நிகழ்ச்சித் தயாரிப்பு நிலையங்களும் மாலை நேரத்தில் ஒளிபரப்பைத் தொடங்கி இரவு 8.30 மணி வரை நடத்துகின்றன, அந்தந்தப் பிராந்திய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. பின்னர் தேசிய இந்திச் செய்தி அறிக்கை 8.40 மணிக்கும், ஆங்கிலச் செய்தி அறிக்கை இரவு 930 மணிக்கும் ஒளிபரப்பப்படுகின்றன. தமிழ்நாட்டில் தேசிய நிகழ்ச்சியில் இரவு 8.40 மணிக்கு ஒளிபரப்பாகும் இந்திச் செய்தி அறிக்கைக்குப் பதிலாக சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தில் தமிழ்ச் செய்திகள் ஒளி பரப்பாகின்றன.

தூர்தர்ஷன் செய்திகள்

டில்லியிலிருந்து ஒளிபரப்பாகும் இந்தி, ஆங்கிலச் செய்திகளைத் தவிரத் தற்போது நாட்டில் 14 தொலைக்காட்சி நிலையங்கள் தாங்களே நிகழ்ச்சிகளைத் தயார் செய்து செய்திகளை அஞ்சல் செய்யும் வசதிகளைப் பெற்றுள்ளன. தொலைக்காட்சிச் செய்திகளைப் பின்வருமாறு அஞ்சல் நேரத்தைப் பொறுத்து வகைப்படுத்தலாம். ஒளிபரப்பப்படுகின்றன.

செய்தி ஒளிபரப்பு (News Cast)

செய்தியை அளிக்கும் தொலைக்காட்சி பிற் தகவல் தொடர்பு சாதனங்களை விஞ்சி விடுகிறது. நேரடியாகவும் உடனடியாகவும் (live and instantaneous) செய்திகளை வழங்குவதில் தொலைக்காட்சிக்கு நிகர் எதுவுமில்லை. இதனை. 'Live' என்ற பெயரால் வழங்குகின்றனர். ஏற்கனவே' பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிய யிருப்பின் அதனை 'Recorded' என்ற பெயரிட்டு ஒளிபரப்புகின்றனர். ஒளிபரப்பாகும் செய்திக்குச் சான்றுதரும் பழைய நிகழ்ச்சிகளைக் காட்டவேண்டியிருப்பின் அதற்கு 'File' என்று பெயரிட்டு வழங்குகின்றனர். இவ்வாறு எந்தக் கோணத்திலும் செய்தியைக் 'கவர்ச்சிகரமாக' வழங்குவதில் தொலைக்காட்சி முதலிடம் வகிக்கிறது எனலாம். 1991 இல் 41 நாட்களாக சனவரி 16 முதல் பிப்ரவரி 28 வரை நடைபெற்று முடிந்த வளைகுடாப் போச்ம் செய்திகள், தொலைக்காட்சியின் நேரடியாக ஒளிபரப்பப்படும் தன்மைக்கும், உடனடியாக ஒளிபரப்பப்படும் இயல்புக்கும் தக்க சான்றுகளாகத் திகழ்கின்றன. இதற்குச் சான்றாக இன்னொரு நிகழ்ச்சியையும் இங்கு எடுத்துக்காட்டலாம்.

ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் (African National Congress) தலைவர் நெல்சன் மண்டேலா 27 ஆண்டுக்குப்பின் உலகமே எதிர்பார்த்திருக்க 11.2.90 அன்று (இந்திய நேரப்படி இரவு 8.15 மணிக்கு) விடுதலையானார். அப்போது சென்னைத் தொலைக்காட்சியில் சென்னையில் நடைபெற்ற கார்ப் பந்தயக் காட்சிகள் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தன. மண்டேலாவின் விடுதலை பற்றிய செய்தி கிடைத்ததும், கார்ப்பந்தய ஒளிபரப்பு நிறுத்தப்பட்டு காண்பவர் வியக்கும் வண்ணம், விடுதலையான மண்டேலா தன்னுடைய மனைவியுடன் கைகோர்த்து வெளியுலகில் மண்ணை முத்தமிட்டுக் காலடி

எடுத்துவைக்கும் காட்சி ஒளிபரப்பப்பட்டது. அப்போது பின்வரும் வாசகங்கள் வருணனையாக அமைந்தன:

"இவர் மண்டேலாவைக் காணக் காத்திருக்கிறார். அவரது முதல் தோற்றம் ஏறக்குறைய 3 தசாப்தங்களுக்கு முன்பு. அவர் ரகசியமாகப் படிப்படியாக நடந்து வருகிறார், மனைவியுடன் கைகோர்த்து நகர்கிறார், இப்போது கேப் டவுனுக்குச் செல்கிறார். அவர் ஒரு பேரணியில் கலந்து கொள்ளப் போகிறார். கேப் டவுனில் இதற்குப் பின்னால் மண்டேலாவின் அரசியல் வாழ்க்கை (தலைவரானது, மக்களுக்காக உழைத்தது, சிறைப்பட்டது,466 ஆம் எண் சிறையில் அடைக்கப்பட்டது, தனிமைச்சிறைக் கொடுமை. வெள்ளையரின் ஆதிக்க வெறி) தொடர்ந்து வந்த செய்தி ஒளிபரப்பில் விரிவாகக் காட்டப்பட்டது.

"தொலைக்காட்சிகள் மக்களுக்கு நெருங்கிய சாதனமாகவும் பிரமிப்பூட்டும் சாதனமாகவும் அமைந்துவிட்டது என்பதற்கு மேலும் பல காரணங்கள் உள்ளன. 2001, செப்டம்பர் 11ல் அமெரிக்காலும். நியூயார்க் நகரில் உள்ள உலசு வர்த்தக மையம் விமானங்கள். தாக்கி தகர்க்கப்பட்டதையும், அமெரிக்க விண்வெளி ங்கள். தீப்பந்தாக மாறி சாம்பாலானதையும் தொலைக்காட்சி நேர்முகமாடம், படம் பிடித்து காட்டியது. இவ்வாறு செய்தி ஒளிபரப்பில் தகவல் சாதனங்களிடையே தொலைக்காட்சி தனியிடமும், தலைமையிடமும் வதிக்கிறது. இதனால் நாளிதழ்களும், வானொலியும் தரும் செய்திகளைக் காட்டிலும் தொலைக்காட்சிச் 'செய்தி நம்பகத்தன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆளும் கட்சிகள் தமது செல்வாக்கினை அதிகரிப்பதற்குத் தொலைக்காட்சியை ஆளும் கட்சியின் பிரச்சாரச் சாதனமாகப்

பயன்படுத்துகின்றன, என்ற அச்சத்தின் காரணமாகத்தான் எதிர்க்கட்சியினர் ஊர்வலமாக வந்து தொலைக்காட்சி நிலையத்திற்கெதிரில் பலர் முன்னிலையில் தொலைக்காட்சிப், பெட்டிகளை உடைத்து நொறுக்கித் தம் அதிருப்தியை, எதிர்ப்பைத் தெரிவிக்கும் நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

தொலைக்காட்சிச் செய்தியில் இடம்பெறும் நேரடி ஒளிபரப்புகளுள் முக்கிய அரசுப்பிரநிதிகள் வருகை, குடியரசுத்தலைவர், பிரதமர் ஆகியோர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள், தலைநகரில் நடைபெறும் இந்திய அளவிலான / பன்னாட்டு அளவிலான கருத்தரங்குகள், விபத்துக்கள், முக்கிய உடன்பாடுகள் கையெழுத்தாதல், விளையாட்டுப் போட்டியின் முக்கியப் பகுதிகள் இன்னபிற அடங்கும்.

தொலைக்காட்சி அரசின் கட்டுப்பாட்டில் இயங்குவதால் செய்திகள் ஒருதலைப் பட்சமாக உள்ளன என்ற குறைபாடு உள்ளது. செய்தித்தாள், வானொலி போன்று இந்தியாவில் தொலைக்காட்சிச் செய்திகள் பெரும்பாலான மக்களைச் சென்றடைவதில்லை. ஒளிபரப்பு நேரம் குறைவாகவும் காட்சிகள் அதிகமாகவும் உள்ளதால் நாளிதழ்களைப் போல செய்திகளை 'துப்புத் துலக்கியும்' தரும் வாய்ப்பு தொலைக்காட்சிக்கும் இல்லை. மேலும் விளக்கமாகவம் வானொலிக்கும் தொலைக்காட்சியைப் பார்ப்பவர்களும் பெரும்பலோர் - குறிப்பாகப் பெண்கள் செய்தி வாசிப்பவரது கவர்ச்சியில் மூழ்கி விடுகின்றனர். செய்தி வாசிப்பவர்களும் ஒருசில நடிப்புத் தன்மைகளைச் செய்தி வாசிப்பின்போது காட்டுவதால், பார்ப்பவர்களில் பெரும்பாலோர் அவர்களது அங்க அசைவுகளலும், ஆடை

அணிகலன் சிறப்பிலும் மூழ்கி விடுகிறார்கள். செய்தி வாசிப்பவர்களும் செய்திகளின் மீது தம் முழுக்கவனத்தையும் செலுத்தாது செய்தி வாசிப்பின் போது தடுமாறுகின்றனர் என்று விமர்சகர்கள் அடிக்கடி குறை கூறுகின்றனர். இத்தகுக் குறைகள் நீங்குமாயின் தூர்தர்சன் செய்தியும் உலகத்தரம் வாய்ந்ததாகக் கருதப்படும் என்பதில் ஐயமில்லை.

தொலைக்காட்சிப் படங்கள்

தொலைக்காட்சியில் அவ்வப்பொழுது. இந்தியத் திரைப்படப்பிரிவு (Films Division) தயாரித்த செய்திப் படங்கள் (News reals), சித்திரங்கள் (Documentaries) ஆகியவை ஒளிபரப்பாகின்றன. இவை தவிர, தொலைக்காட்சி நிலையங்களே சில சித்திரங்களைத் தயாரித்து வழங்குகின்றன. இவற்றுள் சில உலகக் குறுந்திரைப்பட விழாக்களில் (Festival of Documentaries) கலந்து கொண்டு பரிசு பெற்றது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தாரால் தயாரிக்கப்பட்ட தொழுநோய் பற்றிய குறுந்திரைப்படம் இவற்றுள் குறிப்படத் தக்கதாகும். பொதுவாக, தொழில் முன்னேற்றம், மக்கட் பண்பாடு, முக்கியத் தலைவர்கள், விவசாய முன்னேற்றம், கூட்டுறவுத் துறையின் மேன்மை, பொதுநலம், அணு ஆயுதக் குறைப்பு, மனித இனநல மேம்பாடு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு போன்றவற்றை விளக்குவதற்காகக் குறுந்திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவை தேசிய அளவில் தூர்தர்சன் நிறுவனத்தாரால் தனியாகவும், சில உலக நிறுவனங்களின் கூட்டுடனும் (UNESCO, UN, BBC) தயாரிக்கப்படுவதுண்டு. பொதுவாக மக்களுக்கு அறிவுவிளக்கம் தருவதற்காகவும், மனித இன நல மேம்பாட்டிற்காகவும், நாட்டின் முன்னேற்றம் கருதியும் இவை தயாரிக்கப்படுகின்றன எனலாம்.

பேட்டி நிகழ்ச்சிகள் (Interviews)

விடுதலைப் போராட்ட வீரர்கள், அறிவியல் அறிஞர்கள். படைப்பாளிகள், கலைஞர்கள் முக்கிய அரசு விருந்தினர்கள் போன்றோரது அனுபவங்களையும் கருத்துக்களையும் மக்கள் தெரிந்து கொள்ளும் முகமாகப் பேட்டி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. தனியாக அன்றியும், வயலும் வாழ்வும், தொழிலாளர் நிகழ்ச்சி, வாழ்க்கை கல்வி, மனைமாட்சி போன்ற நிகழ்ச்சிகளிலும் அவ்வத்துறையில் வல்லவர்களைப் பேட்டி கண்டு ஒளிபரப்புவதும் உண்டு. ஹலோ உங்களுடன் என்ற நேரடித் தொலைபேசி நிகழ்ச்சியும் தற்போது தொலைக்காட்சியில் பிரபலமடைந்து வருகிறது. கலந்துரையாடல் போல் அமையும் குழுப்பேட்டிகளும் ஒளிபரப்பப்படுகின்றன். இவற்றில் மூவர் அல்லது நால்வர் கலந்து கொள்வர். முக்கியமான சமுதாயப் பிரச்சினை (வரதட்சணை, இளம் குற்றவாளிகள், சிறுவர்களை வேலைக்கு அனுப்புதல்), அரசியல் பிரச்சினைகள் (பாராளுமன்றக் கூட்டத் தொடர், அவதூறு சட்டமசோதா, Defamation Bill, அரசின் நிதி நிலை அறிக்கை, தேர்தல் முடிவுகள்) போன்றவற்றைப் பற்றியும் இவை அமையும். பத்திரிகையாளர் கூட்டமும் இதில் அடங்கும். பிரதமர் அல்லது குடியரசுத் தலைவர் வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தின் பின் தம் சுற்றுப்பயணத்தின் வெற்றியைப் பற்றி நம் நாட்டு நிருபர்களுக்கு அளிக்கும் பேட்டியும், வெளிநாட்டில் அந்நாட்டு நிருபர்களுக்கு அளிக்கும் பேட்டியும் இவற்றில் அடங்கும்.

தொலைக்காட்சித் தொடர்கள் (Serials)

மக்களை உருவாக்குகின்ற - நல்வழிப்படுத்துகின்ற நிகழ்ச்சிகளுள் முக்கிய இடம் பெறுவது தேசிய ஒளிபரப்பில் இடம்பெறும் (இரவு 9.00-9.30) தொலைக்காட்சித் தொடர்களாகும். சமய, இன ஒற்றுமையை வலியுறுத்தும் தொடர்களும், பண்பாட்டும் பெருமையை எடுத்துக்காட்டும் தொடர்களும் அடித்தள மக்களின் வாழ்க்கைப் பிரச்சிளைகளை விளக்கும் தொடர்களும், போக்கு அம்சங்கள் நிறைந்த தொடர்களும் இந்நிகழ்ச்சி இடம்பெறுகின்றன. 'Super Hit', 'Box office' என்று வெற்றியை வருணிப்பது போலத் தொலைக்காட்சித் தொடர்களைய புகழ ஆரம்பித்துள்ளனர். இத்தொடர்களுக்கு திரைப்படங்களில் இன்று 'கதாநாயக அந்தஸ்து' தரப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தொலைக்காட்சித் தொடர்களைப் பிறரோடு விமர்சித்துப் பேசுவது அன்றாட வாழ்க்கையில் ஒரு சமுதாயத் தகுதியாகக் கருதப்படுகிறது.

தொலைக்காட்சித் தொடர்களைப் பெரும்பாலும் வணிக் நிறுவனங்களே வாங்கி வெளியிடுகின்றன. இத்தொலைக்காட்சித் தொடர்களை மக்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறார்கள் என்பதையும், இத்தொடர்கள் மக்களிடம் அதிக பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன என்பதையும் பின்வரும் சான்றுகளால் அறியலாம். குறிப்பிட்ட ஒரு மதத்தினரைப் புண்படுத்துகிறது என்பதால் 'TAMAS என்ற தேசிய அலைவரிசைத்' தொலைக்காட்சித் தொடர் எதிர்ப்புக்கு உள்ளானது. இதனால் இது பாதியில் நிறுத்தப்பட்டது. (இதுபோன்றே அரசியல் காரணங்களுக்காக Chaanakya தொடரும் பாதிக்கப்பட்டது. மூடநம்பிக்கையைப் பரப்புகிறது என்று இடைக்காலத்தடை வழங்குவதற்குக் காரணமாக இருந்தது 'Hone an Hone'

என்ற தொடராகும். தற்போது Shakthiman என்ற தொடர் சிறுவரிடையே பல விபரீதங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்பதற்காக அதற்குப் பல எதிர்ப்புக் குரல்கள் எழுந்துள்ளன. இதேபோன்று பேய், ஆவி, பழிக்குப்பழிவாங்குதல் என்பவற்றை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட தேசிய அலைவரிசை இந்தி தொலைக்காட்சித் தொடர் 'நிகழ்வுகள்' என்று மொழிமாற்றம் செய்யப்பட்டு ஞாயிறுதோறும் இரவு 9.30 - 10.30 சென்னை தொலைக்காட்சியில் ஒளிபரப்பபடுவது குறிப்படத்தக்கதாகும். ஆண்டுதோறும் சிறந்த திரைப்படம், சிறந்த நடிகர், நடினக, இயக்குநர், குழந்தை நட்சத்திரம் என்று பரிசுகள் வழங்குவது போன்று தொலைக்காட்சித் தொடர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன. இவ்வகையில் தொலைக்காட்சித் தொடர்கள் திரைப்படங்களுக்குப் போட்டியாக வளர்ந்து வருகின்றன என்று கூறினால் அது மிகையாகாது.

மேலை நாடுகளில் ஒனிபரப்பப்படும் தொலைக்காட்சித் தொடர்களும் மக்களிடம் அதிகமான செல்வாக்கைப் பெற்து. வருகின்றன. அரசு தலையீடு இல்லாத தனியார் நிறுவனங்பெற்று தொலைக்காட்சி அமைப்புக்கள் செயல்பட்டு வருவதால், மேலை நாட்டின் தொலைக்காட்சித் தொடர்கள் மக்கள் கருத்தை உள்ளவாறு எதிரொலிப்பதாய் உள்ளன. இத்தகையத் தொடர்களுள் லண்டன் BBC ஒளிபரப்பும் 'Yes, Prime minister' எனும் தொடரைக் குறிப்பாகச் சொல்லலாம். மேலைநாட்டு நிறுவனங்கள் (BBC) தயாரித்து வழங்கும் தொடர்களையும் நம் நாட்டு விளம்பர நிறுவனங்கள் வாங்கி வழங்குகின்றன. இவற்றுள் 'Spiderman; Masters of the Universe', தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு ஒளிபரப்பாகின்ற 'பப்பாய் பையன்கள்' (Poppoy

Show) தொடர் வி ஆகியவை குறிப்பிடத்தக்கவை. தமிழிலும் பல தொலைக்காட்சித் தொடர்கள் ஒளிபரப்பாகின்றன என்றாலும் அம்சங்களிலும் பழகுகின்ற (amaterur) G அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

## தொலைக்காட்சி விளம்பரங்கள்

விளம்பரங்களே தொலைக்காட்சியை வாழவைக்கும் காமதேனுவாக விளங்குகின்றன. விவசாய நிகழ்ச்சி, மாதர் நிகழ்ச்சி, குழந்தைகளுக்கான நிகழ்ச்சி, தொழிலாளர் நிகழ்ச்சி, கிராம நிகழ்ச்சிகள் போன்ற எந்த நிகழ்ச்சியானாலும் விளம்பரங்கள் இடம் பெறுகின்றன. திரைப்படப் பாடல்கள் ஒளிபரப்பாகும் ஒளியும் ஒலியும், தொலைக்காட்சித் தொடர், திரைப்படம் ஆகியவை இடம்பெறும் நேரங்களில் மக்கள் வெறுப்பைத் தேடிக்கொள்ளும் அளவிற்கு விளம்பரங்கள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன.

தொலைக்காட்சியில் விளம்பரங்கள் 1976 ஆம் ஆண்டு சனவரி முதல் தேதியன்று அறிமுகமாயின. விளம்பரங்கள் வாயிலாகக் கடந்த ஆண்டுகளில் தொலைக்காட்சி அடைந்த வருவாயை ஒப்பிட்டுப் பார்த்தால், தொலைக்காட்சி வெற்றிக வாழ்வு பெற்று வருவதன் காரணம் புலனாகும்.

ஒரு நிகழ்ச்சி ஒளிபரப்புவதற்கு ஆகும் செலவை ஏற்று அவ்வொளிபரப்பில் தம் நிறுவனத்தை விளம்பரப்படுத்தும் 'செலவு ஏற்பு விளம்பரங்கள்' (sponsored) தற்போது பெருமளவில் ஒளிபரப்பாகின்றன. இம்முறை 1983 - 84 அறிமுகப்படுத்தப்பட்டது.

தொலைக்காட்சி விளம்பரக்கட்டணங்களை நிர்ணயிப்பதில் நேரம் முக்கிய இடம் வகிக்கிறது. பெரும்பாலோர் பார்க்கக்கூடிய நேரத்தை 'Prime time' என்பார்கள். விளம்பர நேரங்களை Super A,B,மற்றும் C என்று பிரித்துள்ளனர். ஒளியும் ஒலியும், திரைப்படம் போன்றவை ஒளிபரப்பாகும் நேரத்தை Super A நேரம் என்கிறார்கள். விளம்பரக் கட்டணங்களை வரையறுப்பதிலும் நகரத்திற்கு நகரம் மாறுபாடு உள்ளது.

**திரைப்படம் தோற்றம்**

மக்கள் மனதை எளிதில் மாற்றவல்ல சாதனமாகத் திரைப்படம். விளங்குகிறது. மனிதரது செயல்களும் நடவடிக்கைகளும் = திரைப்படத்தை இயக்கும் சக்திகளாக விளங்குகின்றன. இச்சக்திகளே, திரைப்படத்தைப் பார்ப்பவரை - ரசிப்பவரை இயக்கும் 21 சக்திகளாக மாற்றுகின்றன. இத்தகு விந்தைமிகு ஆற்றலைத் திரைப்படங்கள் கொண்டிருப்பதால்தான் - திரைப்படங்கள் மக்களை சிந்திக்கவிடாமல் தாம் வகுத்த பாதைக்கு இட்டுச்செல்வதால் 4 அவற்றைத் தடுக்கவேண்டும் என்ற எதிர்ப்புக் குரல்களும் இயக்கங்களும் அவ்வப்பொழுது தோன்றுகின்றன. ஆனாலும் - திரைப்படம் எனும் சக்தியை அழிக்க முடியவில்லை. இன்றைய நிலையில் ஒரு சமுதாயத்தை 'ஆக்குவதும் திரைப்படம்;' 'அழிப்பதும் திரைப்படம்' என்று கூறலாம். அந்த அளவிற்கு மக்கள் மனதில் தாக்கத்தை ஏற்படத்திவிட்ட ஆற்றலாகத் திரைப்படம் விளங்குகிறது.

திரைப்படத்தைப் பார்ப்பவர், திரையில் நடமாடும் பாத்திரங்களோடு ஒன்றிவிடுகிறார். 'தான்' அவராகவே மாறிவிடுகிறார். இயல்பு வாழ்க்கையில் தான் காணமுடியாததை அடையமுடியாததைத் திரைப்படத்தில் காண்பதாகவும், அடைவதாகவும் நினைத்து மகிழ்கிறார். தன்னுடைய

இலட்சியக் கனவுகளுக்கெல்லாம் திரைப்படம் இடம் கொடுப்பதாக எண்ணி இன்புறுகிறார். இவ்வாறு திரைப்பட அனுபவமும், ரசிப்பவரின் உணர்வும் பிரிக்க முடியாதவாறு இணைந்துவிடுகின்றன. இதனால் திரைப்படத்தைச் சமுதாயத்திலிருந்து பிரித்து எண்ண முடிவதில்லை.

இத்தகு ஆற்றல்பெற்ற திரைப்படத்தை முதன்முதலில் திரையில் இாட்டும் முயற்சியைத் தொடங்கி வைத்தவர் ரெய்னாடு (1877) என்ற பிரெஞ்சு நாட்டவராவார்.

இந்தியாவில் திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதற்கு முன்பாகவே திரையரங்குகள் உருவாகத் தொடங்கிவிட்டன. இந்தியாவின் முதல் திரையரங்கு 1907 இல் கல்கத்தாவில் உருவாகியது. இதற்குப் பின்னால் ஐந்து வருடங்கள் கழித்துதான் முதல் இந்தியத் திரைப்படமான 'ராஜா ஹரிச்சந்திரா' (Raja Harischandra : 1912) தயாரிக்கப்பட்டது. இப்படத்தைத் தயாரித்தவர் திரு. டி.ஜி. பால்கே என்பவராவார். 'இந்தியத் திரைப்படத்துறையின் தந்தை' என்று பாராட்டப்படும் இவருடைய பெயரால் திரைப்படத்துறையில் போற்றுதற்குரிய சேவை புரிந்த ஒருவருக்கு ஆண்டுதோறும் விருது ஒன்றை (பால்கே விருது) இந்திய அரசு அளித்து வருகிறது.

முதல் திரைப்படத்திற்குப் பின்னர் சுமார் 20 ஆண்டுகள் கழித்தே பேசும் திரைப்படம் (Alam Ara : 1931) தயாரிக்கப்பட்டது. 'பேசும் திரைப்படம்' என்றாலும் இது 'பாடும் திரைப்படமாக இருந்தது. இப்படத்தில் 22 பாடல்கள் இடம்பெற்றிருந்தன. இன்றும் கூட இந்நிலை தொடர்வது குறிப்பிடத்தக்கது.

1999 இல் வெளிவந்த 'மோனிசா என் மோனலிசா' 'திரைப்படத்தில் 13 பாடல்கள் இருந்தனவாம்!. அன்றுமுதல் இன்றளவும் உலக அரங்கில் இந்தியத் திரைப்படத்துறை தனக்கெனவொரு தனியிடத்தைப் பெற்று முன்னணியில் நிற்கிறது. இத்திரைப்படத் தொழில் செல்வம் கொழிக்கும் துறையாக வளர்ந்து வருகிறது. இந்தியத் திரைப்படத் துறையை வளர்த்தவர்களில் சாந்தாராம், பிமல்ராய், சத்யஜித்ரே, கே. பாலச்சந்தர், பாரதிராஜா போன்ற இயக்குநர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இவர்கள் திரைப்படத்தின் நுவல் பொருளிலும், கலைநுணுக்கத்திலும் புதிய அணுகுமுறைகளைக் கையாண்டு, இந்தியத் திரைப்படங்களை சர்வதேச அளவிற்கு வளர்த்துக் காட்டியவர்கள் ஆவர். ஒவ்வோர் ஆண்டும் உலகம். முழுவதுள்ள நாடுகள் சுமார் 3000 திரைப்படங்களைத் தயாரிக்கின்றன.

### திரைப்பட வகைகள்

- அதிரடி படங்கள்
- நகைச்சுவைகள்
- காதல் படங்கள்
- ரோம்-காம்ஸ்
- சாகச படங்கள்
- இசைக்கருவிகள்
- நாடகங்கள்
- கால படங்கள் அல்லது வரலாற்று நாடகங்கள் (மற்றொரு வரலாற்று நேரத்தில் அமைக்கப்பட்ட திரைப்படங்கள்)
- நிஜ வாழ்க்கை திரைப்படங்கள்
- போர் திரைப்படங்கள்
- திகில் படங்கள்
- அறிவியல் புனைகதை (எஸ்சி-ஃபை அல்லது எஸ்.எஃப்)

திரைப்பட வகைகள் என்பது ஒரு உணர்ச்சிபூர்வமான அழகியல் அணுகுமுறை கதை கூறுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு இயக்க பட

வகையாகும். இது இலக்கிய வகை விமர்சனத்தின் கோட்பாடுகளிலிருந்து பெரிதும் ஈர்க்கப்பட்ட திரைப்பட வகைகள் பொதுவாக மரபுகள், கதாபாத்திரங்கள் மற்றும் நடிகர்களால் வரையறுக்கப்படுகின்றன.

வகை என்பது திரைப்படத்தின் வகையையோ அல்லது அதன் வகையையோ மட்டும் குறிக்கவில்லை; ஒரு படம் குறித்த பார்வையாளர் எதிர்பார்ப்புகள் மற்றும் பொதுவான கட்டமைப்புகளை உருவாக்கும் நிறுவன சொற்பொழிவுகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. பெரும்பாலும் தமிழ் திரைப்படங்கள் குடும்பம், அதிரடி, காதல், நகைச்சுவை போன்ற வகைகளை கொண்டு தயாரிக்கப்படுகின்றன.

இந்தியாவில்தான் அதிக அளவில் (557) திரைப்படங்கள் தயாராகின்றன. ஜப்பான் (337), பிரான்சு (222), இத்தாலி (165) ஆகிய நாடுகளிலும் அதிக அளவில் திரைப்படங்கள் தயாராகின்றன. (1990 ஆம் ஆண்டின் கணக்கின்படி) திரைப்படங்கள் தவிரப் பிறபடங்களும் இந்தியாவில் தயாராகின்றன. அவை வருமாறு:

1. குழந்தையர் படங்கள் (Children's film)
2. செய்திப்படங்கள் (News reels)
3. செய்தி விளக்கப்படங்கள் (Documentories)
4. விளம்பரப்படங்கள் (Advertisement Films)

5. தொலைக்காட்சிப் படங்கள். (T.V. film)

குழந்தையர் படங்கள்

1948 இல் ஏற்படுத்தப்பட்ட இந்தியத் திரைப்படப் பிரிவின் ஒரு பகுதியாக 1955 முதல் குழந்தையர் படச்சங்கம் (Children's) Film Society, India) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. குழந்தைகளுக்கென கார்ட்டூன் படங்கள், நல்லொழுக்கக் கதைப்படங்கள் இவற்றைச் சொந்தமாகத் தயாரித்து வெளியிடுவதுடன் பிறமொழிப் படங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து அவற்றை மொழிமாற்றம் (Dubbing) செய்தும் இந்நிறுவனம் வெளியிடுகிறது. புகழ்பெற்ற நடிகர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள், கல்வியாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் இச்சங்கத்தின் உறுப்பினர்களாக விளங்குகின்றனர்.

செய்திப்படங்கள்

இந்தச் சங்கத்தின் வாயிலாகத் தயாரிக்கப்படும் படங்கள் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பப்படுகின்றன. இரண்டாம் உலகப்போரின்போது செய்திப் படங்களின் அவசியத்தை உணர்ந்த ஆங்கிலேய அரசு Fiims Advisory Board என்ற அமைப்பைத் தொடங்கியது. பின்னர் இதுவே Information Films of India (IFI) என்று பெயர்மாற்றம் பெற்றது. இதன்மூலம் தயாரிக்கப்பட்ட செய்தித் தொகுப்புகள் 'Indian News Parade என்று பெயரிடப்பட்டன.

பெரும்பான்மையான மக்களை கவர்ந்திழுக்கும் சாதனமாவு = திரைப்படம் திகழ்வதால், மக்களுக்கு நாட்டு நடப்புகள் அவ்வப்பொழுது தெரிய வேண்டும் என்ற நோக்கில் இந்தியத் திரைப்படப் பிரிவினர்

தயாரிக்கும் செய்திப் திரையரங்குகளில் காட்டப்படுகின்றன. இவற்றைக் கட்டாயமாகத் திரைப்படத்திற்கு முன்னர்த் திரையிட வேண்டும் என்ற சட்டம் உள்ளது. வெளிநாட்டுப் பிரமுகர்கள் வருகை, ஒப்பந்தங்கள் கையெழுத்தாதல், அரசு நிகழ்ச்சிகள், விளையாட்டுச் செய்திகள் விபத்து, வெள்ளம், வறட்சி போன்றவைகளின் தொகுப்புகள் செய்தி படங்களில் : (News magazine) இடம்பெறுகின்றன. இந்தியத் திரைப்படப்பிரிவு ஏற்படுத்தப்பட்ட 1948 ஆண்டிலேயே முதல் இந்தியசெய்திப் படம் (Indian News Review: INR) வெளியாயிற்று முதலில் தயாரிக்கப்பட்ட ஆறு செய்திப்படங்களும் இந்தி மொழியில் மட்டுமே அமைந்தன. பின்னர் 13 செய்திப்படங்கள் இந்தியிலும் ஆங்கிலத்திலும் தயாரிக்கப்பட்டன. இதன்பின்னர் தயாரிக்கப்பட்ட செய்திப் படங்கள் இந்தி, ஆங்கிலம், தமிழ், வங்காளம், தெலுங்கு ஆகிய ஐந்து மொழிகளில் அமைந்தன.

இந்தியத் திரைப்பட நிறுவனம்,வாரம் ஒரு செய்திப்படத்தைத் தயாரித்து வெளியிடுகிறது. இப்படங்களைக் காட்டுவதற்காகத் திரையரங்குகளிடமிருந்து வாடகையும் வசூலிக்கப்படுகிறது. இவ்வாறு வாடகை மூலமாகவும், வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலமாகவும் இந்தியத் திரைப்படநிறுவனத்திற்கு 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நவம்பர் முடிய உள்ள எட்டு மாதங்களில் மட்டும் ரூ. 725.72 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது.

செய்தி விளக்கப்படங்கள்

இந்தியா சுதந்திரம் பெற்றபிறகு அதன் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் வரலாற்றுநோக்கில் ஆராய்வதற்கு இந்தியத் திரைப்படப் பிரிவின் செய்திப்படங்கள் பெருந்துணை புரிகின்றன. தொடக்கக் காலத்தில் (1949 -50) ஓராண்டிற்கு 32 கறுப்பு வெள்ளைப்படங்களும், 52 செய்திப் படங்களும் 12 செய்தி விளக்கப்படங்களும் இந்தியத் திரைப்படத் துறையினரால் தயாரித்து வெளியிடப்பட்டன. இன்று உலகின் மிகப்பெரிய திரைப்படத் தயாரிப்பு நிறுவனமாக இது விளங்குகிறது. ஆண்டுக்கு 125 செய்தி விளக்கப்படங்களை இந்நிறுவனம் தயாரித்து வழங்குகிறது. இச்செய்திப்படங்கள் ஆண்டுதோறும் 13,183 அரங்குகளில் சிரையிடப்படுகிறது என்றும், இதனால் சுமார் பதினைந்து கோடி மக்கள் பயனுறுகின்றனர் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. திரையரங்குகளில் மட்டுமின்றி, இச்செய்தி விளக்கப்படங்கள் அவ்வப்பொழுது தொலைக்காட்சியிலும் காட்டப்படுகின்றன. படங்கள். 88 ஆம் ஆண்டில் மட்டும் 210 செய்தி விளக்கப்படங்கள் காட்டப்பெற்றுள்ளன.

இந்தியத் திரைப்படப்பிரிவினர் தனியார் நிறுவனங்கள் வாயிலாகவும் செய்திப்படங்களைத் தயாரித்து வெளியிடுகின்றனர். பிற நிறுவனங்களுக்காகவும் படங்களைத் தயாரித்துத் தருகின்றனர். 1988-89 ஆண்டுகளில் தயாரிக்கப்பெற்ற செய்தி விளக்கப்படங்கள் Chacha Nehru,. The Voice of Indira Gandhi, Raj Kapoor in Remembrance, Parent Teacher - Better Education, Melody of Monsoon, Story of Tippu, Agony of Ganga, Road to Friendship போன்றவை குறிப்பிடத்தக்கவைகளாகும்.

இந்தியாவில் இன்று பெரிதும் வலியுறுத்தப்படுகின்ற சமயப் பொறை, சகோதர உணர்வு, சுதந்திரதாகம், சமயத்துவம், தீண்டாமை ஒழிப்பு, வரதட்சணை ஒழிப்பு, கிராம நலம், தாய் சேய் நலம், பெண்ணுரிமை ஆகியவற்றை மக்களிடையே பரப்புவதற்குச் சக்தி வாய்ந்த சாதனங்களாக இந்தியச் செய்தி விளக்கப் படங்கள் விளங்குகின்றன. இந்தியத் தலைவர்களைப் பற்றிய செய்தி விளக்கப்படங்களையும் இந்நிறுவனம் தயாரித்து வழங்குகிறது. இதனால் தலைவர்களது செயலாற்றல்களையும், தியாக வாழ்க்கையையும் மக்களுக்கு எடுத்துக்காட்டும் நல்வழிச் சாதனமாகவும் செய்திப்படங்கள் விளங்குகின்றன. அண்மைக் காலத்தில் இவ்வாறு தயாரிக்கப்பட்ட படங்களுள் கோவிந் வல்லப் பந்த், சரோஜினி நாயுடு, பாபு ஜெகஜீவன் ராம். வி.கே. கிருஷ்ணமேனன்; பாபா சாகேப் அம்பேத்கர், கே.எம். முன்ஷி, சர்தார் வல்லபாய் படேல் ஆகியோர் பற்றிய படங்கள் குறிப்பிடத்தக்கனவாகும்.

இந்தியாவில் நீண்ட திரைப்படங்கள் முன்னரேயே துண்டுச் செய்திப்படங்கள் திரையிடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். திரைப்படங்களின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அமைந்தன எனலாம். காங்கிரஸ் மாநாடுகள், தேசியக் தலைவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள், சத்தியாகிரகப் போராட்டம். ஆர்ப்பாட்டங்கள் அந்நியத்துணி பகிஷ்கரிப்பு, ஊர்வலங்கள், என்பை பற்றி ஆரம்பகாலத் துண்டுச் செய்திப் படங்கள் திரைப்படங்களைத், தயாரித்த நிறுவனங்களே படங்களையும் தயாரித்து அளித்தன. திரைப்படங்கள் திரையிடம் படுவதற்கு முன்னால் இச்செய்திப் படங்கள் காண்பிக்கப்பட்டன. சான்றாக. Bomay Talkies தயாரித்த திரைப்படம் எங்கெங்கு திரையிடப்படுகிறதோ, அங்கெல்லாம் அந்நிறுவனம் தயாரித்த

செய்திப்படங்கள் திரையிடப்படும். தயாரிக்கப்பட்டன. இச்செய்திப் தயாரிக்கப்படுவதற்கு தயாரித்துத் அடிப்படையாக இவை

திரைப்படத் தணிக்கைத் துறை (Central Board of Film Certification)

1952 இல் ஏற்படுத்தப்பட்ட இந்தியத் திரைப்படச் சட்டத்தின் அடிப்படையில் இத்துறை பம்பாயைத் தலைமையகமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.திரைப்படங்கள் அதிகமாகத் தயாரிக்கப்படும் சென்னை, கொல்கத்தா, பெங்களூர், திருவனந்தபுரம், ஹைதராபாத் ஆகிய நகரங்களில் இத்தணிக்கைத் துறையின் கிளை நிலையங்கள் உள்ளன். இத்துறையின் உறுப்பினர்களாகக் கல்வியாளர்கள், விமர்சகர்கள், இதழாளர்கள், சமூகப் பணியாளர்கள், மருத்துவர்கள். வழக்கறிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் மைய அரசினால் நியமிக்கப்படுகின்றனர்.

இத்தணிக்கைத் துறையினர் எழுப்பும் தடைகளுக்கு மேல் முறையீடு செய்வதற்குத் தில்லியைத் தலைமையகமாகக் கொண்ட திரைப்படத்தணிக்கை மேல்முறையீட்டு மன்றம் (Film Certification Appellate Tribunal). ஒன்று. 1984 இல் அமைக்கப்பெற்றது. திரைப்படங்கள் வன்முறையைத் தூண்டும் வகையிலும், ஆபாசக் காட்சிகள் இல்லாமலும் குறிப்பிட்ட மதத்தினரையோ, வகுப்பினரையோ புண்படுத்தாமல் அமையவேண்டும் என்பது

திரைப்படத் தணிக்கைத் துறையின் நோக்கங்களாகும். ஆனால் வன்முறைக் காட்சிகள் எவை? ஆபாசக்காட்சிகள் எவை? என்பதை வரையறுப்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. இக்கருத்து வேறுபாடுகளே

தணிக்கைத் துறையினர் மீது எதிர்ப்புணர்வை வளர்த்து வருகின்றன. தணிக்கைக்கு உட்படும் திரைப்படங்களுக்கு, U, US, SA, என்று சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

அனைவரும் பார்ப்பதற்குரிய திரைப்படத்திற்கு (Unrestricted Public Exhibition) "U" வகைச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. 12 வயதுக்கு மேற்பட்டோர் மட்டும் பார்ப்பதற்குரிய திரைப்படத்திற்கு (Adults only) "A" ഖக் சான்றிதழ் தரப்படுகிறது. 12 வயதுக்குட்பட்டோர் தமது பெற்றோர்களுடன் வந்து பார்ப்பதற்கு அனுமதிக்கப்படும் படங்களுக்கு. (Unrestricted exhibition subject to parental guidane) UA என்று சான்றளிக்கப்படுகிறது. குறிப்பிட்ட சில பார்வையாளர்களுக்காகத் (மருத்துவர்கள், காவல்துறையினர், வழக்கறிஞர்கள்) திரையிடப்படும் படங்களுக்கு 'S' (Specialized) audience) வகைச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

1988 ஆம் ஆண்டில் தணிக்கைக்குட்படுத்தப்பட்ட திரைப்படங்களில் இந்திமொழி முதலிடம் வகிக்கிறது. அம்மொழியில் 182 திரைப்படங்கள் தணிக்கை செய்யப்பெற்று சான்றிதழ் வழங்கப் பெற்றது. அதற்கடுத்த நிலையில் தெலுங்கில் 162 படங்களும் தமிழில் 152 படங்களும் தணிக்கை செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தேசியப் படச்சுருள் காப்பகம் (National Film Archive of India (NAFAI)

இந்தியத் திரைப்படத் துறையின் வளர்ச்சியையும் வரலாற்றையும் காலந்தோறும் காத்துவரும் பொருட்டு இப்படச்சுருள் காப்பகம் 1964இல் நிறுவப்பெற்றது. காப்பகத்திற்கு கொல்கத்தா, திருவனந்தபுரம், பெங்களூர்

ஆகிய நகரங்களில் வட்டார மையங்கள் உள்ளன. இதன் தலைமையகம் புனேயில் உள்ளது. இக்காப்பகம் முழுவதும் குளிர்சாதன வசதி உள்ளது. படச்சுருள்களை நீண்ட காலத்திற்குப் ..பராமரிப்பதற்கான செய்ப்பட்டுள்ளது. 1988ம் தட்பநிலை ஏற்பாடு ஆண்டுவரை இங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ளவற்றின் விவரம் வருமாறு:

படச்சுருள்கள்

ஒளிப்பேழைகள்

திரைப்படத் துறை பற்றிய நூல்கள்*

திரைப்படத் துறை பற்றிய பருவ இதழ்கள்

திரைப்பட உரையாடல்கள்

பத்திரிகைச் செய்திகள்

திரைப்படப் பாட்டுப் புத்தகங்கள்

இசைத்தட்டுக்கள்

ஒலிப்பேழைகள்

நுண்படச் சுருள்கள்

காட்சிவில்லைகள் (Slides)

தேசிய திரைப்பட மேம்பாட்டு நிறுவனம் (National Film Development Corporation: NFDC)

இந்தியத் திரைப்படங்களின் மேம்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் நெடுங்காலமாகத் திரைப்பட நிதி நிறுவனமும் (Film Finance Corporation:FFC)

இந்திய இயங்கு படங்கள் ஏற்றுமதி நிறுவனமும் (Indian Motion Pictures Export Corporation) @ வந்தன. 1980 இல் இவ்விரு நிறுவனங்களையும் இந்திய அரசு உருவாக்கியது. இந்நிறுவனத்தின் தலையாய பணிகள் வருமாறு:

1.திரைப்படங்கள் தயாரிக்க நிதி வழங்குதல் (Film Finance)

2. திரையரங்குகள் கட்ட நிதி நல்குதல் (Theatre Financing)

3. வெளிநாட்டுப் படங்களை இறக்குமதி செய்து தரல் (Import

& Distribution of Technology)

4. இந்தியப்படங்களை ஏற்றுமதி செய்தல் (Export of Indian Films)

5. வெளிநாட்டுத் தொழில் நுட்பங்களைத் திரைப்படத் துறையினர்க்குப் பெற்றுத்தருதல் (Bringing in and Development of Technology)

6. வட்டாரத் திரைப்பட விழாக்கள் நடத்துதல் (Reginal Film Festivals).

7. திரைப்பட ஒளிப்பேழைகளைத் தயாரித்து விற்பனை செய்தல்

8. திரைப்பட இதழ்கள் வெளியிடல் (Film Journals)

9. படத்துறை பற்றிய தகவல்களைப் பதிவு செய்தல் (Documentation of Film Information / Library).

தேசிய பட நூலகத்தை நிறுவிப் பராமரித்தல் (Maintanence of National Film Information).

11. ஆய்வும் வளர்ச்சிப் பணிகள் (Research and Development).

வினாக்கள்

1.தொலைக்காட்சி வரலாறு குறித்து விளக்குக.

2.செயற்கைக்கோள் வழி ஒளிபரப்பு பற்றி எழுதுக.

3.சைட், கல்வி ஒளிபரப்பு குறித்து கட்டுரை வரைக.

4.தொலைக்காட்சி படங்கள்,தொடர்கள் குறித்து விளக்குக.

5.திரைப்படத் தோற்றம் குறித்து விளக்குக.

6.திரைப்பட தணிக்கைத்துறையின் முக்கியத்துவத்தை எழுதுக.

பார்வை நூல்கள்


1. இராசா.கி., தகவல் தொடர்பியல், பாரதிதாசன் பதிப்பகம், திருச்சி.
2. கிருட்டிணசாமி,தகவல் தொடர்பியல்
3. குருசாமி.மா.பா., இதழியல் கலை, வண்ணன் வெளியீடு, திருச்செந்தூர்.
4. கோதண்டபாணி.இரா. இதழியல், கற்பகம் வெளியீடு, மதுரை. 1997



முனைவர்ஆ.உஷா.,

உதவிப்பேராசிரியர்,

தமிழியல் துறை,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி,

9790381487

ushaskv23@gmail.com